www.tamilarangam.net

# உயிர்ப்பு

1

மாசி 1992

# UYIRPPU

தேசிய இனப்பிரச்சனையும் மார்க்சிய நிலைப்பாடு
– இ. சொரூபன் –

எதிரிகளும் நண்பர்களும் – க. அரவிந் –

முஸ்லிம் மக்கள் தொடர்பாக சில குறிப்புகள்
– ச.கிறிஸ்தோபர் –

தேசிய சக்தி பற்றி சில பிரச்சனைகள் – ஏகலைவன் –

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உங்களுடன் நாம் ............

பல புதிய நம்பிக்கைகளுடன் எதிர்பார்ப்புகளுடன் தொடங்கிய தமிழ் மக் களின் தேசிய விடுதலைப்போராட்டமானது இன்று தனக்குத் தானே சிறைப்பட்டுக் கொண்டு இலக்கை மறந்து நிற்கிறது. புதிய விடியலைக் காண புறப்பட்டவர்கள் இருந்த அற்ப சுதந்திரத்தையும் தொலைத்து விட்டதைக் கண்டு செய்வதறியாது தவிக்கிறார்கள். முற்போக்கான ஜனநாயகக் கருத்துக்களை கொண்ட சமூக உணர்வுள்ள பலர் விடுதலை அமைப்புக்களால் கொல்லப்பட்டு விட்டார்கள். அல்லது இவர்களது சிறைகளில் வாடுகிறார்கள். அல்லது தமது தாயகத்திற்கு வெளியில் அகதிகளாக சிதறிப்போயுள்ளார்கள். யுத்தத்தின் தீவிரத்தில் ஒரு இளம்தலைமுறையே தமது யுத்த நோக்கம் பற்றிய உணர்வேயின்றி பீரங்கிக்குத் தீனியாகிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு காலத்தில் உலகெங்கிலும் உள்ள ஒடுக்கப்பட்ட மக்களுக்கு நம்பிக்கை சுடராகத் திகழ்ந்து அவர்களது போராட்டத்திற்கு வழிகாட்டிய கொம்யூனிஸ்ட இயக்கம் முதலில் திரிபுற்று பின்பு அதனையும் உதிர்த்துவிட்டு நிற்கும் நிலையில் மார்க்சியம் தோற்றுப்போனதாகவும் புதிய உலக ஒழுங்கை ஏற்படுத்துவது பற்றியும் ஏகாதிபத்தியம் பீற்றிக்கொண்டே தனது இராணுவசாகசங்களைத் தொடர்கிறது. இது உலகெங்கிலும் உள்ள சுரண்டப் பட்ட ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டத்தில் ஏற்படுத்தும் தாக்கம் சிறிதல்ல.

இப்படிப்பட்ட ஒரு பலவீனமான தேசிய சர்வ தேசிய சூழலில் தான் *உயிர்ப்பு* உங்களை நோக்கி வருகிறது. இன்றுள்ள தேக்க நிலையை உடை த்துக் கொண்டு மக்களின் விடுதலையை அடைவதற்கான வழியில் பலகடுமையான பணிகள் காத்திருக்கின்றன. அதில் முதல் பணியாக எமது போராட்டத்தில் சம்பந்தப்பட்ட பல்வேறு தத்துவார்த்த அரசியல் பிரச்சினைகளையும் விரிவாக விவாதித்து தீர்வு காண்பது என்பது இருக்கிறது. இந்த பணியில் *உயிர்ப்பு* பெறும் வெற்றியும் இதற்கு சமூக உணர்வும் கொண்டோரிடையே கிடைக்கும் ஆதரவையும் பொறுத்து அடுத்தடுத்த பணிகளை நோக்கி முன்னேறுவது சாத்தியப்படும் இந்தப் பணிகளில் அக்கறையுடைய ஒவ்வொருவரையும் நோக்கி *உயிர்ப்பு* தனது கரங்களை நீட்டுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேசிய இனப்பிரச்சினையில் மார்க்சிய நிலைப்பாடு

## முன்னுரை

பல்வேறு தத்துவ முரண்பாடுகளில் தமக்குள் முட்டி மோதிக் கொண்டிருக்கும் இடதுசாரியினர் எல்லோருமே தேசிய இனப்பிரச்சினை குறித்து தமது நிலைப்பாட்டிற்கு லெனினின் 'தேசிய இனப்பிரச்சினை பற்றிய விமர்சனக் குறிப்புக்கள் (லெனின் நூல்திரட்டு தொகுதி 27 1913 ஒக்டோபர்) தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை (1919 மே, லெனின் நூல் திரட்டு தொகுதி 25) சோசலிசப் புரட்சியும் தேசிய இனங்களின் சுயநிர்னய உரிமையும் -ஆய்வுரைகள் 1916 ஜனவரி (லெ.நூ.தி.தொகுதி30) என்பவற்றிலிருந்து மேற்கோள் காட்டத் தவறுவதில்லை அந்தளவிற்கு இவை தேசிய இனப்பிரச்சினை குறித் மார்க்சிய நிலைப்பாட்டிற்கு முக்கியமானவைகளாக விளங்குகின்றன. அதே சமயம் இலங்கை தேசிய இனப்பிரச்சினை குறித்த நிலைப்பாட்டில் இடதுசாரிகள் வெற்றிபெறவில்லை என்பதும் பொதுவான உண்மையாக உணரப்பட்டு வருகிறது. இன்று மார்க்சிய புத்திஜீவிகளுக்கிடையே தேசிய இனப்பிரச்சினை குறித்து ஆரோக்கியமான விவாதம் முடுக்கி விடப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கதே. கடந்தகால நிகழ்கால தேசிய இனப்பிரச்சினை குறித்த நிலைப்பாடுகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு வருகின்றன.இவ்விடத்தில் லெனினின் மேற்படி அறிக்கைகளை புரிந்து கொண்ட விதத்தில் உள்ள குறைபாடுகள் இந்த தவறுக்கு எந்த வகையில் காரணமாக இருந்துள்ளன எனக் கண்டறிவதே இக் கட்டுரையின் நோக்கம்.

## அறிக்கைகளின் பொதுவான, குறிப்பான நோக்கம்

தேசிய இனங்கள் முதலாளித்துவ வளர்ச்சியினூடாக தோற்றுவிக்கப்பட்டவை. முதலாளித்துவ வளர்ச்சி காலகட்ட பொதுவான நிலமை குறிப்பாக சூழ்நிலைக்களுக்கேற்ப தேசிய இனப்பிரச்சினையும் அதற்கான . மார்க்சிய வேலைத்திட்டமும் வேறுபடும். லெனின் முதலாளித்துவ வளர்ச்சி தேசிய இனப்பிரச்சினையில் ஏற்படுத்தும் வரலாற்றுப்போக்குகளை பின்வருமாறு விளக்கினார். வளர்ந்து செல்லும் முதலாளித்துவமானது தேசிய இனப்பிரச்சினையில் இரண்டு வரலாற்றுப்போக்கினை அறிந்திருக்கிறது. ஒன்று தேசிய இனவாழ்க்கையும் தேசிய இயக்கங்களும் துயிலெழுதலும் எல்லாவிதமான தேசிய இன ஒடுக்கு முறைக்கு எதிராய் போராட்டம் மூழ்தலும் தேசிய இன அரசுகள் அமைக்கப்படுதலும் இரண்டாவது எல்லா வடிவங்களிலும் தேசியஇனங்களுக்கிடையே ஒட்டுறவு வளர்ந்து மேலும் மேலும் துரிதமாதலும் தேசிய இனப்பிரிவினை சுவர்கள் தகர்க்கப்படுதலும் மூலதனத்தில் பொதுவாகப் பொருளாதார வாழ்வில் அரசியல் விஞ்ஞானம் முதலானவற்றின் சர்வதேச ஒற்றுமை உண்டாக்கப்படுதலும்

இவ்விரு போக்குகளும் முதலாளித்துவத்திற்குரிய உலகு தழுவிய விதியாகும். முன்னது முதலாளித்துவ வளர்ச்சியில் ஆரம்பத்தில் ஆதிக்க நிலையில் உள்ளது பின்னது முதிர்ச்சியடைந்து சோசலிச சமுதாயமாக உருமாற்றம் பெறுவதை நோக்கிச் செல்லுகின்ற முதலாளித்துவத்தின் இயல் பினை வெளிப்படுத்துவதாகும். மார்க்சியவாதிகளை தேசிய வேலைத்திட்டம் இவ்விரு போக்குகளையும் கணக்கில் எடுத்துக் கொண்டு பின்வருவனவற்றிற் காக பாடுபடுகிறது. முதலாவது தேசிய இனங்களின் மொழிகளின் சமத்துவத்திற்காகவும் இங்கு எவ்விதமான தனியுரிமைகளும் அனுமதிக்கப்படலாகாது என்பதற்காகவும் (மற்றும் தேசிய இனங்களின் சுயநிர்னய உரிமைக்காகவும்)இரண்டாவதாக சர்வதேசிய வாதம்



எனும் கோட்பாட்டிற்காகவும் பூர்ஸ்வா தேசிய வாதத்தால் மிகமிக நயமானதாலும் கூட பாட்டாளிவர்க்கம் நசுக்கப்படுவதை எதிர்த்து இணக்கத்திற்கு இடமில்லாப் போராட்டம் நடத்தவேண்டும் என்பதற்காகவும்

லெனின் தேசிய இனப்பிரச்சினை குறித்து நாடுகளை மூன்றாக வகைப்படுத்தினார். முதலாவது மேற்கு ஐரோப்பாவும் அமெரிக்காவும், இரண்டாவது கிழக்கு ஐரோப்பா,ஆஸ்தியா,பால்கன் நாடுகள் குறிப்பாக ருஸ்யா மூன்றாவது; அரைக்காலனிநாடுகளும் காலனிநாடுகளுமாகும். லெனின் முன்வைத்த வேலைத்திட்டம் இவ்மூவகை நாடுகளையும் உள்ளடக்கிய பொதுவான ஒன்றல்ல. இந்நூற்றாண்டில் ஆரம்பத்தின் நிகழ்வாக இருந்த இரண்டாம் வகை நாடுகளுக்கானதாகவே இருந்தது இந் நாடுகளின் சோசலிச வேலைத்திட்டத்தில் தேசிய இனப்பிரச்சினை விடயமாக சுயநிர்ணய உரிமை பற்றி பிரதானமாக லெனின் வலியுறுத்தினார் ஆனால் மேற்கு ஐரோப்பிய தேசிய இனப்பிரச்சினைக்கு மார்க்கஸ் அவ்வாறானதொரு வேலைத்திட்டத்தை முன்வைக்கவில்லை ஏனெனில் மேற்கு ஐரோப்பாவில் தேசிய இனப்பிரச்சினை மிக சுலபமாக தீர்க்கக் கூடியதாக இருந்ததால் அந்த தேவை எழவில்லை.

இவ்வறிக்கைகள் பொதுவாக இரண்டாம்வகை நாடுகள் பற்றியதாயினும் குறிப்பாக ருஸ்யாவின் அக்கால கட்ட நிலமைகளை கருத்தில் கொண்டு வெளியிடப்பட்டதாகும் ருஸ்யாவில் இக்காலகட்டம் பூர்ஸ்வா தேசியவாதத் தின் செல்வாக்கு கட்சியை பாதிக்கும் அளவிற்கு மோசமானதாக இருந்தது. குறிப்பான இந்நிலைமையில் இருந்து கட்சியை மீட்டெடுக்கும் நோக்கமும் இவ்வறிக்கைகளை ஆதிக்கம் செலுத்தியுள்ளது

## 1ம், 2ம் வகை நாடுகளின் (ஐரோப்பிய) தேசிய இனப்பிரச்சினையின் சாராம்சம்

முதலாளித்துவத்தின் பிறப்பு நிலப்பிரபுத்துவ தளைகளுள் சிக்குண்டிருந்த மக்களை தேசிய இனம் என்னும் புதியதொரு பரிமாணத்திற்கு இட்டுச் சென்றது.கிராமிய எல்லைக்குள் இருந்த சுயதேவை பொருளாதாரம் தகர்ந்து பொதுச் சந்தை என்ற பரந்த பிரதேசத்தில் மக்களை ஒன்று கலக்கச் செய்யும் பொருளாதார நடவடிக்கையை தொடர்ந்து இது ஏற்பட்டது. வரலாற்றில் முதலாளித்துவத்தின் பிறப்பு முதன்முதலில் மேற்கு ஐரோப்பாவிலேயே ஆரம்பமானதால் தேசிய இனங்களும் முதன்முதலில் அங்கேயே தோன்றின. மேற்கு ஐரோப்பாவில் தேசிய இயக்கங்களின் போக்கு தேசிய அரசுகளை தோற்றுவிக்கும் சிக்கலற்ற நடைமுறையாக அமைந்தது.பெரும்பாலும் இந்நாடுகளின் தேசிய அரசுகள் (அயர்லாந்து தவிர) ஒரே தேசிய அரசுகளாகவே அமைந்தன. இதற்கு பின்வருவன துணையாயிற்று.

அ) தேசிய இயக்கங்கள் நிலப்பிரபுவத்திற்கு எதிரான ஜனநாயக போராட்டங்களின் தொடர்ச்சியாக இருந்தன.

ஆ) இவை தேசிய அரசுகளாக முன்பே நிலப்பிரபுத்துவ அரசர்களின் கீழ் ஒரே அமைப்பிற்குள் ஒரே நாடாக இருந்தன.

ஆனால் கிழக்கைரோப்பிய நிலைமை இதிலிருந்து சிறிது மாறுபட்டவைகளாக இருந்தன. ஆஸ்திரியா, ஹங்கேரியா பேரசுகளின் வீழ்ச்சியை தொடர்ந்து சிதறுண்ட தேசிய இனங்கள் ஏற்கனவே தேசிய அரசுகளாக நிலைபெற்றுவிட்ட மேற்கு ஐரோப்பிய பெரிய தேசிய அரசுகளில் இருந்து தம்மை பாதுகாப்பதற்காக பல்தேசிய அரசுகளாக தம்மை உருவாக்கி கொள்ள முனைந்தன. இந்தப் பின்னணியிலேயே கிழக்கு ஐரோப்பிய தேசிய இனப்பிரச்சினை அமைந்திருந்தது. இங்கு பல்தேசிய இனஅரசுகள் உருப்பெறுவது சுலபமான நடைமுறையாக இருக்கவில்லை. இத்தேசிய இனங்களுக்கிடையிலான பரஸ்பர சந்தேகம்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவநம்பிக்கை போன்றன தேசிய அரசுகளின் உருவாக்கத்தைச் சிக்கலாக்கியது. இந்தச் சிக்கல் பூர்ஸ்வா ஜனநாயகப்புரட்சியை நிறைவு செய்வதில் தடைகளை ஏற்படுத்தியதோடு பாட்டாளிவர்க்கசோசலிச புரட்சிக்கும் குந்தகமான போக்குகளுக்கும் வித்திட்டமையால் மார்க்சிய வேலைத்திட்டம் தேசிய இனப்பிரச்சினை குறித்து கவனம் செலுத்தவேண்டியதாயிற்று மேற்கு ஐரோப்பிய அனுபவங்களில் இருந்து (மார்க்ஸ், எங்கெல்சின் போலாந்து ஐரிஸ் பிரச்சினைகளின் நிலைப்பாடுகள்) கிழக்கு ஐரோப்பாவின் புதிய நிலைமைக்கு ஏற்ப லெனின் தேசிய இனப்பிரச்சினை குறித்து நிலைப்பாட்டை முன்வைத்த போது கிழக்கை ரோப்பிய தேசிய இயக்கங்களின் முதலாளித்துவ தலமைகள் மேற்கு ஐரோப்பாவினை போன்று தமது முற்போக்கு பாத்திரத்தை இழக்காமல் இருந்தன என்பதை நினைவுப்படுத்துவது அவசியம். இத்தேசிய இயக்கங்கள் பூர்ஸ்வா ஜனநாயகப்புரட்சியை நிறைவு செய்யும் ஆற்றலில் எவ்வகையிலும் பின்தங்கியவைகளாக இருக்கவில்லை.

## தேசிய இனப்பிரச்சினைக்கு லெனின் முன்வைத்த நிலைப்பாடுகள்

அ) தேசிய இனப்பிரச்சினையினை முதலாளித்துவ சக்திகளின் நலன்களுக்கிடையிலான போராட்டத்தின் உள்ளடக்கைக் கொண்டவை தேசிய இயக்கங்கள் ஜனநாயகப்புரட்சியை நிறைவு செய்யும் வகையிலேயே தமக்குள் மோதிக் கொள்கின்றன.பாட்டாளிவர்க்கம் இம் மோதலில் கலந்து கொள்வது அதனை முதலாளித்துவ தேசியவாதத்திற்கு வீழ்த்துவதாகவே இருக்கும். ஆகவே பாட்டாளி வர்க்கம் தேசிய இனப்பிரச்சினையில் நேரடியாக தலையிடாது ஒதுங்கியிருக்கும். சோசலிசப் புரட்சியும் பாட்டாளி வர்க்க ஐக்கியமுமே பாட்டாளி வர்க்க இலட்சியமாகும். இவ்விலட்சியத்திற்கு சாதகமான நிலை ஏற்படும் வகையிலேயே தேசிய இனப்பிரச்சினை குறித்த நிலைப்பாட்டை எடுக்கும்.

ஆ) தேசிய இன ஒடுக்கு முறையே தேசிய இனப்பிரச்சினையின் அம்சங்களுக்குமே பிரதான காரணியாக இருக்கிறது. ஆகவே எல்லா ஒடுக்கு முறைக்கும் எதிரான போராட்டத்தை ஆதரிப்பது அவசியம்.

இ) தேசிய இனங்கள் பரஸ்பர நம்பிக்கையில் இணைந்து தேசிய அரசுகளை சாத்தியமான வகையில் பரந்து பட்ட அளவில் உருவாக்குவது வர்க்கப் போராட்டத்தின் வளர்ச்சிக்கு சாதகமாகும். தேசிய இனங்களின் ஐக்கியத்திற்கும் தேசிய அரசுகளின் உறுதிப்பாட்டிற்கும் எல்லா தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தனிஅரசு அமைக்கும் சுதந்திரத்தை அங்கீரிப்பது அவசியமாகும்.

ஈ) எல்லா தேசிய இனங்களின் சமத்துவத்தை பாட்டாளி வர்க்கம் கோரும் அது எந்த ஒரு தேசிய இனத்தின் விசேட சலுகைகளுக்கும் எதிரானது

உ) ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் சகல கோரிக்கைகளையும் ஆதரிக்கவேண்டும் என்பதில்லை வர்க்க போராட்டத்திற்கு உகந்த நிலைமைகளை ஏற்படுத்தும் போராட்டங்களை மட்டும் ஆதரிக்கும்.

மேற்படி நிலைப்பாடு யாவும் தேசிய அரசுகளின் உருவாக்கம் வெற்றிகரமாக நடைபெற்று ஜனநாயகப் புரட்சியை நிறைவு செய்ய வேண்டும் எனும் நோக்கில் முன்வைக்கப்பட்டவைகளாகும்.ஜனநாயக புரட்சி செவ்வனே நிறைவேற்றப்படாவிடின் பாட்டாளிவர்க்கம் சோசலிச ப்புரட்சியை முன்னெடுப்பதில் பல சிக்கல்களை எதிர் நோக்க நேரிடும். கிழக்கைரோப்பிய தேசியவினப்பிரச்சினையில் முதலாளித்துவ தேசிய இயக்கங்கள் ஜனநாயகப் புரட்சியை நிறைவுக்கு கொண்டுவரக்கூடிய தகமையில் இருந்தமையால் பாட்டாளிவர்க்கம் அதில் தலையிடாது தேசிய வாதத்தில் இருந்து



பாட்டாளிவர்க்கத்தை மீட்டெடுத்து சர்வதேச பாட்டாளிவர்க்க ஐக்கிய உணவினை உறுதிப்படுத்தும் வேலைத்திட்டத்தையே முன்வைத்தது. இங்கு பாட்டாளி வர்க்கத்தின் பணி தேசிய இனப்பிரச்சினையை முன்னெடுப்பதாக இல்லாமல் பின்னிருந்து வழிநடத்துவதாக மட்டுமே இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை

இலங்கையின் தேசிய இயக்கத்தின் தோற்றத்தை இந்நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே காணமுடிகிறது. மிகவும் பின்தங்கிய ஒரு காலனித்துவ நாட்டில் உள்நாட்டு முதலாளிவர்க்கம் மிகவும் பலவீனமானதா? ஏகாதிபத்தியத்தை சார்ந்தே செயற்பட்டுக் கொண்டிருக்கும் நிலையிலேயே தேசிய இயக்கங்கள் தோற்றம் பெறுகின்றன. முதலாளியின் பலவீனமும் ஏகாதிபத்தியத்தின் சார்பும் தேசிய இயக்கத்தை ஆரம்ப முதலே ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வு கொண்டதாக அல்லாமல் ஏனைய இனங்களை பகைமையுடன் பார்க்கும் நிலைமையை ஏற்படுத்தியது. ஐரோப்பாவில் நடந்தது போன்று ஏனைய தேசிய இனங்களையும் அரவணைத்து இனங்களின் சமத்துவ அடிப்படையில் தேசிய அரசை உருவாக்குவனவாக அல்லாமல் ஏகாதிபத்திய சார்பும் இனவெறியும் கொண்டனவாக செயற்பட்டன.

தேசிய இனங்களின் எழுச்சி ஜனநாயகத்திற்கான போராட்டம் போன்றவற்றின் விளைவாக அல்லாமல் 2ம் உலக யுத்தத்தின் பின்பு ஏற்பட்ட சர்வதேசிய நிலைமைகளின் மாற்றத்தின் காரணமாக இலங்கை சுதந்திர மடைந்தது. இச்சுதந்திரமானது இலங்கைக்கு தேசிய அரசு எனும் தோற்றத்தைக் கொடுத்த போதிலும் இது ஜனநாயப் புரட்சியை முடிவுக்கு கொண்டு வந்து விடவோ அல்லது தேசிய இனங்களின் சுயவிருப்பு பரஸ்பர நம்பிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் எழுந்ததோ அல்ல. இலங்கையின் தேசிய அரசு என்பது ஏகாதிபத்தியத்தின் உருவாக்கமாகும். சுதந்திரத்தின் போது ஆட்சி அதிகாரம் சிங்களத்தரகு முதலாளிக்கு கைமாறியது. ஏனைய சிறுபான்மை இனங்களைப் பொறுத்தவரையில் இந்த தேசிய அரசு என்பது ஒரு பலவந்தப் படுத்தப்பட்ட வடிவமே ஆகும். இலங்கையின் குறைவிருத்தி பொருளாதாரமும் முற்றுப் பெறாத ஜனநாயகப் புரட்சியுமே இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு முக்கிய காரணமாகும். தேசிய இயக்கத்தை தலமை தாங்கியமுதலாளித்துவத்தின் சக்திகளின் பலவீனம் காரணமாகவே தேசிய இயக்கங்களின் செயற்பாடு ஜனநாயகப் புரட்சியை நிறைவு செய்வதை நோக்கி முன்னேற முடியவில்லை.இலங்கையின் புரட்சியை முன்னெடுக்க முனையும் ஒவ்வொரு சக்தியும் இலங்கையின் இந்த குறிப்பான தன்மையை கருத்திற்கு எடுக்கத் தவறக்கூடாது.

இலங்கையில் கடந்த காலத்தில் செயற்பட்ட இடது சாரிக் கட்சிகள் இலங்கையின் இந்த குறிப்பான தன்மையை புரிந்து கொள்ளவில்லை. இலங்கையின் சுசுதந்திரத்தை தேசிய அரசின் முழுமையாகக் கண்ட இவர்கள் இலங்கையில் ஜனநாயகப் புரட்சி முற்றுப்பெறாது இருப்பதை புரிந்து கொள்ளவில்லை ஆரம்பத்தில் தேசிய இனப்பிரச்சினையே ஒரு பொருட்டாக கருதாத போதிலும் தேசிய இனப்பிரச்சினை கூர்மை அடைந்து விட்ட கட்டத்தில் இவர் கள் தேசிய இனப்பிரச்சினைக்கு தமது திட்டத்தில் இடம் அளித்தாலும் தேசிய இனப்பிரச்சினையை இவர்கள் ஜனநாயகப் புரட்சியின் குறைபாடாக இனம் காணத் தவறினார்கள். இவர்களைப் பொறுத்தவரையில் ஜனநாயகப் புரட்சி என்பது 1948 இல் முற்றுப் பெற்றுவிட்டதாகவும் இலங்கை சோசலிசப் புரட்சிக்கான தேவையில் இருப்பதாகவும் கருதினர். இங்கு வளர்ந்து வரும் தேசிய இனப்பிரச்சினை என்பது சோசலிசப் புரட்சியை தடுக்க சிறுபான்மை இனபிற்போக்கு முதலாளித்துவ தேசிய இயக்கங்கள் தட்டியெழுப்பும் எதிர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புரட்சிகர நடவடிக்கைகளாகவே கருதினர். இத்தேசிய இயக்கங்களின் பிற்போக்கு பூர்ஸ்வா தன்மைகளைக் காட்டி பாட்டாளி வர்க்கத்தை எச்சரித்தனர். இந்தத் தேசிய இயக்கங்களின் போராட்டங்களில் இருந்து ஜனநாயகப்புரட்சியின் தேவையை இனம் கண்டு முன்னெடுக்கத் தவறினர்.

ஐரோப்பிய தேசிய இயக்கங்களின் மோதலில் முதலாளித்துவ தேசியியக்கங்கள் முற்போக்கு பாத்திரம் வகித்த காலகட்டத்தில் லெனின் முன்வைத்த அதே நிலைப்பாடுகளை இங்கும் திரும்பத் திரும்ப கூறினர். ஐரோப்பாவில் தேசிய இயக்கங்கள் முற்போக்கு பாத்திரம் வகித்த முதலாளி வர்க்கத்தின் கைகளில் ஒப்படைத்து விட்டு பாட்டாளிவர்க்கம் ஒதுங்கியிருந்ததன்மூலம் தேசிய இனங்களுக்கிடையிலான சமத்துவத்தினை அடிப்படையில் தேசிய அரசுகளை நிறுவி ஜனநாயகப் புரட்சியை நிறைவு செய்வதில் வெற்றி கண்டன. அத்துடன் முதலாளித்துவ தேசிய வாதத்தில் பாட்டாளி வர்க்கம் விழாமலும் பார்த்துக் கொண்டது. ஆனால் இலங்கையில் முற்போக்கு பாத்திரத்தை வகிக்காத தரகு முதலாளி வர்க்கத்தின் கைகளில் தேசிய இயக்கத்தை பாட்டாளி வர்க்கம் ஒப்படைத்ததானது பாதகமான விளைவையே ஏற்படுத்தியது. தேசிய இயக்கங்களுக்கு தலைமை தாங்கிய தரகு முதலாளி வர்க்கம் ஐரோப்பிய நாடுகளில் முதலாளிவர்க்கம் வகித்தது போன்று முற்போக்கு பாத்திரம் உடையவை அல்ல. இவை ஏகாதிபத்திய சார்புப் பிற்போக்கு ஊட்டம் பெற்று ஏனைய இனங்களை பகைக்கும் தன்மையையும் பெற்று விளங்கியதால் இடதுசாரிகளின் இந்த நிலைப்பாடு பிற்போக்கு தரகு முதலாளித்துவ சக்திகளுக்கே வாய்ப்பானதாக ஆனது.

இலங்கையில் 1948 இன் சுதந்திரத்திற்கு முன்பும் சுதந்திரத்தின் பின்பும் அரசியலில் யு.என்.பிக்கு எதிரான பலமான சக்திகளாக இடது சாரிகளே விளங்கினர். 1953 ஹர்த்தாலின் வெற்றி இவர்கள் பலத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாகும். ஆயினும் 1956 இல் இன்னோர் முதலாளித்துவ கட்சியான ஸ்ரீ.ல.சு.க ஆட்சிக்கு வந்து இடது சாரியினரை பின்தள்ளினர். பிரிட்டிஸ் காலத்தில் நலிவுற்றிருந்த சிங்கள தேசிய இனத்தின் அபிலாசைகளை புரிந்து கொண்டு அதனை ஏகாதிபத்தியத்திற்கு எதிராக திருப்பாமல் ஏனைய இனங்களுக்கெதிராக திருப்பும் கொள்கைக்கூடாக ஸ்ரீ.ல.சு.க முன்னணிக்கு வந்ததும், இடதுசாரியினர் இந்நாட்டு மக்களின் தேசிய அபிலாசைகளை புரிந்து கொண்டு அவற்றை நிறைவேற்றுவதன் மூலம் இனங்களுக்கிடையிலான சமத்துவத்தை நிலைநாட்டி இனவாதத்தில் இருந்து பாட்டாளிவர்க்கத்தை மீட்டிருக்க முடியும். இடதுசாரிகள் தேசிய இனப்பிரச்சினையில் முன்னெடுத்து பணிபுரியத் தவறியதால் யு.என்.பியும் ஸ்ரீ.ல.சு.க.யும் அதிகாரத்திற்கு வரும் போட்டியில் இனவாதத்தை இஷ்டம் போல் பாவிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

இடதுசாரிகளின் இந்நிலைப்பாடு பெரும்பான்மை தேசிய இனம் குறித்து மாத்திரமின்றி,ஒடுக்கப்படும் இனங்கள் குறித்தும் அமைந்தன. சிறுபான்மையினருக்கு எதிரான ஒடுக்குமுறைகளை அவர்கள் கண்டிக்கத் தவறிய சந்தர்ப்பங்கள் அநேகம் உண்டு. சிலவற்றை இவர்களே முன்னின்று நடத்தியுள்ளார்கள். ஆரம்பத்தில் தேசிய இனப்பிரச்சினை என்று ஒன்றில்லை. அது தமிழரசுக் கட்சியின் பொய்மை, இலங்கையில் பொருளாதாரப் பிரச்சினை மட்டுமே உண்டு என்று வாதிட்டார்கள். பின்பு தேசிய இனப்பிரச்சினையில் உள்ள உக்கிரத்தால் அதனை எற்றுக்கொண்டார்கள். சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்போம் என்று மேம்போக்காக கூறினர். ஆனால் அதற்கான நடைமுறைத்திட்டங்களை முன்வைக்கவில்லை இந்த அலட்சியத்திற்கு தேசிய இனப்பிரச்சினைக்கு உரியமுக்கியத்துவம் அளித்து அதனை தாமே கையாள வேண்டும், என்ற கடமையை உணராமையே அடிப்படையாகும்.



இலங்கையில் இடதுசாரிகளின் வேலைத்திட்டத்திலுள்ள இந்த அடிப்படைத் தவறுகட்கு ,லெனினின் மேற்படி ஆய்வுரைகளை மாறிவரும் சூழ்நிலைக்கேற்ப புரிந்துகொண்டு அதனை வளர்த்துச் செல்வதை விடுத்து அப்படியே பின்பற்ற முனைந்தமையே காரணம் என்பது வேதனைமிக்க உண்மையாகும். எமது நாட்டின் தேசிய இனப்பிரச்சினையை முதலாளித்துவ தேசிய இயக்கங்களை முன்னெடுக்கவிட்டுவிட்டு பாட்டாளிவர்க்கம் அதில் தலையிடாது ஒதுங்கியிருந்து, நடுநிலை வகிக்கும் நிலைப்பாட்டை முன்வைத்திருக்கக்கூடாது. ஏனெனில் தரகு முதலாளிவர்க்கம் தேசிய இயக்கங்களை வெற்றிகரமாக கையாளும் திராணியற்றது. அவர்களிடம் முற்போக்கான பாத்திரம் கிடையாது. ஆகையால் பாட்டாளிவர்க்கம் தானே ஜனநாயகப் புரட்சியை முன்னெடுக்கும் இன்றைய காலகட்டத்தில் தேசிய இனப்பிரச்சினையை ஜனநாயகப்புரட்சியின் கடமைகளுள் ஒன்றாக கருதி தானே கையிலெடுத்திருக்க வேண்டும்.

அண்மைக்காலத்தில் இடது சாரிகள் எல்லோரும் தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமையுண்டு என்பதை ஒப்புக் கொள்கிறார்கள். ஆனால் தமிழீழ பிரிவினைப் போராட்டத்தை ஆதரிக்க முடியாதென்று கூடவே சேர்த்துக் கொள்வதன் மூலம் தமது பழைய போக்கை கைவிடாது இருப்பதை வெளிப்படுத்தி வருகின்றன. தமது நிலைப்பாட்டிற்கு அவர்கள் முன்வைக்கும் காரணம் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்வது என்பது தமிழ் மக்களின் பிரிவினைப் போராட்டத்தை அங்கீகரிப்பது என்று பொருளாகாது. தமிழ் மக்களின் பிரிவினைப் போராட்டம் பிற்போக்கு சக்திகளின் போராட்டமாகவே உள்ளது. பிற் போக்கு சக்திகளின் போராட்டத்தை மார்க்சிச வாதிகளுக்கு உடன்பாடானதல்ல.

ஒரு இனப் பிரிவினைப் போராட்டத்தை முன்னெடுக்கக்கூடிய சாத்தியமான நிலைமைகள் என் லெனின் சுட்டிக்காட்டியதிலும் பார்க்க அதிகமாகவே தமிழ் மக்கள் பிரிவினைப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கான நியாயங்கள் உண்டு. இந்த நியாயங்கள் சரியானவை என்று கண்ட பின்பு அந்த போராட்டத்தை எந்த சக்திகள் முன்னெடுக்கின்றன என்ற தேடலுக்கூடாக அதை ஆதரிப்பதா இல்லையா என்று முடிவு செய்வதல்ல பாட்டாளி வர்க்கத்தின் இன்றைய கடமை. இவ்விடத்தில் சுயநிர்ணய உரிமை பற்றிய விவாதத்தில் 'பிற்போக்கு வாதிகள் பெரும்பான்மையாக இருந்தால் நாம் என்ன செய்வது ?' என்ற கேள்விக்கு லெனின் அளித்த பதிலின் மூலம் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்கு வழங்கப்பட்ட விரிவான அர்த்தத்தை புரிந்து கொள்ளலாம். ஜனநாயகமுறையிலான வாக்களிப்பினால் பிற்போக்குவாதிகள் பெரும்பான்மையாக இருந்தால் கீழ்கண்ட இரண்டில் ஒன்று நடக்கக்கூடும்.ஒன்று பிற்போக்குவாதிகளினால் முடிவு அமுலாக்கப்பட்டு,அதன் தீய விளைவுகளினால் மக்கள் ஜனநாயகத்தை நோக்கியும் பிற்போக்குவாதிகளுக்கு எதிராகவும் அநேகமாகச் சென்றுவிடுவார்கள். அல்லது ஜனநாயகத்திற்கும் பிற்போக்கிற்கும் இடையிலான பேராட்டம் ஒரு உள்நாட்டு போர் அல்லது வேறு ஒரு போரினால் முடிவு கட்டப்படும் - ஜனநாயகத்தின் கீழ்கூட இது மிகவும் சாத்தியம்.

சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தனி அரசு அமைக்கும் போராட்டத்தை பிற்போக்குசக்திகள் முன்னின்று நடத்தினாலும், விரைவில் மக்கள் பிற்போக்கில் இருந்து விலகிவிடும் வாய்ப்பு உண்டென்பதில் லெனின் நம்பிக்கை கொள்கிறார். பிற்போக்கு சக்திகள் முன்னெடுத்தாலும் அந்த இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதற்கு அவர் தயங்கவில்லை. பிற்போக்கு தலமையை காரணம் காட்டி அம்மக்களின் உரிமையை நிலைநாட்டுவதற்கு நிபந்தனை விதிக்கவில்லை.

ஆனால் இலங்கையில் தமிழ் மக்களின் பிரிவினைப் போராட்டத்தை ஆதரிக்க மறுக்கும் சில மார்க்சியவாதிகள் கூறும் காரணங்கள் லெனினால்

www.tamilarangam.net

முதலாளித்துவதேசிய இயக்கங்கள் தேசிய இனப்பிரச்சினையை புரட்சிகரமாக கையாளக்கூடிய சாத்தியக்கூறுகள் இருந்த காலகட்டத்தில் முன்வைக்கப்பட்ட நிலைப்பாடுகளை சூழ்நிலை மாற்றம் கருதாது அப்படியே பின்பற்றுவதாக அமைகிறது. பிரிவினைப்போராட்டம் புரட்சிகரமாக இருந்தால் மட்டுமே ஆதரவு வழங்க வேண்டும், நிபந்தனையுடன் மட்டுமே ஆதரிக்கவேண்டும் என்ற நிலைப்பாடுகள் யாவுமே பாட்டாளி வர்க்கம் தேசிய இனப்பிரச்சினையில் நடுநிலை வகித்து முதலாளித்துவ சக்தியின் வசம் அதனை கையளித்த காலகட்டத்திற்கு மட்டுமே பொருத்தமானதாகும்.

இன்றைய நிலையில் பாட்டாளிவர்க்கத்தின் கடமை தேசிய இனப்பிரச்சினை விடயத்தில் மேலும் விரிவானதாகும். முதலாளித்துவ சக்திகள் அதனை முன்னெடுக்க அனுமதித்து ஒதுங்கியிருந்த நிலைப்பாட்டிற்கு மாறாக அது தானே தேசிய இனப்பிரச்சினையை முகம் கொடுக்க கடமைப்பட்டிருக்கிறது. இவ்விடத்தில்பாட்டாளிவர்க்கத்தின் பணி இரண்டு விதமாக அமையும். ஒடுக்கப்படும் இனம் பாட்டாளி வர்கத்தைப் பொறுத்தவரை சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தனியரசு அமைக்கும் போராட்டத்தை முதலாளித்துவ தலைமையின் வசம் விட்டுவிடாமல் அதனைத் தானே கையகப்படுத்த வேண்டும். பாட்டாளிவர்க்கம் தானே பிரிவினைப் போராட்டத்தை புரட்சிகரமாக முன்னெடுத்து பிற்போக்கு முதலாளித்துவ தலைமைகளை தனிமைப்படுத்த வேண்டும். மறுபுறம் ஒடுக்கும் இனப் பாட்டாளிவர்கத்தைப் பொறுத்தவரையில் ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து அம்மக்கள் புரட்சிகரமாக பிரிவினைப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கு ஓர் உந்து சக்தியாக விளங்கவேண்டும் . பிரிவினைப் போராட்டத்தில் உள்ள பிற்போக்கான அம்சங்களை நிராகரிக்கும் அதேசமயம் அப்போராட்டத்தை புரட்சிகரமாக முன்னெடுக் கும் வகையில் அதை நெறிப்படுத்த அதற்கு முழு ஆதரவு வழங்க வேண்டும்.

ஜனநாயகப் புரட்சிக்கு பாட்டாளிவர்க்கம் தலைமை தாங்கும் இன்றைய காலகட்டத்தில் தேசிய இனப்பிரச்சினையை ஜனநாயகப்புரட்சியின் ஒரு அம்சமாக கருதிக் கொண்டு செயற்படும் இலங்கை பாட்டாளி வர்க்கத்தின் நிலைப்பாடு இவ்விதமே அமைய வேண்டும். அப்படியாக அல்லாமல் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்கிறோம் ஆனால் பிரிவினைப் போராட்டத்தை ஆதரிக்க் மாட்டோம் என்பதோ, அல்லது தமிழ் மக்களின் பிரிவினைப் போராட்டத்தை ஆதரிக்கிறோம் ஆனால் அதில் பங்கு கொள்ளமாட்டோம் ஏனெனில் நாம் மார்க்சியவாதிகள்; பாட்டாளிவர்க்கத்திற்கு பணிபுரிபவர்கள்; நாம் எந்தவகையிலும் தேசிய அபிலாசைகளுக்குட்பட்டு தேசிய இனப்போராட்டங்களில் பங்கு கொள்ள மாட்டோம் என்பதோ பழைய பாணியில் தேசிய இனப்பிரச்சினையை முதலாளித்துவ இயக்கத்திடம் கையளித்துவிட்டு ஒதுங்கியிருக்கும் நிலைப்பாடே அன்றி வேறல்ல. தேசிய இனப்பிரச்சினையில் இவர்கள் புதிய நிலைப்பாடுடையவர்கள் என காண்பித்துக் கொண்டு தமிழ் மக்கள் பால் என்னதான் அனுதாபம் காட்டினாலும், அரசின் இன ஒடுக்கு முறைகளை கண்டிப்பார்களாயினும் தேசியஇனப்போராட்டத்தில் வழிகாட்டும் முன்னணிப்பாத்திரம் ஏற்க வேண்டும் என்ற கடமையை உணராத வரை இவர்கள் நிலைப்பாடு வேடிக்கையானதாகவே அமையும்.

தேசிய இயக்கங்கள் இலங்கையில் மிகவும் பிற்போக்கானவைகளாக மாறியுள்ளமை தெளிவான உண்மை. இவை இனவெறியும் ஏகாதிபத்திய சார்பும் ஜனநாயக விரோத போக்கும் உடையவை. மார்க்சியவாதிகள் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் நியாயமானதொரு பிரிவினைப் போராட்டத்தை முன்னெடுக்காமல் ஒதுங்கியிருந்தால் அதைப் பிற்போக்கு சக்திகள் குரூரமான முறையில் முன்னெடுப்பது தவிர்க்கப்பட முடியாததாகிவிடும். பின்பு பிற்போக்குசக்திகளே இதனை முன்னெடுக்கிறார்கள்; இவை புரட்சிகரமாக முன்னெடுக்கப்படவில்லை, எனக் குற்றம் சாட்டி தாம் அப்போராட்டத்தை ஆதரிப்பதோ,பங்குபற்றுவதோ முடியாது எனக்கூறுவது அபத்தமானது. இப்போராட்டம் பிற்போக்கு முதலாளித்துவ தேசியவாதிகளின் கரங்களுக்குச் சென்றதற்கு மார்க்சியவாதிகள் இக்கடமைப்பொறுப்பெடுக்காமையே பிரதான காரணமாகும். இப்போராட்டம் புரட்சிகரமாக முன்னெடுக்கப்பட்டாலேயே ஆதரிப்போம் என்பவர்கள், இதனை புரட்சிகரமாக முன்னெடுக்க பாட்டாளிவர்க்கத்தைத் தவிர யாரால் முடியும்என்ற கேள்விக்கு விடைகூற வேண்டியவர்களாவர்.

மார்க்சியவாதிகள் தாம்வாழும் சமூகநிலைமையை சரியாக மதிப்பிடவும் மாறிவிட்ட சூழ்நிலைமைகளுக்கு ஏற்ப கோட்பாடுகளை வளர்த்துச் செல்லவும் கூடியவர்களாக இருப்பது அவசியம். மாறாக மாறிவிட்ட சூழ்நிலைகளை கருத்திற்கெடுக்காது மேற்கோள்களை திரும்பத்திரும்ப வரட்டுத்தனமாக ஒப்புவிப்பதன் மூலம் இவர்கள் தமது வரலாற்றுக்கடமையை ஆற்றத் தவறுவதோடு இனவாதத்திற்கு பலியாகிப்போய்விட்ட தமது கடந்தகால வரலாற்றை மறைக்க முனைகிறார்கள்.இந்த வரட்டுத்தனத்திலிருந்து விடும்போதே தத்துவம் தனது உயிர்ப்பாற்றலை மீண்டும் பெறும்; செயலுக்கான உண்மையான வழிகாட்டியாக மிளிரும்.

*இ. சொரூபன்*





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எதிரிகளும் நண்பர்களும்

கடந்த காலங்களில் தமிழீழ விடுதலைப் போராட்டமானது பல திருப்பு முனைகளை கடந்து வந்துள்ளது. ஒவ்வொரு திருப்பத்திலும் யுத்தத்தில் சம்பந்தப்பட்டுள்ள அணிகளின் சேர்க்கையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. மாறிவிட்ட சூழ் நிலைகளில் யுத்தம் தொடர்பான தமது நிலைப்பாட்டை வகுத்துக் கொள்வதிலும் அணிசேர்க்கைகளை புரிந்து கொள்வதிலும் பல்வேறு பிரச்சினைகள் தோன்றுகின்றன.

யுத்தத்தில் சம்பந்தப்பட்ட அணிகளை தலைமை தாங்கும் நபர்களது தனிப்பட்ட குணநலங்கள் தத்தமது சொந்த விருப்பு வெறுப்புகள் என்பனவற்றின் அடிப்படையில் யுத்தம் தொடர்பான தமது நிலைப்பாடுகளை உருவாக்கும் கண்ணோட்டம் பலரியமும் ஒங்கியுள்ளதை காணமுடிகிறது. புலிகளின் பாசிசம் ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் ஜனநாயகத்தன்மை, ஜே.ஆர்கள் முட்டாள் தனம் பிரேமதாசா பேச்சுவார்த்தையில் காட்டும் நாட்டம் ராஜீவின் புதிய அணுமுறைகள், நாபா பழுக இனிமையானவர் முற்போக்கு எண்ணம் கொண்டவர் தேவா அமைப்பினுள் ஜனநாயகத்திற்காக போராடியவர் பிரபாகரன் முரட்டுத்தனமானவர் கல்வியறிவு அற்றவர்.... இப்படியாக பலவித தனிப்பட்ட குணநலன்கள் அடிப்படையிலான விளக்கங்களுடன் அரசியல் நிலைப்பாடுகள் மேற்கொள்ளப் படுகின்றன. ஒவ்வொரு அணிகளில் இருந்தவர்களும் தமது நிலைப்பாடுகளுக்கு நியாயங்களைக் கற்பித்தார்கள். ஆனால் வரலாறு ஆனது இவர்களது விருப்பு வெறுப்புக்களையும் நியாயப்படுத்தல்களையும் பற்றிய தனது தீர்ப்புக்களை ஈவிரக்கமற்றமுறையில் எழுதிச் செல்கிறது. பயன்படுத்த முனைந்தவர்கள் பயன்பட்டுப் போனதையும் அழிக்க முனைந்தவர்கள் அழிக்கப்பட்டு விட்டதையும் காண்கிறோம். ஆனால் இன்று வரையில் பலர் இந்த வரலாற்று படிப்பினைகளில் இருந்து பாடம் கற்றுக் கொள்ளாமல் இதே பாணியில் தமது நிலைப்பாடுகளை மேற்கொள்கிறார்கள். நடவடிக்கைகளில் இறங்குகிறார்கள். அப்படியாயின் இந்த கணிப்புகளில் குறைபாடு என்ன என்பது கண்டறியப் படவேண்டியது அவசர தேவையாகிறது.

இயற்கையும் சமூகமும் தனிப்பட்ட மனித மனத்திற்கு வெளியே இருந்து அவனது விருப்பு வெறுப்பை சாராது இயங்கிக் கொண்டிருப்பதாகும் இப்படியாகத் தனது மனதை சாராது மனத்திற்கு புறத்தே நிகழும் ஒரு இயக்கத்தை புரிந்து கொள்வதாயின் ஒருவர் இந்த நிகழ்வுகளை தனது விருப்பு வெறுப்புக்களை சாராது நிலையாக வைத்து மதிப்பிட முயல வேண்டும் அப்போது தான் அந்த புறநிலை இயக்கத்தின் அடிப்படை முரண்பாடுகளையும் அந்த இயக்கத்தின் விதிகளையும் பிரிந்து கொள்ள முடியும். இந்த புரிதலில் ஏற்படும் வெற்றியே அந்த நிகழ்வின் வெற்றிகரமான முறையில் தலையீடு செய்வதையும் சாத்தியப்படும். மாறாக சொந்த விருப்பு வெறுப்புக்களை தனிப்பட்டவரது குணநலங்களை அடிப்படையாக வைத்து ஒரு நிகழ்வை அணுகுவது அகநிலை கண்ணோட்டமாகும். இந்த அணுகு முறை புறநிலை நிகழ்வுகளை புரிந்து கொள்ள பயன்படாது மட்டுமல்ல திரும்பதிரும்ப தவறுகளை இளைப்பதற்கே இட்டுச் செல்லும்.

இவ்வாறு குறிப்பிடுவதன் மூலம் நாம் தனிப்பட்ட நபர்களுக்கு அவர்களது குணநலங்களுக்கு வரலாற்றில் எந்த பாத்திரமும் கிடையாது என்று கூறவில்லை. மாறாக தீர்க்கமான அம்சம் புறநிலையதார்த்தமே என்பதையே வலியுறுத்துகிறோம். புறநிலை யதார்த்தத்தை புரிந்து கொண்டு அதற்கேற்ப தனது நடவடிக்கைகளை வடிவமைக்கும் திறன் என்ற அளவிலேயே தனிப்பட்ட நபர்களும் அவர்களது குணநலங்களும் முக்கியத்துவம் பெறுகின்றன. புறநிலை யதார்த்தத்தை புரிந்து கொள்வதில் தவறிழைத்து விட்டால் எவ்வளவு தான் உயர்வான குணநலங்களைக் கொண்டவராக ஒருவர் இருப்பினும் அவரது நடவடிக்கைகள் தவறானதாகவே அமைந்து விடுகின்றன. இவ்வாறே புறநிலை யதார்த்தத்தை புரிந்து கொள்ளும் திறன் உள்ள ஒருவரது குணநலங்களில் பல குறைபாடுகள் இருப்பினும் கூட அந்த நிகழ்வுகளில் அவர் முன்னனியில் திகழ்வது குறுகியகாலத்திற்காவது தவிர்க்க முடியாததாகிறது. அகவே எந்த ஒரு சமூக நிகழ்வையும் புறநிலையாக வைத்து அரசியல் ரீதியாக புரிந்து கொள்ள முயல வேண்டும். முன்னனிப் பாத்திரம் வகுக்கும் நபர்களுக் கூடாகவன்றி அவர்கள் எந்த சமூக சக்திகளை வர்க்கங்களை பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள் என்பதை கண்டறிய வேண்டும். எந்த சக்திகளின் முரண்பட்ட நலன்கள் மோதிக் கொள்கின்றன என்பதை சரியாக இனம் காணும் போது தான் ஓர் சமூக நிகழ்வை அரசியல் ரீதியாக புரிந்து கொண்டதாக அர்த்தப்படும்.

ஓர் யுத்தத்தைப் புரிந்து கொள்வதற்கு புறநிலையான மதிப்பீடு அவசியமானது. யுத்தத்தின் அடிப்படை என்ன? எந்த நலன்களுக்கு இடையான மோதல் இது? யுத்தத்தில் மோதிக் கொள்ளும் எதிர்ரெதிர் சக்திகள் எவை ? இவற்றுடன் பல்வேறு சக்திகளும் அவற்றின் செயற்பாடுகளும் கொண்டுள்ள உறவு என்ன? என்ற கேள்விகள் இங்கு முக்கியத்துவம் வாய்ந்தவை இவற்றின் அடிப்படையில் போராட்டத்தின் உந்து சக்தி , நட்பு சக்தி, நேரடி சேமிப்பு, மறைமுக சேமுப்பு, எதிரி, எதிரியின் நட்பு சக்தி, எதிரியின் நேரடி சேமிப்பு , எதிரியின் மறைமுக சேமிப்பு போன்றவற்றை துல்லியமாக இனம் கண்டு வரையறுத்துக் கொள்வது அவசியமானது. இவ்வாறாக யுத்தத்தின் நோக்கத்தையும் அதில் சம்பந்தப்பட்ட பல்வேறு சக்திகளையும் அரசியல் ரீதியாக வரையறுத்துக் கொள்வது யுத்தம் தொடர்பாக சரியான நிலைப்பாட்டை மேற்கொள்வதற்கு அவசியமானது. பல்வேறு தனிநபர்களையும் அவர்களது குணநலங்களையும் தனிப்பட்டசம்பவங்களையும் முதன்மைப் படுத்தாமல் எந்த தனிநபர்களும் குழுக்களும் வரலாற்றில் எந்தெந்த சக்திகளை பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள் என்பதை இனங்காண்பது முக்கியமானது. இங்கு எழுப்பப்படும் கேள்விகள் சிக்கலானவை தான் இவற்றிக்கான விடைகளை கண்டறிவது இலகுவானதல்ல தான் சமூகம் தொடர்பான ஆழமான கண்ணோட்டம் தொடர்ச்சியான ஆய்வு விரிவான பரிசீலனை போன்றவற்றை வேண்டி நிற்பது இது. பல்வேறு நிகழ்வுகளையும் ஊடுருவிப்பார்த்து அவற்றின் பின்னால் முட்டி மோதும் சமூக சக்திகளை இனங்காண்பதும் பல்வேறு கோரிக்கைகளுக்கூடாக இழையோடி நிற்கும் பல்வேறு வர்க்கங்களின் நலன்களை இனங்காண்பதும் இலகுவானதல்ல. கடுமையான தத்துவத்தின் ஆழ்ந்த புலமையும் வேண்டி நிற்பவை ஆனால் எந்தவொரு விஞ்ஞானத்தின் வழியிலும் ராஜபாட்டைகள் கிடையாது என்பதை புரிந்து கொண்டால் இந்தக் கேள்விகளுக்கு முகம் கொடுப்பது தவிர்க்கமுடியாது என்பதை புரிந்து கொள்ளலாம். உண்மையை கண்டறிய குறுக்கு வழிகள் கிடையாது.

இப்போது நாம் போராட்டம் பற்றிய பிரச்சினைக்கு வருவோம். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் அடிப்படை என்ன? பரந்து பட்ட தமிழ் மக்களுக்கும் சிங்களப் பேரினவாத அரசுக்கும் இடையிலான முரண்பாடுகள் சாதாரண அரசியல் வழிமுறைகளால் தீர்க்கப்பட முடியாமல் போனதே தமிழீழ விடுதலைப் போராட்டமானது வெடிக்கக் காரணமாயிற்று. தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இந்த யுத்தம் நீதியானது. தமது சொந்தப் பாதுகாப்பைப் உத்தரவாதப்படுத்துவதற்காக தாம் போரிடுவது தவிர்க் கமுடியாததாய் உள்ளது. இங்கு பரந்து பட்ட மக்களும் சிங்களப் பேரினவாத அரசுமே மோதிக் கொள்ளும் முரண்பட்ட சக்திகளாகும். இந்த இரண்டு சக்திகளுடனும் பல்வேறு சக்திகளும்

www.tamilarangam.net

குழுக்களும் கொண்டுள்ள உறவின் அடிப்படையிலே இவற்றின் வரலாற்றுட் பாத்திரம் தீர்மானிக்கப்படுகிறது. தமிழ் மக்களின் தரப்பில் நின்று கொண்டு அவர்களின் பாதுகாற்ப்பிற்காக பேரினவாத அரசின் படைகளை எதிர்த்து போராடுபவர்கள் விடுதலைப் போராட்ட சக்திகள் ஆகிறார்கள். தமிழ் மக்களை அழித்தொழிக்க அரசுப்படைகள் மேற்கொள்ளும் கண்மூடித்தனமான தாக்குதல்களை அரசின் தரப்பில் நின்று கொண்டு அதன் படைகளின் செயற்பாடுகளுக்கு துணை நிற்பவர்கள் தமிழ் மக்களின் எதிரிகளாகிறார்கள். அரசின் கைக்கூலிகளாகிறார்கள். இந்த அடிப்படையிலே தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் சம்பந்தப்பட்ட பல்வேறு குழுக்களையும் இனம் காணவேண்டும்.

தமிழ் மக்கள் தரப்பில் நின்று போரிடுபவர்களது குறைபாடுகளும் அரசின் படைகளுடன் இணைந்து கொண்டுள்ளவர்களின் நல்ல அம்சங்களும் கூட யுத்தத்தின் நோக்கம் பற்றிய அடிப்படையான பிரச்சினையில் அவர்களது பாத்திரங்களை மாற்றிவிடமாட்டாது. புலிகள் இருபாலிச சக்தி என்பதும் மக்களை ஒடுக்குகிறார்கள் என்பதும் அவர்களது அரசியல் கண்ணோட்டத்திலுள்ள ஊசலாட்ட தன்மைகளும் கூட இன்றைய யுத்தத்தில் அவர்கள் தமிழ் மக்களின் தரப்பில் நின்று போராடுபவர்கள் என்ற புற நிலை உண்மையை மறைத்து விடமாட்டாது. ஏனைய அமைப்புக்களின் ஜனநாயக அம்சங்களும் முற்போக்கான கொள்கைகளும் அவர்கள் இந்த யுத்தத்தின் அடிப்படை பற்றிய பிரச்சினையில் தமிழ்மக்களுக்கு விரோதமாக செயற்படுவதை மறைத்து விடாது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இந்தியாவின் நேரடித் தலையீடு ஏற்பட்டபோது யுத்தத்தின் அடிப்படை பற்றிய பிரச்சினை வேறாகியது. இலங்கை இந்திய ஒப்பந்தமானது இந்திய அரசு தமிழ் மக்களின் போராட்டத்தை பயன்படுத்தி இலங்கை அரசின் மேல் தனது மேலாதிக்கத்தை செலுத்த செய்து கொண்ட உடன்படிக்கையாகும். இலங்கை அரசை கீழ் ப்படுத்தும் நோக்கம் நிறைவேறியதும் இந்திய அரசு தமிழ் மக்களது தேசிய இனப் பிரச்சினைக்கு எந்த விதமான உருப்படியான தீர்வுகளையும் ஏற்படுத்தாமலேயே தமிழ் மக்களது போராட்டத்தை கைவிடுமாறு வலியுறுத்தியது. தனது வற்புறுத்தல்களுக்கு இணங்காதவர்களை ஆயுத பலத்தால் நசுக்க இந்தியப்படைகளை அனுப்பி வைத்தது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இந்திய அரசு இவ்வாறு தமது மேலர்திக்கத்தை நிலைநாட்ட படைகளை அனுப்பிடதுடன் தமிழ் மக்களுக்கும் சிங்களப்பேரினவாத அரசுக்கும் இடையிலான முரண்பாடாலானது புதிய முரண்பாட்டால் மாற்றியமைக்கப்படுகிறது. இந்திய அரசானது சிங்கள மக்களது இறைமைகளையும் தமிழ் மக்களது விடுதலைப் போரா ட்டத்தையும் நசுக்க முனைந்தமையால் பிரதான முரண் பாடானது இந்திய அரசிற்கும் இலங்கை (தமிழ்,சிங்களம்) மக்களுக்குமிடையிலானதாக மாறுகிறது இங்கு தமிழ் சிங்கள மக்களது தரப்பில் நின்று இந்திய மேலாதிக்கத்திற்கு இந்திய அரசின் சார்பாக நின்று போராடுபவர்கள் கைக் கூலிகளாகுகிறார்கள். இந்திய அரசுடன் ஒத்துழைத்த இயக்கங்களை கைக்கூலிகள் என நாம் விரும்பாமலும் இருக்கலாம். ஆனால் இவர்கள் வகித்த வரலாற்றுப் பாத்திரம் கைக்கூலித்தனமே.

இந்தியப்படைகள் வந்த போது சிங்கள மக்கள் அனைவருமே கிளர்ந்தெழுந்தார்கள் பேரினவாத அரசின் கடுமையான தாக்குதல் களுக்குட்பட்டிருந்த தமிழ் மக்களிடையே ஆரம்பத்தில் ஒரு மயக்கம் இருக்கவே செய்தது. புலிகளிடமும் இந்த மயக்கம் காணப்படவே செய்தது. புலிகளால் ஏற்கனவே தடை செய்யப்பட்டிருந்த ஏனைய இயக்கங்கள் இந்தியப்படையின் உதவியுடனேயே தமது அரசியல் மறு பிரவேசத்தை தொடங்கினர். இந்தியப்படைகளுடன்ஒத்துழைத்த இயக்கங்கள் கூறிய காரணங்களாவன:



1) தமிழ் மக்களுக்கு ஓர் இடைக்கால அமைதியை கொண்டு வருவது

2) இலங்கை அரசுக்கு எதிராக இந்திய அரசை பயன்படுத்துவது

3) பாசிச சக்தியான புலிகளை அழிப்பது

இந்தியப்படைகள் வந்த புதிதில் இவர்கள் எதிர் பார்த்த படியே நாடகம் சமூகமாக போனாலும் இந்திய மேலாதிக்கத்துடன் தமிழ் மக்களுக்குள்ள அடிப்படை முரண்பாட்டை நீண்ட காலமாக இவர்களால் மறைத்துவிட முடியவில்லை விரைவிலேயே புலிகளுக்கும் இந்தியபடைகளுக்கிமிடையில் யுத்தம் ஏற்பட்டது. இந்தியப்படைகள் தமிழ் மக்கள் மீது மிகவும் மோசமான தாக்குதல் நடத்தினர். பேரினவாத சிங்கள இராணுவம் கூட இவ்வளவு மோசமாக செயல்பட்டது கிடையாது. தமிழ் மக்களை இந்தியாவிற்கு எதிராகவும் புலிகளுக்கு ஆதரவாகவும் மாற்றியது. தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் புலிகள் பல தடவைகள் மக்களை விட்டு அந்நியப்பட்டு போகும் நிலைமைகள் ஏற்பட்டபோதெல்லாம் புலிகளுக்கு ஒப்பீட்டளவில் நல்ல சக்திகளாக காட்டி மக்களின் ஆதரவை சரியாமல் பேணிவந்துள்ளது. இந்திய படைகளது கூலிப்படைகளாக செயற்பட்ட இயக்கங்களது செயற்பாடுகளும் புலிகளை அழிப்பதற்கு பதிலாக புலிகள் மீது தமிழ் மக்களது அனுதாபத்தை திரட்டியது. இந்திய அரசுடன் ஒத்துழைத்த அமைப்புக்களிடம் வடக்கு கிழக்கில் நிர்வாகம் போதியளவு நிதி, ஆயுதம் போன்றவை இருந்த போதிலும் தமது அணிகளுக்கு இளைஞர்களை வென்றெடுக்க முடியாது பிள்ளை பிடித்து தமிழ் தேசிய இராணுவத்தை அமைக்கும் அளவிற்கு சென்றார்கள் தமிழ் மக்களது போராட்ட வரலாற்றில் இளைஞர்களை க்டத்திக் கொண்டு போய் ஒரு விடுதலைப் படை கட்ட முயன்றவர்கள் இவர்கள் மட்டுமே. இது போன்ற செயற்பாடுகளால் புலிகளை அழித்து விட முடியாமல் போனது மட்டுமின்றி இந்திய படைகள் வெளியேறிய போது இந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள் இந்திய கப்பலிலேயே ஏறித் தப்பியோடவேண்டியதாயிற்று. தமிழ் மக்கள் இவர்கள் பால் சிறிதும் அனுதாபம் காட்டவில்லை . இந்தியாவைப் பயன்படுத்த முனைந்தவர்கள் இந்தியா தனது ஆக்கிரமிப்பை நியைப்படுகத்தும் வகையில் பயன்படுத்தமாட்டார்கள் இலங்கை அரசிற்கெதிராக இந்தியாவைப் பயன்படுத்தப் போவதாக கூறியவர்கள் சிங்கக் கொடியின் பிருமையை பற்றிப பேசலானார்கள்.

இந்திய தலையீட்டை புறநிலையாக வைத்து மதிப்பீடு செய்வதில் சில இயக்கங்கள் இனத்த தவறானது. அவர்கள் விரும்பினார்களோ இல்லையோ அவர்களை கைக்கூலிகளாக மாற்றியது முன்பு புலிகள் இந்த இயக்கங்களை தடை செய்த போது தமிழ் மக்கள் இந்த இயக்கங்கள் மீது காட்டிய அனுதாபத்தை அழித்து விட்டது. புலிகளை அழிப்பதாகக் கூறி புலிகளைப் பலப்படுத்தும் வேலைகளை செய்து முடித்தார்கள். ஒருவரது நோக்கங்களும் விருப்பங்களும் அல்ல முக்கியமானவை. அவர் நிகழ்வுகளை புறநிலையாக வைத்து சரியாக மதிப்பிடுகிறாரா இல்லையா என்பது தான்இங்குள்ள பிரச்சினை இதில் தவறிழைப்பாராயின் அவரது உயர்ந்த நோக்கங்கள் கூட எதிர்மாறான விளைவுகளை ஏற்படுத்தும்.இந்தியப்படைகள் வெளியேறிய பின்பு தமிழ் மக்களுக்கும் பேரினவாத அரசுக்கும் இடையிலான முரண்பாடு பிரதானமாகியது. இதன் தவிர்க்க முடியாத விளைவே இன்றைய யுத்தமாகும். இந்த யுத்தத்தை புலிகள் விரும்பினார்களா? யுத்தத்தை யார் தொடங்கியது? என்பனவெல்லாம் முக்கியத்துவமற்றவை தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு எட்டப்படாதவரை புலிகள் தமிழ் மக்களை துறந்து எதிரியிடம் முழுமையாக சரணடையாதவரையில் இந்த யுத்தம் தவிர்க்கப்பட முடியாததே. இந்த யுத்தத்தில் தாரதடைகளை விதித்தும் குண்டு மழைகளை பொழிந்தும் இன ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபடும் அரசபடைகள் பக்கமும் நிற்கிறார்கள் என்பதே புறநிலையான உண்மையாகும். புலிகள் தமிழ் மக்கள் தரப்பில் நின்று அரசின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன ஒழிப்பு யுத்தத்திலிருந்து தற்காப்பு யுத்தத்தை நடத்தும் வரையில் தமிழ் மக்கள் புலிகளை ஆதரிக்க நேர்வது தவிர்க்க முடியாததே.

இந்திய அரசுடனும் இலங்கை அரசுடனும் சில இயக்கங்கள் இணைய நேர்ந்ததற்கு புலிகள் தானே காரணம் என்று ஒரு வாதம் முன் வைக்கப்படுகிறது. இந்த அமைப்புக்களை எதிரியுடன் ஒத்துழைக்க செய்தால் புலிகளுக்கும் பங்கு இருக்கவே செய்கிறது.ஆனால் அது மிகவும் சிறியதொரு பங்கே ஆனால் ஏனைய குழுக்களின் சொந்தப்பலவீனம் புலிகளின் அடக்கு முறையை முன்னரே எதிர்பார்த்து அதற்கான தயாரிப்புடன் முகம் கொடுக்க முடியாமை, தோற்கடிக்கப்பட்டபின்பு கூட நீண்ட கால கண்ணோட்டத்துடன் தம்மை வளர்த்துக்கொள்ளும் நோக்கமின்மை தமிழ் மக்களிலும் சொந்த தாபன பலத்திலும் சார்ந்திராமல் எந்த வழியிலாவது யார் மூலமாவது ஒரு முன்னணி சக்தியாக வந்து விட வேண்டும். அதிகாரத்திற்கு வரவேண்டும் என்ற சந்தர்ப்பவாதம் யுத்தம் பற்றிய நிலைப்பாட்டை எடுப்பதில் அகநிலை கண்ணோட்டம் போன்றவையே இதில் பிரதான பங்கு வகித்துள்ளது ஒரு தாபனமானது எதிரியிடம் சரணடைவதை இந்த விதமான அடக்குமுறைகளை காரணமாக காட்டி நியாயப்படுத்த முடியாது எதிரியின் எதிரி நண்பன் என்ற தந்திரோபாயமானது யுத்தத்தின் அடிப்படைகளை மீறி எதிரியிடம் சரணடையும் அளவிற்கு போய்விடமுடியாது. எதிரிகளுக்கிடையிலான முரண்பாட்டை பயன்படுத்துவது என்பது ஏதாவது ஒரு எதிரியிடம் சரணடைந்து விடுவதாக அர்த்தப்படுத்தக்கூடாது. எதிரிகளுக்கிடையிலான முரண்பாட்டை பயன்படுத்துவது என்பதன் நோக்கம் இறுதியில் எதிரிகள் இருவரையும் பலவீனப்படுத்துவதாக இருக்கவேண்டும். மாறாக ஒரு எதிரியிடம் சரணடைந்து அவனைப் பலப்படுத்துவதாக அவனால் பயன்படுத்தப்படுவதாக இருக்க முடியாது. தமிழீழ விடுதலைப் போராட்டத்துடன் சம்பந்தப்பட்ட முற்போக்கு எண்ணமுடைய புரட்சிகர எண்ணமுடைய தனிநபர்களும் சிறுகுழுக்களும் எதிரியினால் பாதிக்கப்படுவதை விட புலிகளின் பாசலிசத்தாலயே அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். இவர்களது அரசியல் நடவடிக்கைகளுக்கு மட்டுமல்ல சொந்தப் பாதுகாப்பிற்கே புலிகள் பெரும் அச்சுறுத்தலாக இருக்கிறார்கள் என்பது உண்மையே இன்றும் கூட புலிகளின் சித்திரவதை கூடங்களில் பல புரட்சிகர உணர்வு மிக்க போராளிகள் வாடி மடிகிறார்கள் என்பதும் உண்மையே ஆனால் இப்படிப்பட்ட பாதிக்கப்பட்ட . உணர்வுகள் எதுவுமே இன்று நடைபெறும் யுத்தத்தை பற்றிய புறநிலையான மதிப்பீட்டை மேற்கொள்ளுவதற்கு தடையாக அமைந்து விடக்கூடாது. புலிகளின் பாசிசமானது எமது விலாசமான கண்ணோட்டத்தை குறுக்கிவிடக்கூடாது. அகநிலைக் . கண்ணோட்டத்திற்கு பலியாக அனுமதிக்கக்கூடாது. புலிகள் இன்று தமிழ் மக்கள் தரப்பில் நின்று தான் போராடுகிறார்கள் என்றால் இந்த பாசிச சக்தியை பலப்படுத்துவது தான் முற்போக்கு எண்ணமுடையவர்களின் கடமையா? என்ற கேள்வி எழுகிறது. புலிகள் இன்று தமிழ் மக்கள் தரப்பில் நின்று போரிட்டால் இவர்கள் பரந்து பட்ட தமிழ் மக்களின் உண்மையான நலங்களை பிரதிநிதித்துவப்படுத்தப்படவில்லை மக்கள் மீது மிகவும் மோசமான அடக்கு முறைகளை கட்டவிழ்த்து விடுகிறார்கள். தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஊசலாட்டம் காட்டுபவர்கள் எந்தவொரு முற்போக்கு புரட்சிகர அமைப்பையும் அதன் ஆரம்பத்திலேயே நசுக்கி விடுபவர்கள். சக போராட்ட அமைப்புக்களை அழித்தொழித்து போராட்டசக்திகளைப் பலவீனப்படுத்தியவர்கள். இதனால் தமிழீழ விடுதளைப் போராட்டம் கணிசமான அளவு பலவீனப்படுத்தப்பட்டுள்ளது. இவர்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் ஆற்றலை காலப்போக்கில் இழந்து விடக்கூடியவர்கள். ஒரு வேளை இவர்கள் தமிழீழத்தை அடைந்தாலும் அந்த விடுதலையானது தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் சுதந்திரத்தைக் கொண்டு வந்து விட மாட்டாது. ஒரு கையில் இருக்கும் விலங்கை இன்னோர் கைக்கு



மாட்டுவதாகவே அர்த்தப்படும். ஆகவே தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தலைமையை கைப்பற்றியிருக்கும் புலிகளை தனிமைப்படுத்தி விட்டு அந்த போராட்ட தலைமையை தமது கையில் எடுப்பது புரட்சிகர சக்திகளின் இன்றைய கடமையாகும்.• ஆனால் இப்படியாக தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் சரியான தலைமையை கொடுப்பதற்கு பேரினவாத அரசின் இன ஒழிப்பு நடவடிக்கைகளை எதிர்த்து போராடுவதும் தமிழ் மக்களின் போராட்டத்தை பலப்படுத்துவதும் முன் நிபந்தனையாகிறது. தமிழ் மக்களின் தேசிய நலங்களை ஊசலாட்டமின்றி உறுதியாக முன்னேடுத்து தமிழ் மக்களுக்கு புரட்சிகர ஜனநாயகத்தை வழங்கி அவர்களது ஆற்றல்களை பரந்தளவில் திரட்டி அரசுக்கெதிரான யுத்தத்தை இன்னும் தீர்க்கமாக முன்னெடுப்பதால் மட்டுமே புலிகளை தனிமைப்படுத்துவது சாத்தியப்படும். இந்த வகையில் இன்று உடனடித் தேவையாக இருப்பது புலிகளுக்கு மாற்றாக அமையக் கூடிய புரட்சிகர தாபனம் தமிழ் மக்களின் நலங்களை உண்மையாக பிரதிபலிப்பதும் பரந்துபட்ட மக்களை அணிதிரட்ட வல்லதுமான மாற்றுத்திட்டம். எதிரியை தோற்கடிக்க தமிழீழ விடுதலையை நிலைநாட்டவல்ல மாற்று போராட்ட வழிமுறைகளாகும். முற்போக்கு எண்ணமுடைய புரட்சிகர உணர்வுடைய தனிநபர்களும் சிறுகுழுக்களும் உடனடியாக கவனம் செலுத்தவேண்டிய பிரச்சினைகள் இவையாகும்.

க.அரவிந்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முஸ்லிம் மக்கள் தொடர்பாக சில குறிப்புகள்

அண்மையில் நடைபெற்ற இரண்டு நிகழ்வுகள் முஸ்லிம் மக்கள் தொடர்பான பிரச்சினையில் குறிப்பிடத்தக்கவை.

1) வடமாகாணத்தில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமை.

2) சர்வகட்சி மகாநாட்டில் இணைந்த வடக்கு- கிழக்கு மாகாணத்துள் முஸ்லிம் மக்களுடன் அதிகாரங்களை பகிர்ந்து கொள்வதற்கான பேச்சுவார்த்தைகள்.

முஸ்லிம்கள் சிறுபான்மை சமூகம்என்ற வகையால் பேரினவாதத்தால் பாதிக்கப்பட்டே வந்துள்ளார்கள். தமிழைத் தமது தாய் மொழியாகக் கொண்ட இவர்கள் கிழக்கு மாகாணத்தில் ஓரளவு செறிவாக வாழ்ந்து வருகிறார்கள் என்ற போதிலும் தம்மைத் தனித்துவமானவர்களாகவே இனம் காணுகிறார்கள். சிங்கள பேரினவாதத்திற்கு எதிராக போராடும் தமிழர் அமைப்புக்கள் பேரினவாதத்தை முகம் கொடுக்கும் இன்னோர் சமூகமான முஸ்லிம் மக்களையும் தமது போராட்டங்களுடன் இணைத்துக் கொள்ளவேண்டும் என்பதில் காட்டும் ஆர்வம் புரிந்து கொள்ளக்கூடியதே. எனினும் இந்த இணைப்பானது முஸ்லிம் மக்களது தனித்துவத்தை அங்கீகரித்து இரண்டு சமூகங்களுக்குமே பொதுவான பிரச்சினைகளை இனங்கண்டு அந்த பிரச்சினைகளை தீர்ப்பதற்கான வழிமுறைகள்பற்றிய புரிதலுக்கூடாகத்தான் ஏற்படமுடியுமே அன்றி வேறு முறைகளால்அல்ல.

கடந்த காலத்தில் பல்வேறு தமிழர் அமைப்புக்களும் முஸ்லிம் மக்களைத் தமது போராட்டத்துடன் இணைத்துக் கொள்வதில் அக்கறை காட்டிய போதிலும் அதனை ஒரு அரசியல் ரீதியான இணக்கத்தினூடாக அல்லாமல் 'தமிழ் பேசும் மக்கள்', 'இஸ்லாமியத் தமிழர்' , 'ஈழவர்' என்பவை போன்ற விஞ்ஞான பூர்வமல்லாத, கறாரானதாக அல்லாத பதங்களை, குறியீடுகளைப் பாவித்து முஸ்லிம் மக்களை தமிழ் மக்களுடன் இணைத்துக் கொள்ள செயற்கையான முறைகளில் முயன்றன.

இந்த அணுகு முறையும் முஸ்லிம் மக்கள் தமது தனித்துவத்தை இழக்கக்கூடிய ஆபத்தாக உணரவும் ஏற்கனவே தமிழ் மக்கள் மீது கொண்டிருந்த சந்தேக உணர்வுகளை பலப்படுத்தவுமே செய்தன. முஸ்லிம் மக்கள்மத்தியில் தமிழ் மக்களது போராட்டங்களுக்கு கணிசமாக தார்மீக ஆதரவு இருந்த போதிலும் அந்த மக்களை தமது போராட்டங்களுடன் பெருமளவில் இணைத்துக் கொள்வதில் தமிழ் அமைப்புக்கள் கண்ட தோல்விக்கு இந்த அணுகு முறையே பிரதான காரணமாகும்.

ஏனைய அமைப்புக்களை அழித்தொழிப்பதன் மூலம் தமிழ் மக்கள் மீது தமது ஏகபோக தலைமையை நிறுவிக் கொண்ட புலிகள் முஸ்லிம் மக்களது தலைமையையும் இதே வழிமுறையில் கைப்பற்ற முனைந்தனர். முஸ்லிம் மக்களது ஜனநாயக அமைப்புக்களையும் கூட தடை செய்தனர். அதன் முன்னணி அங்கத்தவர்களை வேட்டையாடினர். புலிகளின் இந்த செயற்பாடானது இந்த முரண்பாட்டினுள் அரசபடைகள் தலையிடவும் முஸ்லிம் மக்களது ஒரு பகுதியினரை தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு எதிராக பயன் படுத்திக் கொள்ளவும் வழியமைத்தது. இந்த நிலையில் புலிகள் காத்தான்குடி, ஏறாவூர் படுகொலைகளைப் புரிந்தனர். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இது ஒரு கறை படிந்த அத்தியாயமாகும்.தமிழ் மக்களின் போராட்ட அரசியல் ரீதியாகவும் இராணுவரீதியாகவும் பலவீனப்படுத்திய ஒரு நிகழ்வாகும். இந்த நிகழ்வுகளுடன் பெருந்தொகையான தமிழ் மக்கள் அகதிகளாக்கப்படவும் புலிகள் பலவிடங்களில் இராணுவரீதியில் பலமாக செயற்பட முடியாத நிலைமை ஏற்படவும் வழிவகுத்து.

*1990* யூனில்யுத்தம்தொடங்கும் நாள்வரையில் தமிழ் முஸ்லிம் மக்களின், தலைமை தாமே என்று பிரகடனப் படுத்தியவர்கள்;யுத்தம் ஆரம்பித்ததற்கு காரணமே தமது ஆதரவாளரான ஒரு முஸ்லிம் தையற்காரரை மட்டக்களப்பு பொலிஸார் தாக்கியதே என்று காரணம் கூறியவர்கள் யுத்தம் ஆரம்பித்து ஒரு சில மாதங்களுள் வடமாகாணத்தில் உள்ள முஸ்லிம்களை பலவந்தமாக வெளியேற்றினர். யாராவது ஒருசில முஸ்லிம்கள் அரச படைக்கு உதவியிருக்கலாம். அதற்காக முழு முஸ்லிம் சமூகத்தையும் வெளியேற்றுவதென்றால் அதற்கு அர்த்தம் என்ன? இன்று பல தமிழர் அமைப்புக்கள் சிறிலங்கா இராணுவத்துடன் நேரடியாக இணைந்து செயற்படும் நிலையில் என்ன செய்யப்போகிறார்கள். முழுத் தமிழரையும் வெளியேற்ற முடியுமா? இந்தியப் படைகளின் தாக்குதலின் போது கிழக்கு மாகாணத்தில் புலிகளை அழிக்காமல் காப்பாற்றியதில் முஸ்லிம் மக்களுக்கு பெரும் பங்குண்டு என்பதை இங்கு மறக்க விரும்புகிறார்கள். முஸ்லிம் மக்களை வடக்கில் இருந்து வெளியேற்றிய சம்பவமானது தரும் செய்தி இது தான். அதாவது முஸ்லிம்கள் ஒரு தனித்துவமான சமூகம் என்பதை

"புலிகள் அங்கீகரித்துஅதனை ஒடுக்க முனைந்திருக்கிறார்கள் என்பதே. கொழும்பில் சர்வகட்சி மகாநாட்டில் தமிழர், முஸ்லிம் அமைப்புக்களிடையே வடக்கு- கிழக்கு அதிகார பரவலாக்கம் தொடர்பாக பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக்கொண்டிருந்த போதே முஸ்லிம் மக்கள் வடமாகாணத்தில் இருந்து வெளியேற்றப்பட்டது நடைபெற்றது. அப்படியிருப்பினும் முஸ்லிம் அமைப்புக்கள் எதுவுமே வடக்கு -கிழக்கு மாகாணத்தின் இணைப்புக்கு எதிராக செயற்பட முனையாதது கவனிக்கத்தக்கது. அத்துடன் வடக்கு- கிழக்கு இணைப்பினுள் முஸ்லிம்களின் தனித்துவத்தைப் பாதுகாக்க உடன்பாடு காணப்பட்டுள்ளதாக செய்தி வெளியான போது கிழக்கில் உள்ள பல முஸ்லிம் வெகுசன அமைப்புக்களும் இலங்கையில் பல பகுதிகளில் உள்ள மதத்தலைவர்களின் அமைப்புக்களும் இதனை வரவேற்று அறிக்கைகள் விடுத்ததும் கவனிக்கத்தக்கது.

தொடர்ந்து பேச்சு வார்த்தைகளின் மூலம் முஸ்லிம்கள் தமது பாதுகாப்பு தொடர்பாக நியாயமான அச்சங்களை வெளிப்படுத்தினர். இதனால் இணைந்த வடக்கு- கிழக்கு மாகாணங்களினுள் அமைக்கப்படும் தனியான முஸ்லிம் மாகாணத்திற்கு, தமிழ் மாகாணத்திற்கு சமமான அதிகாரத்தைக் கோரினர். தமிழ், முஸ்லிம் மாகாண சபைகளை இணைந்த இணைப்புச் சபைக்கு அல்லாமல் நேரடியாக முஸ்லிம் மாகாணசபையிற்கே முஸ்லிம் மக்கள் தொர்பாக பல விடயங்களையும் கையாளும் அதிகாரம் தேவையென வலியுறுத்தினர். இந்தக் கோரிக்கைக்கு தமிழர் அமைப்புக்கள் இணங்க மறுத்த நிலையில் முஸ்லிம் அமைப்புக்கள் வடக்கு- கிழக்கு மாகாண அமைப்புக்கு எதிராக இல்லாத நிலையிலும் அதேவேளை தனியாக முஸ்லிம் மாகாணசபை நேரடியாக மத்திய அரசின் அதிகாரத்தை பெறுவதற்குமான கோரிக்கையை வலியுறுத்தத் தொடங்கியுள்ளார்கள்.

இந்த சம்பவங்கள் தெளிவுபடுத்துவது யாதெனில், தேசிய இனப்பிரச்சினைக்கு முதலாளித்துவ அமைப்பினினுலுள்ள தீர்வு முரணற்ற ஜனநாயகமே. முரணற்ற ஜனநாயகத்தை வழங்க தயாராக இல்லாத தமிழர் அமைப்புக்கள் முஸ்லிம் மக்களை தமது கோரிக்கைகளை இன்னும் வலியுறுத்தவும் தமிழரிடம் இருந்து பிரிந்து செல்லவுமே வழிவகுப்பார்கள். தமிழ் தேசியமானது கடந்தகாலத்தில் தமிழ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இனவாதமாகவே முன்னெடுக்கப்பட்டது என்றோர் விமர்சனத்தை பலரும் முன்வைப்பதுண்டு. புலிகளின் நடவடிக்கைகள் மட்டுமல்ல புலிகளைக் கண்டிக்கும் ஜனநாயக அமைப்புக்கள் என்பவையும் இந்த இனவாதத்தைக் கடந்து வரவில்லை என்பதன் அறிகுறியே இதுவாகும்.

வடக்கு-கிழக்கு இணைப்பு தொடர்பாக உடன்பாடு காணப்பட்டதாக செய்தி வெளியான போது அதற்கெதிராக குரல்கொடுத்த முஸ்லிம் தலைவர் எம்.எச். முகமது மட்டுமே. கொழும்பின் பாரம்பரிய தலைமையை சேர்ந்த இவர் முஸ்லிம் மக்களை தேர்தலில் பிரதிநிதித்துவம் படுத்துபவர் அல்ல. சிங்கள மக்களையும், சிங்கள கட்சிகளையும் திருப்தி படுத்த இவர் இப்படியாக நடந்து கொண்டார். ஆனால் அடுத்து நிகழ்ந்தவை இவரது முன்னெடுப்பை குப்பைத் தொட்டிக்கே அனுப்பி வைத்து விட்டது. பெரும்பான்மை சிங்கள அரசியற்கட்சிகளை நம்பியே பிழைப்பு நடத்தும் இவ்வரது நடவடிக்கைகள் புரிந்து கொள்ளத் தக்கதே. ஆனால் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ரெலோ அமைப்பின் எம்.பி. திவ்வியநாதனும் இந்த கிழக்கு மாகாண விடுதலை முன்னணியில் அங்கம் வகிப்பதை என்ன என்பதாம்; சினிமாவிலும், கதைகளிலும் மட்டுமல்ல யதார்த்த வாழ்விலும் அரசியலிலும் கூட சில கோமாளிப் பாத்திரங்கள் வருவது தான் வரலாற்று விதி போலும்.

கடந்த காலத்தில் தமிழ் அமைப்புகளுக்கிடையே முஸ்லிம் மக்கள் பற்றிய பிரச்சினை விவாதத்திற்கு வந்தவுடன் அவர்கள் செய்யும் முதல் வேலை இது தான். அதாவது தேசிய இனங்கள் தொடர்பாக ஸ்டாலின் முன்வைத்த நாலு வரையறைகளையும் எடுத்துக் காட்டி அவை முஸ்லிம் மக்களக்கு பொருந்தி வராததால் அவர்கள் தனித்தேசிய. இனமாக மாட்டார்கள் என்றும் முஸ்லிம்கள் தனித் தேசிய இனம் இல்லையாதலால் அவர்கள் தமிழ்த் தேசிய இனமே என்று சாதிப்பார்கள். சற்று ஆழமாகப் பரிசீலித்தால் இந்த வாதத்தில் பல குறைபாடுகள் இருப்பது தெளிவாகும். ஸ்டாலின் இந்த வரையறையை முதலாளித்துவ அரசு இயங்குவதற்கு சாதகமான அம்சங்கள் என்ற அடிப்படையிலேயே முன்வைத்தார். அப்போது முதலாளித்துவ

வர்க்கம் முற்போக்கான பாத்திரத்தை ஆற்றியது. இன்று ஏகாதிபத்திய கால கட்டத்தில் குறைவிருத்தி நாடுகளில் பேரினவாதம் சிறுபான்மை இனங்களை திட்டமிட்டு அழிக்கும் நடவடிக்கைகளை கட்டவிழ்த்து விடுகையில் இந்த வரையறையை வலியுறுத்துவதானது சிறுபான்மை இனங்களின் ஒழிப்புக்கு துணைபோவதாகவே அமையும். சற்று நுணுக்கமாக பார்த்தால் தமிழ் தேசிய இனத்திற்கே இந்த வரையறைகள் பொருந்தமாட்டா. இன்று இதன் குறைபாடும் உணரப்பட்டு புதிய வரையறைகளின் தேவை பரவலாக உணரப்படுகிறது. இந்த புதிய வரையறை உருவாகும் வரை முஸ்லிம் மக்களை தமிழர்கள் என சாதிப்பது நியாயமாகாது.

வடக்கு கிழக்கில் உள்ள முஸ்லிம்களது தனித்துவமான உணர்வுகளையும் அவர்கள் இன்று தமிழ் இனவாதத்திற்கு பலியாகும் நிலைமையையும் கருத்திற்கெடுப்பதுடன் அவர்களைத் தனித் தேசியமாக இனங்காண்பதே பொருத்தமானதாகும். முஸ்லிம் மக்களது சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பது தமிழர் அமைப்புக் களின் கடமையாகும். பலரும் முஸ்லிம்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பது என்றால் அவர்களுக்கு பிரிந்து போவதற்கான உரிமையையும் அங்கீகரிப்பதாகவும் அது தமிழர் நலன்களுக்கு பாதகமானது என்று கூறி மறுக்கமுனைவர், முதலில் சுயநிர்ணய உரிமை என்பதனையும் பிரிவினை என்பதனையும் பிரித்துப்பார்த்து புரிந்து கொள்ள வேண்டும். பிரிந்து போகும் உரிமையை அங்கீகரித்து விட்டால் ஒரு இனம் கட்டாயம் பிரிந்து தான் போகும் என்பதல்ல. விவாகரத்துச் சட்டம் குடும்ப அமைப்பையே தகர்த்து விட்டதா என்ன? பல்இனங்களும் சேர்ந்து இருப்பது பெரிய சந்தையை கொடுப்பதாலும்



மற்றும் பல வளங்களை பகிர்ந்து கொள்ள உதவுவதாலும் இனங்கள் சேர்ந்து வாழ்வதையே விரும்புகின்றன. எப்போது சேர்ந்து வாழ்வது சகிக்க முடியாததாகிறதோ அப்போது தான் பிரிவினைக் கோரிக்கையை நோக்கி தேசிய இனங்கள் தள்ளப்படுகின்றன. ஆகவே உண்மையான பிரச்சினை முஸ்லிம் மக்களது சுய நிர்ணய கோரிக்கையை அங்கீகரிப்பதா இல்லையா என்பதல்ல. அமையும் தமிழீழத்தில் இப்படிப்பட்டதோர் பிரிவினைக் கோரிக்கையே எழாதவகையில் முஸ்லிம்களது பாதுகாப்பையும், ஜனநாயக உரிமைகளையும் உத்தரவாதப்படுத்துவது எப்படி என்பதே உண்மையான பிரச்சினையாகும். தமிழீழ விடுதலையை முன்னெடுக்கும் எந்தவொருபுரட்சிகர தாபனமும் தமிழீழத்திலும் சிறுபான்மை இனங்கள் குறித்து விரிவான நீண்ட கால கண்ணோட்டத்தை கொண்டிருப்பது அவசியமானது. சிறுபான்மை இனங்களை நசுக்கும் எந்தவொரு இனமும் சுதந்திரமாக இருக்கமாட்டாது என்பதை உணர்ந்து கொண்டால் தமிழீழத்திற்கு உண்மையான ஆபத்து சிறுபான்மை இனங்களல்ல. தமிழ் இனவாதமே என்பதை புரிந்து கொள்வது சிரமமானதாக இருக்கமாட்டாது. சிறுபான்மை இனங்களின் உரிமை என்பது ஏதோ பெரும்பான்மை இனம் மனமிரங்கிக் கொடுக்கும் சலுகைகள் அல்ல. பெரும்பான்மை இனம் போன்றே ஏனைய சிறுபான்மை இனங்களும் அரசமைப்பதிலும் ஆட்சியதிகாரத்திலும் பங்கெடுப்பதற்கு உள்ள அடிப்படை உரிமையாகும். பெரும்பான்மை இனம் செய்ய வேண்டியதெல்லாம் இதனை அங்கீகரிப்பது மட்டுமே இதனை அங்கீகரிக்க பெரும்பான்மை இனம் தவறும் பட்சத்திலேயே இனப்பூசல்களும் போராட்டங்களும் வெடித்து பிரிவினை கோரிக்கைகள் எழுகின்றன. ஆகவே சுயநிர்னய உரிமை என்பது யாரோ கொடுக்கும் பிச்சையல்ல. முரணற்ற ஜனநாயகத்திலிருந்து பிறக்கும் சிறுபான்மை இனங்களின் அடிப்படை உரிமையாகும். பெருந் தேசியத்தால் பலவருடமாக ஒடுக்கப்பட்டு வந்த தமிழ்த் தேசிய இனமானது இன்னோர் சிறுபான்மை சமூகமான முஸ்லிம் மக்களது பிரச்சினை தொடர்பாக ஒரு ஆரோக்கியமான கண்ணோட்டத்தை கொண்டிருக்காதது மிகவும் துரதிஸ்டவசமானது முஸ்லிம் மக்களது சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதன் மூலமே தமிழ் தேசிய இனமும் தனது சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்திற்கு சர்வதேச அளவில் தார் மீக அங்கீகாரத்தை பெறமுடியும்.

ச.கிறிஸ்தோபர்.

www.tamilarangam.net

# ‘தேசிய சக்தி’ பற்றிய சில பிரச்சினைகள்

**— ஏகலைவன் —**

இன்றைய யுத்தத்தில் புலிகளை எவ்வாறு மதிப்பிடுவது என்பது தொடர்பாக பல வாதப்பிரதிவாதங்கள் கடந்த சில காலமாகவே நடைபெற்று வருகின்றன. ஒரு பகுதியினர் புலிகளை பாசிச சக்தியாக இனங் கண்டு அதனை அழிப்பதே பிரதான பணி என்ற வகையில் செயற்படுகின்றார்கள். இன்னோர் பகுதியினர் புலிகளின் போராட்டத்தில் உள்ள தேசிய அம்சங்களைக் கருத்திற் கெடுத்து அதனை தேசிய சக்தியாக இனங்கண்டு அதனைப் பலப்படுத்தும் அளவிற்கு செல்கிறார்கள்.இந்த இரண்டு நிலைகளுக்கும் இடைப்பட்ட நிலைப்பாடுகளை பல்வேறு சக்திகள் மேற்கொள்கின்றன. இன்று தீவிரம் அடைந்து வரும் யுத்த நிலைமையில் ஒவ்வொரு அமைப்பும் தனது செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு முன்பு புலிகள் பற்றிய தனது நிலைப்பாட்டை வகுத்துக்கொ ள்வது அவசியம் என்பதால் தேசிய சக்தி தொடர்பான பலதரப்பட்ட வாதப்பிரதிவாதங்களையும் பரிசீலிப்பது அவசியமானது. தேசிய சக்தி தொடர்பான பல்வேறு நிலைப்பாடுகளையும் பரிசீலிப்பதற்கு முன்பு தேசியம் என்பது பற்றி ஒரு தெளிவான வரையறையை கொண்டிருப்பது அவசியம் என்பதால் நாம் முதலில் முகம் கொடுக்கும் பிரச்சினை, தேசியம் என்பது என்ன? என்பதாகும்.தேசியம் என்பது ஒரு வரலாற்றுப் பூர்வமான நிகழ்வாகும். முதலாளித்துவத்தின் தோற்றத்துடன் உருவாகும் விரிவான பண்ட உற்பத்தியானது ஒரு பாரிய சந்தையை வேண்டி நிற்கிறது. இதனால் அதுவரையில் நிலவிவந்தசிறுபண்ட உற்பத்தியிற்கு பொருத்தமான குறுகிய,தன்னிறைவு கிராமிய பொருளாதார முறையும் அதனுடன் இணைந்த சமூக இனங்காணலும் சிதைந்து புதிய வகையிலான இனம்காணல் உருவாகிறது . பரந்த,விரிவான பிரதேசத்தில் தொடர்ச்சியாக வாழும், ஒரே மொழியையும், பொதுவான கலாச்சாரத்தையும் கொண்ட மக்கள் பழைய கிராமிய இனங்காணலை கடந்து தேசிய இனங்களாக தம்மை இனம்காண முனைகின்றன. இதுவே தேசியத்தின் தோற்றமாகிறது. இவ்வாறு முதலாளித்துவத்தின் ஆரம்பகால கட்டத்தில் தேசிய இனங்கள் விழிப்படைகி ன்றன.இந்த தேசிய எழுச்சியானது நடப்பில் இருந்து வரும் நிலப்பிரபுத்துவ உற்பத்திமுறை, ஆதிக்க முறைகளுக்கும், நிலப்பிரபுத்துவ சமூகத்தின் குறுகிய உணர்வுகளுக்கும் எதிரானது என்பதால் இது இயல்பாகவே நிலப்பிரபுத்துவ எதிர்ப்புத்தன்மை கொண்டதாகவும்,முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியை நோக்கி இட்டுச் செல்வதால் வரலாற்றில் முற்போக்கானபாத்திரம்வகிப்பதாகவும் இருக்கிறது.

முதலாளித்துவமானது இன்னும்வளர்கையில்மூலதனமும், சந்தையும் குறிப்பிட்ட தேசிய இனத்தின் எல்லைகளை கடந்து ஏனைய தேசிய இனங்களின் மூலதனம், உழைப்பு, சந்தை ஆகியவற்றுடன் கலக்கும் நிலைமை உருவாகிறது. இந்தவகையான பொருளாதாய நிலைக்கு பொருத்தமான சமூக உணர்வாக தேசிய இனங்கள் ஒன்று கலப்பது எனும் நிகழ்வு தோன்றுகிறது.

ஆகவே தேசியம் என்பது முதலாளித்துவத்தின் வளர்ச்சியுடன் இரண்டு திட்டவட்டமான இயக்கப்போக்குகளை காட்டுகிறது. முதலாளித்துவத்தின் ஆரம்பகாலத்தில் தேசிய இனங்கள் விழிப்படைவது ஒரு கட்டம். முதலாளித்துவம் முதிர்ந்த நிலையில் தேசிய இனங்கள் ஒன்று கலப்பது இன்னோர் கட்டம் ஆகும்.

காலனித்துவத்திற்கு உட்பட்ட நாடுகளின் தேசிய எழுச்சியானது ,முதலாளித்துவம் இயல்பாக தோன்றி வளர்ந்த நாடுகளில் ஏற்பட்ட



தேசிய எழுச்சியில் இருந்து வேறுபட்டதாகும். காலனிஆதிக்கத்தை முன்னெடுக்கும் வளர்ந்த முதலாளித்துவ நாடுகளின் உடனடி நோக்கம் ஏனைய நாடுகளை சுரண்டுவதும் கொள்ளையடிப்பதுமேயாகுஇந்த நோக்கத்திற்கு பொருத்தமான விதத்தில் ஆதிக்க் நாடுகள்காலனி நாடுகளின் பொருளாதரர அமைப்புகளை, தனக்குச் சேவை செய்யும் விதத்தில் மாற்றியமைக்கின்றன. காலனி நாடுகளில் முதலாளித்துவம் சுயமாக வளர்வதை தடுத்து காலனிநாடுகள் தனது முதலாளித்துவ உற்பத்திக்கு சேவையாற்றும் விதத்தில் மலிவான மூலப்பொருட்களை விநியோகிக்கவும், தனது உற்பத்திப் பொருட்களுக்கு இலாபகரமான சந்தையாகவும் அமையும் விதத்தில் மாற்றி விடுகின்றன. உள்ளூர் உற்பத்தி முறைகள் திட்டமிட்டு சிதைக்கப்படுகின்றன. தமது உற்பத்திப் பொருட்களுக்கான சந்தையை செயற்கையான முறையில் உருவாக்கப்படுகின்றன. இதன் மூலம் காலனி நாடுகளின் பொருளாதாரத்தை தனது நாட்டின் முதலாளித்துவ உற்பத்தி முறையுடன் பலவந்தமாக பிணைத்து விடுகின்றனர். இப்படியாக ஆதிக்கநாடுகளின் நலன்களுக்கு கீழ்ப்பட்ட விதத்திலேயே உள்ளூர் முதலாளித்துவம் தோன்றவும், வளரவும் ஆதிக்க நாடுகள் அனுமதி அளிக்கின்றன.

இப்படிப்பட்ட சாதகமற்ற நிலையிலேயே காலனிநாடுகளில் முதலாளித்துவம் தோன்றி மெதுவாக வளர்கிறது. இவ்வாறு மெதுவாக வளர்ந்து வரும் முதலாளித்துவமானது தனது வளர்ச்சியின் ஒரு கட்டத்தை அடைகையில் அது ஆதிக்க நாடுகளின் நலன்களுடன் நேரடியாக முரண்படத் தொடங்குகிறது. இந்த நிலையில் ஆதிக்க நாடுகளின் பிடியில்இருந்து விடுதலை பெறுவது காலனி நாடுகளின் முதலாளித்துவத்தின் வளர்ச்சிக்கு அவசியமாகிறது. இதனால் தேசிய முதலாளித்துவ வர்க்கமானது ஆதிக்க சக்திகளின் சுரண்டலினாலும்,ஒடுக்கு முறையினாலும் பாதிக்கப்பட்டு ஏற்கனவே வெறுப்புற்றிருக்கும் ஏனைய வர்க்கங்களையும் இணைத்துக் கொண்டு காலனி ஆதிக்கத்திற்கு எதிரான போராட்டத்தில் குதிக்கிறது. காலனி நாடுகளில் தேசியமானது ஆதிக்க நாடுகளுக்கு எதிரான போராட்டத்தில் பிறக்கிறது. இந்த நிலையில் ஆதிக்க நாடுகளில் பொருளாதாரத்துடன் தம்மை நெருக்கமாக பிணைத்துக் கொண்டுள்ள உள்ளூர்தரகு முதலாளிகளைப் பொறுத்தவரையில் ஆதிக்க நாடுகளை எதிர்ப்பது என்பது அதன் பொருளாதாய நலன்களுக்கு முரணானது என்பதால் இந்த வர்க்கமானது ஆதிக்க நாடுகளுக்கு விசுவாசமாக செயற் படுகிறது. இதனால் தேசிய சக்திகளின் இலக்குகளில் ஒன்றாகிறது. நிலப்பிரபுத்துவ வர்க்கங்கள் ஆதிக்க நாடுகளால் பாதுகாக்கப்படும் வர்க்கங்களாக இருப்பதனாலும், தேசிய எழுச்சியின் மூலம் தேசிய முதலாளி வர்க்கமும் ஏனைய சுரண்டப்படும் வர்க்கங்களும் தனது ஆதிக்கத்திற்கு முடிவு கட்டிவிடும் என்பதாலும் இந்த வர்க்கமும் தேசிய விடுதலைக்கு எதிரான நிலைப்பாட்டை எடுக்கிறது.ஆகவே தேசிய விடுதலை இயக்கத்தில் தேசிய முதலாளிகள்,குட்டி முதலாளிகள்,புத்திஜீவிகள், விவசாயிகள்,தொழிலாளர்கள் ஆகியோர் பிரதான இயங்கு சக்திகளாக இருக்கின்றன. தரகு முதலாளித்துவம்,நிலப்பிரபுத்துவம் என்பன போராட்டத்தின் இலக்குகளாகின்றன.

இலங்கையில் தேசிய எழுச்சியானது இந்தியாவின் தேசிய எழுச்சியிலும் பார்க்க அடிப்படையில் வேறுபட்ட சில அம்சங்களைக் கொண்டதாகும். இந்தியாவில் போலன்றி இலங்கையில் முதலாளித்துவ சக்திகள் போதியளவு பலம்பெற்றதாக விளங்கவில்லை . மிகவும் பலவீனமாக முதலாளித்துவமானது மிகவும் பலவீனமான தேசியத்தையே தோற்றுவித்து. இலங்கையில் சாராயக் குத்தகை, காரீயச்சுரங்கம் போன்ற துறைகளில் மூலதனமிட்டு வளர்ந்து வந்த பலவீனமான முதலாளித்துவசக்திகள் பிரித்தானிய முதலாளித்துவ சக்திகளுடன் மோதுமளவிற்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பலம்பெற்று விளங்கவில்லை. இந்த சக்திகளது போட்டியாளர்களாக விளங்கியது பிரித்தானிய முதலாளிகள் அல்ல. மாறாக உள்ளூரில் ஏற்கனவே வியாபாரம் போன்றவற்றில் ஈடுபட்டு வந்த தமிழ், முஸ்லீம், இந்திய வியாபாரிகளே இவர்களது முதல் இலக்காக இருந்தார்கள். சிங்கள, பௌத்த தேசிய வாதத்தை முன்னெடுத்த இவர்கள் பிரித்தானிய காலனி ஆதிக்கத்துடன் மோதுவதற்குப் பதிலாக ஆரம்பத்திலேயே சிறுபான்மை இனங்களை நசுக்கும் வடிவத்தை பெறலானார்கள்.

ஐரோப்பிய நாடுகளில்உருவானமுற்போக்கான சிறுபான்மையினரையும் அணைத்துச் செல்லும் ஜனநாயகப் புரட்சியின் ஒரு பகுதியாக அமைந்த தேசியத்திற்குப் பதிலாக இலங்கையில் ஏகாதிபத்தியற்கு சேவை செய்யும்சிறுபான்மை இனங்களுக்கு எதிராக பிற்போக்கு அம்சங்களை முன்னெடுக்கும், ஜனநாயகத்தை மறுக்கும் 'குறுகிய' தேசியவாதமே தோற்றம்பெற்றது.

ஒரு நாட்டில் தோன்றும் தேசிய இயக்கம் எந்த அளவிற்கு பலம்பெற்றதாக விளங்குகிறது என்பது இரண்டு முக்கிய காரணிகளில் தங்கியிருக்கிறது.முதலாவது, அந்த நாட்டில் தோன்றும் முதலாளித்துவ பலம் எப்படிப்பட்டது என்பது, பலமான முதலாளித்துவ வளர்ச்சி முற்போக்கான தேசியத்தை தோற்றுவிக்கிறது. பலவீனமான முதலாளித்துவமானது பிற்போக்கான தேசியத்தை தோற்றுவிக்கிறது.

இரண்டாவது, தேசியம் என்பதில் அந்த சமூகத்தின் பல்வேறு வர்க்கங்களின் நலன்களும் பிரதிபலிக்கச் செய்கின்றன. தேசிய எழுச்சியில் இணைந்து கொள்ளும் ஒவ்வொரு வர்க்கமும் தத்தமது நலன்களை மனதில் கொண்டே செயற்படுகின்றன. எந்தவர்க்கம் தேசிய இயக்கத்தை தலைமை தாங்குகிறது என்பதைப் பொறுத்து தேசிய இயக்கத்தின் முற்போக்கான தன்மை அமைகிறது.

தமிழ் தேசியமானது சிங்களப் பேரினவாதத்திற்கு எதிரான போராட்டத்திலேயே உண்மையில் தோற்றம் பெற்றது. சுதந்திரத்திற்குப் பின்பு அதிகாரத்திற்கு வந்த சிங்களத் தரகு முதலாளித்துவ வர்க்கம் இனவாத கண்ணோட்டத்துடன் முன்னெடுத்த பல்வேறு இனஒடுக்குமுறை நடவடிக்கைகள் தமிழ்த் தேசிய இனத்தின் பல்வேறு வர்கங்களையும் வர்கத் தட்டுக்களையும் தேசிய இயக்கத்தில் குதிக்குமாறு தூண்டியது. மலையகமக்கள் பிரஜாஉரிமை, வாக்குரிமை பறிப்பு, தமிழ்ப் பிரதேசம் திட்டமிட்ட விதத்தில் பொருளாதாரரீதியாக பாகுபாட்டுடன் நடத்தப்படல், குடியேற்றம், சிங்களம் மட்டும் என்றமொழிக்கொள்கை கல்வி வேலைவாய்ப்புக்களில் காட்டிய பாரபட்சம் போன்றவை இறுதியில்இனக்கலவரம், இனப்படுகொலை எனும் வடிவங்களை எட்டிய பின்பு தமிழ்த் தேசிய இனத்தில் ஒவ்வொரு வர்க்கமும், வர்க்கத்தட்டும் தேசியத்தை நோக்கி தள்ளப்படுவது தவிர்க்க முடியாததாகியது.

நவகாலனித்துவ பிடியில் சிக்கியுள்ள குறைவிருத்தி நாடுகளில் தேசிய முதலாளிவர்க்கம் இருக்கமுடியுமா? என்ற பிரச்சினையுடன் கூடவே சிங்கள தரகு முதலாளித்துவ அரசு இனவாத கண்ணோட்டத்துடன் கடைப்பிடித்த தமிழ்ப்பிரதேசத்தை கைத்தொழில் ரீதியாக வளரவிடாமல் தடுக்கும் கொள்கையின் காரணமாகவும் தமிழ்ச்சமுதாயத்தில் குறிப்பிடத்தக்க பலத்துடன் தேசியமுதலாளி வர்க்கம் என்ற ஒன்று காணப்படவில்லை. அல்லது மிகவும் பலவீனமாகவே இருக்கிறது. அப்படி யாராவது இருப்பின் அவர்கள் சிறு உற்பத்தியாளர்கள் என்ற வகையில் தான் உள்ளார்கள். இவர்கள் சிறீலங்கா அரசின் பேரினவாத ஏகாதிபத்திய சார்பு நிலைபாடுகளால் பாதிக்கப்பட்டவர்கள்.இதனால் தமிழ்த் தேசியத்தின் ஆதரவாளர்கள். ஆனால் வர்க்கம் என்ற வகையில் குறிப்பிடத்தக்க பங்காற்றும் அளவிற்கு இவர்கள் பலமானவர்கள் அல்ல.



பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் தரகு முதலாளி வர்க்கத்தில் குறிப்பிடத்தக்க பங்காற்றிய தமிழ்த்தரகு முதலாளிகள் சுதந்திரத்திற்கு பின்பு அரசினால் படிப்படியாக ஒதுக்கப்பட்டு வந்துள்ளார்கள். அடுத்தடுத்து வந்த இனக்கலவரங்கள் இவர்களை இன்னும்பலவீனமடையச் செய்துள்ளது. இவர்கள் சிங்கள தரகு முதலாளி வர்க்கத்துடன் சந்தையை பங்கு போட்டுக் கொள்வதற்காக போட்டியிடுகின்றார்கள். ஆனால் அரசும் பேரினவாதமும் இவர்களைத் தடுக்கிறது.இதனால் இவர்கள் சிங்கள பேரினவாத தரகு முதலாளித்துவ அரசுக்கு எதிராக தமிழ்த்தேசியத்தை ஆதரிக்கிறார்கள். தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தை அரசுடன் பேரம் பேசும் சாதனமாக பயன்படுத்தப் பார்க்கிறார்கள்.பேரம் பேசலின் மூலம் தமக்குரிய பங்கைப் பெறமுடியாத விடத்தில் தமிழ்ச் சந்தையை தனியே பிரித்தெடுத்து அதனை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கு முயல்கிறார்கள். ஏகாதிபத்திய எதிர்ப்போ,இந்திய மேலாதிக்க எதிர்ப்போ இவர்களது நிலைப்பாடல்ல.தனது சித்தாந்த அரசியல் செல்வாக்கை தேசிய விடுதலைப் போராட்டத்தில் நிலைநாட்ட இந்த வர்க்கம் பலவழிகளிலும் தொடர்ந்து முயற்சி செய்யும்.

குட்டி முதலாளிகள் புத்திஜீவிகள் போன்றோர் அரசின் பேரினவாத நடவடிக்கைகளான மொழிக்கொள்கை, கல்வி- வேலைவாய்பிலான பாரபட்சம் , குடியேற்றம், இன ஒழிப்பு நடவடிக்கைகள் போன்றவற்றால் தேசிய இயக்கத்திற்குள் தள்ளப்பட்டுள்ளார்கள். தேசிய இயக்கத்தின் முக்கிய சக்தியாக இவர்கள் இருப்பினும் ஒரு உறுதியான, புரட்சிகரமான நிலைப்பாட்டைத் தொடர்ந்து முன்னெடுக்க மாட்டாதவர்கள். ஊசலாட்ட சக்திகள் முதலாளித்துவ சித்தாந்தத்தின் பலமான காவிகள். தேசிய இயக்கத்தில் ஏற்படும் ஊசலாட்டங்களுக்கு பெரிதும் காரணமானவர்கள்.ஸ்ரீ லங்கா அரசின் குடியேற்றம், திறந்த பொருளாதாரக் கொள்கைகள் காரணமாகவும் இன ஒழிப்பு நடவடிக்கைகள் காரணமாகவும் விவசாயிகள் , நிலப்பிரபுத்துவ சக்திகள், பணக்கார விவசாயிகள்,நடுத்தர, வறிய விவசாயிகள், விவசாயக்கூலிகள் போன்ற அனைவரும் உள்ளடங்கலாக சிங்கள பேரினவாத,தரகு முதலாளித்துவ அரசிற்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளார்கள்.தேசிய விடுதலை என்பது ஒரு வகையில்நிலம்பற்றிய பிரச்சினையாகவும் இருப்பதால் இவர்கள் தேசியவிடுதலையின் முக்கிய ஆதரவாளர்கள். குறிப்பாக இதன் அடித்தட்டுக்கள் பலமான ஆதரவாளர்களாவர். தேசிய விடுதலை இயக்கத்திற்கு பெருமளவிலான போராளிகள் இவர்கள் மத்தியில் இருந்தே தோன்றுகிறார்கள்.

தொழிலாளி வர்க்கமானது இலங்கையின் குறைவிருத்தி காரணமாகவும், வடக்கு- கிழக்கில் தொடந்து இடம்பெற்ற பொருளாதார பாரபட்சம் காரணமாகவும் தமிழ்ப்பிரதேசத்தில் கைத்தொழில் விருத்தி மிகவும் குறைவு. இதனால் தொழிலாளர் வர்க்கத்தின் எண்ணிக்கை மிகவும் குறைவாகும். சிங்கள பேரினவாதத்தால் இவர்களும் பாதிக்கப்படவே செய்கிறார்கள். பொதுவாகவே பேரினவாத ஒடுக்கு முறையின் கொடுமையை சுரண்டும் வர்க்கங்கள் சுரண்டப்படும் வர்க்கங்களின் தலையில் சுமத்திவிடுவதால் சுரண்டப்படும் வர்க்கங்களே அதிகளவில் துன்பத்திற்குள்ளாகின்றன. இந்தவகையில் சுரண்டப்படும் வர்கங்கள் தேசிய விடுதலைப் போராட்டத்தில் பலமான பங்காற்றக் கூடியவை. ஆனால் ஒரு வர்க்கம் என்றவகையில் இது எண்ணிக்கையில் சிறிதாகும். ஏனைய வர்க்க சித்தாந்தங்களுக்கு பலியாகிப் போயிருப்பது இதன் பிரதான குறைபாடாகும். தமிழ்தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஒரு பலமான பாட்டாளிவர்க்க கட்சி தோன்றாததற்கான காரணங்களை பாட்டாளிவர்க்கத்தின் பலவீனமான நிலையுடன் இணைத்துப் பார்க்கையில் புரிந்து கொள்ளக் கூடியதே.

www.tamilarangam.net

ஆகவே தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் பல்வேறு வர்க்கங்களின்நலன்களும் பிணைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வர்க்கமும் தன்னுடைய வர்க்கநலன்கள் என்ற கண்ணோட்டத்திலிருந்தே இதனை அணுகுகின்றன. தேசிய விடுதலைப் போராட்டத்தில் எழும் பல்வேறு திருப்பு முனைகளின் போது பலதரப்பட்ட கோரிக்கைகளை புரிந்து கொள்ள வேண்டுமாயின் அந்த கோரிக்கைகளின் பின்னால் ஒழிந்திருக்கும் நலன்கள் எந்த வர்க்கத்திற்குரியவை எனக் கண்டறிய வேண்டும். தேசிய இயக்கத்தில் ஏற்படும் முன்னேற்றங்களையும்,பின்னடைவுகளையும் அந்தந்த காலகட்டத்தில் போராட்டத்தில் தலைமை கொடுக்கும் வர்க்கங்களை இனம்கண்டு கொள்வதன் மூலமே விளக்கமுடியும். இவ்வாறு தமிழ்த் தேசியத்தின்பலம், பலவீனம்கள், முற்போக்கான, பிற்போக்கான அம்சங்களைப் புரிந்து கொள்வதற்கும் தமிழ் சமுதாயத்தில் ஏற்படும் முதலாளித்துவ உற்பத்தி முறையின் வளர்ச்சி நிலையும் போராட்டங்களுக்கு தலைமை தாங்கும் வர்க்கங்களின் தன்மையையும் புரிந்து கொண்டாலேயே விளக்கமுடியும்.

தமிழ்த்தேசியத்தின் குறிப்பான தன்மைகள் எவை?

நிலப்பிரபுத்துவ கட்டுத் தளைகளினுள் தோன்றி வளரும் முலாளித்துவமானது ஒரு முன்னேற்றகரமான உற்பத்தி முறையாகும். இந்த முதலாளித்துவ உற்பத்தி முறையானது அதன் வளர்ச்சிக்கு அவசியமான பல முற்போக்கான சமூகவடிவங்களை,மதிப்பீடுகளை படைக்கிறது. இதனால் நிலப்பிரபுத்துவத்தின் பிற்போக்கான மதிப்பீடுகளை தகர்த்தெறியும்தேசிய இயக்கமானது பலமுற்போக்கான அம்சங்களை கொண்டிருக்கிறது. முற்போக்கான தேசியவாதம் என்பது பல விருவான . மானுட விழுமியங்களையும் படைப்பதாக இருக்கவேண்டும். பழைய நிலபிரபுத்துவ மதிப்பீடுகளை கடந்து வருவது பிரதேச, சாதி, மத தடைகளை கடந்து இனம்காண முற்படுவது என்பது தேசியத்தின் முற்போக்கான அம்சங்களுள் ஒன்றாகும். தேசிய இனப்பிரச்சினை என்பது அடிப்படையில் இனங்களுக்கிடையிலான ஜனநாயகம் பற்றிய பிரச்சினையாகும். முதலாளித்துவத்தின் வளர்ச்சிக்கு பண்டங்களை மட்டுமல்ல உழைப்பை விற்பதிலும் மூலதனத்தை இடுவதிலும், சந்தையில் சுதந்திரமாகவும், சமத்துவமாகவும் போட்டியிடும் நிலமை இருப்பது அவசியமானது. இதனால் முதலாளித்துவ வர்க்கமானது சுதந்திரப் போட்டிக்கு அவசியமான ஜனநாயகத்தை வலியுறுத்துகிறது. எந்தவொரு தேசிய இனப்பிரச்சினைக்கும் முதலாளித்துவத்தினுள் முரணற்ற ஜனநாயகத்தின் மூலம் தீர்வு. காணலாம். ஆகவே தேசிய விடுதலைப் போராட்டம் என்பது கூட தன்னளவில் ஜனநாயகத்தை கொண்டிருப்பது அவசியமானது. தமிழ்த் தேசியத்தை இந்த வெளிச்சத்தில் பரிசீலித்தால் அதன் முற்போக்கான , பிற்போக்கான அம்சங்களை இனம் காண முடியும். தமிழ்த் தேசியமானது சிங்கள பேரினவாதத்திற்கும் தரகு முதலாளித்துவ அரசுக்கும் எதிரானது என்ற வகையில் நடப்பிலுள்ள சமூக அமைப்பை எதிர்த்துப் போரிடும் முற்போக்கான அம்சங்களைக் கொண்டதாகும். ஏகாதிபத்தியத்தின் நலன்களுடனும், இந்திய மேலாதிக்க நலன்களுடனும் இது ஏற்கனவே முரண்பட்டுள்ளமை இதன் முற்போக்கான பாத்திரத்தின் வெளிப்பாடாகும். ஆனால் தமிழ்த் தேசியமானது பல குறுகிய மதிப்பீடுகளை கொண்டிருப்பதும் கவனிக்கத்தக்கதாகும். யாழ், இந்து, சாதிய எல்லைக்குள் இன்னும் சிக்கிக் கொண்டிருக்கிறது. பிரதேச சாதிய மத எல்லைகளைக் கடந்து ஒரு விருவான தேசியமாக இதனால் வளர முடியும்.

ஜனநாயகம் என்பது தேசிய இனப்பிரச்சினையில் அடிப்படையிலான் பிரச்சினையாக இருக்கையில் தேசியவிடுதலை அமைப்பே பாசிச் வடிவம் பெறுவது என்பது இன்னோர் முரண்பாடாகும். புலிகள் மட்டுமல்ல கடந்த காலத்தில் அநேகமாக எல்லா அமைப்புகளுமே மக்களுக்கும் சொந்தத்



தோழர்களுக்கும் எதிராக ஒரு தடவையேனும் ஆயுதத்தைத் திருப்பாமல் இருக்கவில்லை. ஆகவே பாசிசவடிவம் இல்லையென்றாலும் ஜனநாயமின்மை என்பது எல்லாஅமைப்புக்குள்ளும் ஊடுருவியது எப்படி? ஏனைய சிறுபான்மை இனங்களை அணைத்துக் கொண்டு செல்வது தேசியத்தின் முற்போக்கான அம்சங்களில் ஒன்றாகும். ஆனால் முஸ்லிம் மக்களுக்கு எதிரான செயற்பாடுகள் எதனைக் காட்டுகின்றன.

தமிழ்த் தேசியமானது பல்வேறு பிரதேச, சாதிய பிரிவினரையும் மதசிறுபான்மையினரையும் அணைத்துச் செல்லும் அளவிற்கு விரிவானதாக பரந்ததாக இல்லை என்பதுதான் உண்மை. இந்த அர்த்தத்தில் இது குறுகியதே (மனிதம்,தூண்டில் ஆகிய இரண்டும் இதே கருத்தையே கொண்டிருப்பினும் இதனை எந்தப் பதத்தால் குறிப்பிடுவது பெருந்தேசியம் என்பதா? குறுந்தேசியம் என்பதா? என்பதிலையே முரண்படுகிறார்கள்.)

தமிழ்த் தேசியத்தில் காணப்படும் இந்த பலவீனமான பிற்போக்கு அம்சங்களை எப்படி விளக்குவது?

இந்த கேள்விக்கான விடையை காண்பதற்கு முதலில் இரண்டு தத்துவ பிரச்சினைகளை தெளிவுபடுத்திக் கொள்வது அவசியமானது. முதலாவது பிரச்சினை, குறிப்பிட்ட ஒரு சமூக அமைப்பையும்அதில் தோன்றும் பல்வேறு பிரச்சினைகளையும் அச்சமுதாயத்தில் நடப்பில்இருக்கும் பல்வேறு கருத்துப் போக்குகளையும் புரிந்து கொள்வதற்கான வழிமுறை என்ன? என்பதாகும். ஸ்தூலமான நிலமைகளில் ஸ்தூலமான ஆய்வு என்பதே இதற்கான ஒரே வழிமுறையாகும். குறிப்பிட்ட சமுதாயத்தின் பொருளாதார அடித்தளத்தை சரியாக இனங்காணுதல், உற்பத்தி சக்தியின் வளர்ச்சி நிலை, அதிலிருந்து தோன்றும் பல்வேறு வர்க்கங்கள், இந்த வர்க்கங்கள் குறிப்பான நலன்கள், அவை அரசியலில் பிரதிபலிக்கும் விதம் போன்றவற்றை புரிந்து கொண்டால் மட்டுமே ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் எழும் பல்வேறு சமூக சக்திகளின் அரசியல் போக்குகளை புரிந்து கொள்வதும் சரியான அரசியல் நிலைப்பாட்டை வகுத்துக் கொள்வதும், அச்சமுதாயத்தை புரட்சிகரமாக மாற்றியமைப்பதும் சாத்தியப்படும்.

இன்று தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் சம்பந்தப்படும் பல்வேறு சக்திகளை மதிப்பிடுவது எப்படி? என்ற விவாதத்தில் தூண்டில் தமிழ் சமுதாயத்தில் தேசிய முதலாளிகள் இல்லாவிட்டாலும் பலஉறுதியான தேசியம் உருவாக்கலாம் என நிருபிக்க முனைகயில் குறிப்பிட்ட ஒரு கருத்தானது சமூகத்தில் அது பிரதிபலிக்கும் குறிப்பிட்ட ஒரு சமூகசக்தி தோன்றும் முன்பே உருவாகலாம் எனக் கூற முனைகிறது. தனது நிலைப்பாட்டை இன்னும் உறுதிப் படுத்தும் வகையில் தூண்டில் மார்க்சியத்தின் தோற்றமானது பாட்டாளிவர்க்கத்தின் தோற்றத்திற்கு முன்பே நடைபெற்றது எனும் கருத்துப்பட கூற முனைகிறது. ஆகவே சமூக சக்திகளுக்கும் அவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கருத்துக்களுக்கும் உள்ள தொடர்பு என்ன என்பதை முதலில் தெளிவு படுத்திக் கொள்வது அவசியமாகும்.

கருத்துக்கள் என்பவை ஒரு சமூக உருவாக்கமாகும். சமூக நடைமுறைகளின் அனுபவங்கள் தொகுக்கப்பட்டு பொதுமைப்படுத்தப்பட்டு அவற்றை ஒரு ஆட்சுமப்படுத்தப்பட்ட வடிவத்திற்கு வளர்த்தெடுக்கையில் தத்துவமாகிறது. மீண்டும் இந்தத்துவமானது சமூக நடைமுறைகளை இன்னும் சிறப்பாக முன்னெடுக்க வழிகாட்டுகிறது. இந்த விதத்தில் கருத்தானது சமூக நடைமுறையிலிருந்து பிறப்பது. குறிப்பிட்ட வரலாற்றுச் சக்தியின் உருவாக்கத்தின் பின்பே குறிப்பிட்ட கருத்துக்களும் தத்துவங்களும் உருவாகின்றன.

கருத்துக்கள், தத்துவங்கள் வெறும் பிரதிபலிப்புக்கள் மட்டுமல்ல இவை நடைமுறையை பாதிக்ககூடியவை செல்வாக்கு செலுத்தக்கூடியவை என்பதைக்ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால் இந்த செல்வாக்கு

www.tamilarangam.net

செலுத்தும் நிலைஎன்பது குறிப்பிட்ட சமூக சக்திகள் இன்றியே கருத்துக்கள் உருவாக்கலாம் என வலியுறுத்தும் அளவிற்கு போய்விடக்கூடாது.

முதலாளித்துவ உற்பத்தி முறை 16ம், 17ம் நூற்றாண்டுகளில் சிறிது சிறிதாக ஆரம்பித்தாலும் 1760 களை அடுத்து வரும் 50 ஆண்டுகளில் நடைபெற்ற கைத்தொழில் புரட்சியின் மூலம் தான் முதலாளித்துவ உற்பத்தி முறை பிரதான உற்பத்தியாக ஆனது. கைத்தொழில் புரட்சியானது அதுவரையில் நடப்பில் இருந்து வந்த சமூக அமைப்பில் உற்பத்தி முறை ,வர்க்கங்கள், வர்க்க அமைப்புகள், அரசியல் அதிகாரம், வியாபாரம், முதலீடு, வெளிநாட்டுக் கொள்கை போன்ற அனைத்திலுமே பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியது. பெருமளவில் பாட்டாளிகள் தோன்றி நகரங்களில் தொழிற்சாலைகளை அண்டி குடியேறினார்கள். இவ்வாறு நகரங்களில் திரட்டப்பட்ட பாட்டாளிகள் தமது மோசமான வாழ்க்கை நிலை வேலைநிலமைகள் சுரண்டல் போன்றவற்றை எதிர்த்து பகிரங்கமாகவே போராடினார்கள். இந்த போராட்டமானது ஆரம்பத்தில் தனிப்பட்ட சிறு களவுகள் அபகரிப்புகள் என ஆரம்பித்து (களவு என்பது சொத்துடமை உறவின் புனிதத்தன்மையை மீறுவது என்ற அர்த்தத்தில் இது தன்னளவில் உள்ளார்ந்த வகையில் சுரண்டலுக்கும்,நடப்பிலுள்ள சொத்துடமை உறவுகளுக்கும் எதிரானதாகும்.வர்க்க விரோத உணர்வின் முரட்டுத்தனமான வெளிப்பாடாகும்) முதலாளித்துவத்தின் உற்பத்தி இயந்திரங்களை உள்ளடக்கும் வடிவத்திற்கு வளர்ந்து அடுத்த கட்டத்தில் தொழிற்சங்க அமைப்பாக திரண்டு, தொழிலாளர்களது திட்டவட்டமாக வடிவமைக்கப்பட்ட போராட்டமாகிறது. தொழிற்சங்க போராட்டங்கள் கூட ஆரம்பத்தில் வெறும் பொருளாதாரக் கோரிக்கைகளுடன் தொடங்கி அரசியற் கோரிக்கைகளாக பரிணமித்தன. இந்த போராட்டங்களின் போது பல கற்பனாவாத சோசலிசக் கருத்துக்கள் தொழிலாளர்களிடையே செல்வாக்கு செலுத்தத் தொடங்கின. தொழிலாளர்களது இந்த உயிர்த்துடிப்புள்ள போராட்டங்களை 1845இல் ஏங்கல்ஸ் இங்கிலாந்தில் தொழிலாளர்கள்வர்க்கத்தின் நிலமை எனும் நூலில் படம்பிடித்து காட்டினார். இந்த நூலின் இறுதியில் தொழிலாளர் விரைவிலே புரட்சி மூலம் தனிச் சொத்துடமை உறவுகளுக்கு முடிவு கட்டி சோசலிசத்தை அமைப்பார்கள் என உறுதியாக கூறினார். இந்த நூல் வெளியாகி மூன்று வருடங்களின் பின்பு தான் அதாவது 1848இல் தான் கொம்யுனீஸ்டு கட்சியின் அறிக்கை எனும் மார்க்சியத்தின் முக்கியமான கொள்கைப் பிரகடனம் வெளிவந்தது. அதே ஆண்டிலேயே பிரஞ்சு கட்சியின் பிரான்ஸ் நாட்டின் பாட்டாளி வர்க்கம் தனது போர்க்குணாம்சத்தை இன்னொரு தடவை நிரூபித்தது. 1867 இல் மூலதனத்தின் முதல்பாகம் வெளிவந்தது. இதற்கு 4 ஆண்டுகளின் பின்பு பிரெஞ்சுத் தொழிலாளர்கள் தமது நாட்டில் பாரிஸ் கொம்யூனைநிறுவி பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்றால் என்ன என்று நிரூபித்தார்கள்.

இவை காட்டுவது என்ன? மார்க்சிசம் என்பது பாட்டாளி வர்கத்தின் தோற்றத்திற்கு முன்பே தோன்றியது அல்ல என்பதுதானே . பாட்டாளி வர்கத்தின் போராட்ட அனுபவங்களை பொதுமைப் படுத்தி அதனை ஒரு உயர்ந்த தத்துவமட்டதிற்கு மார்க்சியம் வளர்த்தெடுத்து. இதனால் அடுத்தடுத்த நடவடிக்கைகளில் பாட்டாளிவர்கத்தின் செயலுக்கு வழிகாட்டும் தகுதியை பெற்றது என்பது தானே.

இவ்வாறாக ஏனைய கருத்துக்களும் சமுதாயத்தின் வரலாற்றுப்போக்கில் தோன்றி வளர்ச்சியுற்றதைக் காணமுடியும். உதாரணமாக நிலபிரபுத்துவ சமூக அமைப்பில் அரசானது பிரபுக்களின் கரங்களில் இருப்பதை தெய்வீக உரிமை கோட்பாட்டின் மூலம் நியாயப்படுத்தப்பட்டது. முத முதலாளித்துவத்தின் தோற்றத்துடன் தெய்வீக உரிமைக் கோட்பாடு சமுதாய ஒப்பந்தக் கோட்பாட்டின் மூலம் பிரதியீடு செய்யப்பட்டது. புதிதாகதாக தோன்றிய முதலாளிவர்க்கம்



அரசதிகாரத்தில் பங்கு கேட்க முனைந்ததன் தெளிவான வெளிப்பாடு இது. இந்த சமுதாய ஒப்பந்தக் கோட்பாடானது பின்பு சொத்துடையவர்களின் வாக்குரிமை எனவும் அனைத்து மக்களின் வாக்குரிமை எனவும் இன்னும் விரிவு பெற்றது. இப்படியாக சமுதாய அரங்கில் புதிதாக தோன்றி வளர்ந்து வரும் ஒரு வர்க்கம் அல்லது சமூக சக்தி தனது நலன்களைக் காத்துக் கொள்ள புதிய கருத்துக்களையும் புதிய அரசியலையும் முன்னெடுக்கிறது. 1760களில் தோன்றிய கைத்தொழில் புரட்சியின் மூலம் பலம் பெற்ற முதலாளித்துவ வர்க்கம் 1789 இன் பின்பு பூர்சுவா ஜனநாயகப் புரட்சியின் மூலம் அரசியல் அதிகாரத்தை தனது கரங்களில் எடுத்துக் கொண்டது.

இப்படியாக வரலாற்றில் குறிப்பிட்ட சமூக சக்திகள் தோன்றி பலம் பெற்று வளரும் போதுதான் அவற்றின் நலன்களை வெளிப்படுத்தும் அரசியற்கோரிக்கை அரங்கிற்கு வருகின்றன. ஆகவே எந்த ஒரு அரசியல் கோரிக்கையையும் சரியாக புரிந்து கொள்ள வேண்டுமாயின், அந்தக் கோரிக்கையின் பின்னால் மறைந்திருப்பது எந்த வர்க்கத்தின் நலன்கள் என தெளிவாக இனங்கண்டு கொள்ள வேண்டும். எந்த ஒரு சமூக இயக்கத்தையும் புரிந்து கொள்ள, அது எந்த சமூக சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது என புறநிலையாக வைத்து மதிப்பிடவேண்டும் இதற்கு மாறாக கருத்துக்களை சமூக சக்திகளில் இருந்து பிரித்துப் பார்ப்பதோ அல்லது சமூக இயக்கங்களை தனிநபர்களின் சித்தத்தின் வெளிப்பாடாக காண்பதோ மார்க்சிய அணுகுமுறையாகாது. இது அகநிலைக் கண்ணோட்டமாகும். இவ்வாறாக சமூகசக்திகளை மதிப்பிடுவதில் இழைக்கும் அகநிலை தவறானது அடுத்தகட்டத்தில் தேசிய முதலாளிகள் இன்றியே பலமான தேசியம் இருக்கலாம் என்று' தூண்டிலை' கூறவைக்கிறது. ஆனால் இந்த வாதத்திற்கு போதிய ஆதாரங்களை வழங்க 'தூண்டில்'தவறிவிடுகிறது.

தமிழ்த் தேசியத்தை இனம் காண்பதற்கு முன்பு தீர்வு கண்டாக வேண்டிய அடுத்த தத்துவார்ந்த பிரச்சினை முதலாளித்துவத்தின் பண்புகள் பற்றியதாகும். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பல்வேறு சக்திகளையும் மதிப்பிடுவது தொடர்பான விவாதங்களின் போது முதலாளித்துவம் = தேசிய முதலாளிவர்க்கம்= பூர்சுவா ஜனநாயகம் என்ற ஒரு சூத்திரத்தை சுற்றியே பலரது வாதங்களும் அடிக்கடி வலம் வருவதை அவதானிக்க முடிகிறது. ஆதலால் இந்த சூத்திரம் பற்றி சற்று பரிசீலிப்பதுஅவசியமாகும்.

முதலாளித்துவ உற்பத்தி முறையை பிரதான உற்பத்தி முறையாகக் கொண்டுள்ள சமூகங்களை பொதுவாக முதலாளித்துவ சமுதாயங்கள் என்கிறோம். இவை பல்வேறுபட்ட அரசுவடிவங்களைக் கொண்டுள்ளன. லிபரல் ஜனநாய அரசு, சமூக ஜனநாயக நலன்புரி அரசு, பாசிச அரசு, இராணுவசர்வாதிகார அரசு... இப்படிப்பட்ட பல வடிவங்களை குறிப்பிடலாம். அந்த நாட்டில் உள்ள முதலாளித்துவ உற்பத்தி முறையின் வளர்ச்சிநிலை, அந்த நாட்டின் முதலாளித்துவ உற்பத்தி முறையுடன் கூடவே காணப்படும் வேறு உற்பத்தி முறைகள், இந்த உற்பத்தி முறையிலிருந்து தோன்றும் வர்க்கங்கள், சர்வதேச மூலதனத்துடன் இந் நாட்டு மூலதனம் கொண்டுள்ள உறவு, ஆட்சி அதிகாரம் எந்த வர்க்கத்தின் கைகளில் இருக்கிறது, சுரண்டப்படும் வர்க்கங்களின் பலம், அந்நாட்டில் குறிப்பான வரலாற்று நிலைமைகள் போன்ற பல அம்சங்கள் அரசின் வடிவத்தைக் தீர்மானிப்பதில் பங்கு வகிக்கின்றன.

ஐரோப்பிய முதலாளித்துவத்தின் தோற்றகாலத்தில் அங்கு தோன்றி வந்த முதலாளித்துவசக்திகள் தாம் தேசியத்தை முன்னெடுத்தது என்பது உண்மையே. ஆனால் இது சர்வவியாபகமான விதியாகிவிடமாட்டாது. காலனிஆதிக்கத்திற்கு உள்ளான நிலையில் அந்த நாட்டில் உள்ள பல்வேறு வர்க்கங்களின் (தரகு

www.tamilarangam.net

முதலாளித்துவ நிலபிரபுத்துவ வர்க்கங்கள் தவிர்ந்த ஏனைய வர்கங்களின்) அபிலாசைகளை தேசியமானது பிரதிபலிக்கிறது. இதற்கு தேசிய முதலாளிகள் தலைமை தாங்குவதுண்டு. ஆனால் பல்வேறு ஏகாதிபத்தியங்கள் முட்டி மோதிக் கொள்ளும் நிலையில் காலனிநாட்டிலுள் ள ஒரு ஏகாதிபத்தியத்தைச் சார்ந்த தரகு முதலாளிவர்க்மானது இன்னோர் ஏகாதிபத்தியத்தின் மேலாதிக்கத்திற்கு எதிரானபோராட்டத்தில் தேசியத்தை சார்ந்து நிற்கவோ அல்லது சிலவேளைகளில் தேசிய இயக்கத்திற்கு தலைமை தாங்கவோசெய்யலாம். நவகாலனித்துவ நாடுகளில் முதலாளிவர்க்கங்கள் தமது வரலாற்றுப் பாத்திரத்தை இழந்து விட்ட நிலையில், அந்த நாட்டின் ஜனநாயகப்புரட்சியின் கடமைகள் பாட்டாளிவர்க்கத்தின் தலைமேல் விழுந் த நிலையில், பாட்டாளிவர்க்கமானது தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க நேருகிறது. இது போன்றே ஹிட்லரின் பாசிசமானது ஆரிய, ஜேர்மனிய தேசியவாதக்கலவையாகவே வெளிப்பட்டது. இங்கு ஏகபோக முதலாளிகள் குறிப்பான வரலாற்று நிலைமைகளின் கீழ் தமது நலன்களை தேசியத்தின் பேரால், தேசியத்துடன் இணைந்து முன்னெடுத்தார்கள். இதன்மூலம் ஜேர்மனிய பாட்டாளிவர்கத்தையே தமது தலைமையின்கீழ் அணிதிரட்ட இவர்களால் முடிந்தது.

இன ஒடுக்குமுறையானது இனப்படுகொலை எனும் வடிவத்தை பெற்ற பின்பு சிறுபான்மை தேசிய இனத்தைச் சேர்ந்த ஒவ்வொரு வர்க்கமும் கூட தமது உயிர் வாழ்க்கைக்காகவே போராடியாக வேண்டிய நிலையில் உள்ளது. தேசிய முதலாளிகள், தரகு முதலாளிகள், நிலபிரபுக்கள், பெரும் வர்த்தகர்கள், பணக்கார விவசாயிகள், மீனவ முதலாளிகள், குட்டி முதலாளிகள், விவசாயிகள், தொழிலாளர்கள் போன்ற பல்வேறு வர்க்கங்களும் சமூகத்தட்டுக்களும் தேசியத்தை முன்னெடுக்க நேர்ந்தன. இவ்வாறு பல்வேறு வர்க்கங்கள் தேசியத்தை முன்னெடுத்த போதிலும் அவை ஒவ்வொன்றும் தமது வர்க்க நிலைப்பாட்டில் நின்றே அதனை முன்னெடுத்துச் செல்கின்றன. தேசிய முதலாளி வர்க்கமானது சுயசார்பு பொருளாதாரம், பூர்சுவா ஜனநாயகம், ஏகாதிபத்திய எதிர்ப்பு ஆகியவற்றுடன் முன்னெடுக்கிறது. தரகு முதலாளிவர்க்கம் ஏகாதிபத்திய சார்பாக முன்னெடுக்கிறது .நிலபிரபுத்துவவர்க்கமானது பழமைவாதம், ,ஜனநாயகமறுப்பு கண்ணோட்டத்துடன் முன்னெடுக்கிறது. பாட்டாளிவர்க்கமானது சோசலிசம், பாட்டாளிவர்க்க சர்வதேசியம் ஆகியவற்றுடன் இணைந்து முன்னெடுக்கிறது. ஆகவே தேசியம்=தேசியமுதலாளிவர்க்கம்=பூர்சுவா ஜனநாயகம், என்ற சூத்திரத்தை யாந்திரியமாக நாம் உருவாக்கிக் கொள்ளக்கூடாது. குறிப்பிட்ட வகைத் தேசியத்தை அல்லது குறிப்பிட்ட ஒரு அமைப்பின் கோரிக்கைகளை ஸ்தூலமாக ஆராய்வதன் மூலம் அது எந்த வர்க்கத்தை பிரதிபலிக்கின்றன என்று கண்டறிய வேண்டும் .அந்த சமூகத்திலுள்ள பிரதான வர்க்கங்கள் அவற்றின் புறநிலையான நலன்கள், பல்வேறு தேசிய, அரசியல் கோரிக்கைகளில் இந்த நலன்கள் பிரதிபலிக்கப்படும் விதம் போன்றவற்றை சரியாக இனம்காண்பதன் மூலம் குறிப்பிட்ட அமைப்பானது எந்த சமூக சக்தியை, எந்த வர்க்கத்தை பிரதிபலிக்கிறது என உறுதியாக கூறமுடியும். மாறாக, தேசியத்தில் உறுதியாக நிற்பதால் குறுப்பிட்ட ஒரு அமைப்பானது தேசிய முதலாளிவர்க்கத்தை பிரதிநிதிப்படுத்துவதாக கூறுவதோ, அல்லது ஜனநாயகம் இல்லாததால் தரகு முதலாளி வர்க்கத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக கூறுவதோ முழுமையான சமூக கண்ணோட்டமாகாது. இது பெருமளவில் தலைகீழான அகநிலை கண்ணோட்டங்களை தன்னுள் கொண்டிருக்கும் அணுகுமுறையாகும்.

தேசியம் என்றவுடன் தேசிய முதலாளிவர்க்கத்தை முன்னனுமானிப்பதும், தேசிய முதலாளிவர்க்கம் என்றதும் பூர்சுவா ஜனநாயகத்தை முன்னனுமானிப்பதும் இலகுவான சூத்திரம் தான். ஆனால் இது யதார்த்தத்தின் நிலையை புரிந்து கொள்ள உண்மையில் உதவப்போவதில்லை. முதலாளித்துவம் பற்றிய விரிவான புரிதலும் அந்த, புரிதலின் அடிப்படையில் தமிழ்ச்சமுதாயம் பற்றிய சமூக-



பொருளாதார ஆய்வும், அதன் வெளிச்சத்தில் பல்வேறு வர்க்கங்களையும், அவற்றின் நலன்களையும், இந்த நலன்கள் அவற்றின் அரசியலில்- தேசியத்தில்- பிரதிபலிக்கப்படும் விதத்தையும் கண்டறிவது மட்டுமே தீர்வுகளை முன்வைக்க கூடிய, சரியான புரிதலை உருவாக்க உதவும்.தமிழ்ச்சமுதாயத்தில் நிலவும் தத்துவார்த்த வறுமையும், தமிழ்ச்சமூகம் பற்றிய சமூக- பொருளாதார ஆய்வுகள் இன்மையும் இந்த திசையில் நாம் முன்னேறபெருந்தடைகளாகும். இருப்பினும், இந்த தடைகளை இனம் காண்பதே குறுகிய வரட்டுச் சூத்திரத்தில் அடைபட்டு கொள்ளாமல் இருப்பதற்கும், அடுத்து முன்னேற வேண்டிய திசையை இனங்காணவும் உதவும்.

இப்பொழுது நேரடியாக பிரச்சினைக்கு வருவோம். புலிகளின் அரசியலை எப்படி புரிந்து கொள்வது? எந்த சமூகசக்தியின் நலன்களை இவர்கள் பிரதிநிபுத்துவப் படுத்துகிறார்கள்? புலிகளின் அரசியலை ஏதோ ஒரு விதத்தில் புரிந்து கொள்வதும் பின்பு இந்த அரசியலை வைத்துக் கொண்டு அதன் வர்க்க பின்னணியை ஊகிப்பதுமான அணுகுமுறை எமது வாதங்களிடையே பரவலாக காணப்படுகிறது. புலிகள் தேசியத்தில் உறுதியாக இருப்பதாக அனுமானித்துக் கொண்டு இந்த அனுமானத்தின் அடிப்படையில் அவர்களை தேசிய முதலாளித்துவ சக்திகளை- அப்படி ஒரு வர்க்கம் தமிழ் சமூகத்தில் இல்லாத போதிலும்- பிரதிநிதித்துவப்படுத்துவதாக 'தூண்டில்' கூறுவது இதன் ஒரு வகையாகும். இதற்கு மாறாக 'சமர்' நாட்டில் தேசிய முதலாளிகள் இல்லாமல் இருப்பதும், புலிகள் முதலாளித்துவ சித்தாந்தத்தைக் கொண்டிருப்பதால் அவர்கள் தரகு முதலாளிகளை பிரதிநிதித்துவப்படுத்துவ தாகவும், புலிகளின் பாசிசமானது இதன் குறிப்பான குணங்குறி என்பது இன்னோர் வாதமாகும். இவை தலைகீழான -அகநிலை -அணுகுமுறைகளாகும். மாறாக புலிகளின் அரசியலை புரிந்து கொள்ளவே தமிழ்ச் சமுதாயம் பற்றிய வர்கப்பகுப்பாய்வும், குறிப்பிட்ட வர்க்கங்களின் நலன்கள் தமிழீழவிடுதலைப் போராட்டத்தில் எப்படி பிரதிபலிக்கின்றன என இனம் காண்பதும் முக்கியமானதாகும்.

ஒரு குறிப்பிட்ட அமைப்பானது எந்த வர்க்கத்தை அல்லது எந்த சமூக சக்தியை பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்பதை இனங்கான இரண்டு வழிகள் உள்ளன.

முதலாவது, அந்த அமைப்பின் வர்க்க மூலத்தை **(Class Origin)** கண்டறிவதாகும்.புலிகளைப் பொறுத்தளவில் மட்டுமல்லாமல் அநேகமாக எல்லா விடுதலை அமைப்புக்களிலுமே பெரும்பாலாக முன்னணி அங்கத்தவர்கள் குட்டி முதலாளித் துவ வர்க்க பின்னணிகளைக் கொண்டவர்கள். அரச ஊழியர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள், மீனவர்கள் போன்ற குடும்பங்களைச் சேர்ந்தவர்களாவர். இத்துடன் சில அமைப்புகள் வல்வெட்டிதுறையுடன் கொண்டுள்ள உறவுகளையும் கருத்திற்கெடுத்துக கொண்டால் கள்ளக்கடத்தலில் ஈடுபடும் உதிரிமுதலாளிகளின் பிரிவொன்றும் சிலஅமைப்புகளுடன் கொண்டுள்ள தொடர்புகளும் கவனத்திற்கு கொள்ள வேண்டியவையாகும். அமைப்புக்களின் வளர்ச்சிப் போக்கில் அதன் முன்னணிஅங்கத்தவர்களின் வர்க்கநிலைகள்மாறலாம் என்பதாலும், சமூக அளவில் பலம்பெற்ற வர்க்கங்கள் இப்படிப்பட்ட குட்டி முதலாளித்துவ வர்க்கசக்திகளை இலகுவில் தமது செல்வாக்கிற்கு உட்படுத்தலாம் என்பதாலும் குறிப்பிட்ட அமைப்பால் பிரதிநிதித்துவப் படுத்தப்படும் வர்க்கத்தை இனம்காண இந்த அணுகுமுறை பொறுத்தமானதல்ல.

இரண்டாவது முறை ,சமூகத்திலுள்ள பிரதான வர்க்கங்களையும் அவற்றின் பொருளாதாய நலன்களையும் சரியாக இனம் கண்டு பல்வேறு அமைப்புக்களின் அரசியல் கோரிக்கைகளின் பின்னால் மறைந்திருக்கும் நலன்கள் எந்த வர்கத்தினுடையவை என இனம் காண்பதன் மூலம் அந்த அமைப்பானது எந்த வர்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்ற முடிவிற்கு வருவது, இந்த

www.tamilarangam.net

அணுகுமுறை முன்னைய அணுகுமுறையிலும் பார்க்க பொருத்தமானதாகும். ஆகவே தமிழ்ச் சமுதாயத்தில் பிரதான வர்க்கங்களையும் அவற்றின் பொருளாதாய நலன்கள் தேசிய விடுதலைப் போராட்டத்தில் வெளிப்படக்கூடிய வழிமுறைகளையும் இனம் காண முயல்வோம்.

இலங்கையில் நூற்றாண்டுகளாக நீடித்த காலனித்துவ ஆட்சியும், அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட நவகாலனித்துவ சுரண்டலாலும் உள்ளூரில் தேசிய முதலாளித்துவ வர்க்கத்தை வளர விடாமல் செய்து விட்டது. இத்துடன் சுதந்திரத்திற்குப் பின்பு சிங்கள பெருந் தேசிய வாதமானது பொருளாதாரத்துறையில் காட்டி வந்த இனரீதியான பாகுபாட்டின் காரணமாக தமிழ்ப்பிரதேசத்தில் தொழிற்துறைகள் பெருகவோ தமிழ்த் தேசிய முதலாளி வர்க்கம் வளரவோ வாய்ப்பற்றுப் போய்விட்டது. இதனால் தமிழ்ச்சமுதாயத்தில் தேசிய முதலாளிவர்க்கம் என்ற ஒன்று குறிப்பிடத்தக்கதாக இல்லை. அப்படி இருப்பினும் மிகவும் பலவீனமானதாக சிறு உற்பத்தியாளர் என்ற அளவிலேயே காணப்படுகின்றனர். இந்த நிலையில் தனது பொருளாதார நலன்களை தானே முன்னெடுப்பதோ, தனித்து நின்று காற்பாற்றுவதோ, இந்த வர்க்கத்திற் கு சாத்தியமில்லை .சுயசார்பு உற்பத்தி, அந்நிய, ஏகாதிபத்திய எதிர்ப்பு , உறுதியான தேசியம், பூர்சுவா ஜனநாயகம் போன்றவை இந்த வர்க்கத்தின் பொருளாதாய நலன்களில் இருந்து பிறக்கக்கூடிய அரசியல் நிலைப்பாடுகளாகும்.

காலனித்துவ ஆட்சியில் தோன்றி வளர்ந்து வந்த தரகு முதலாளித்துவவர்க்கமானது சுதந்திரத்திற்கு பின்பு இனரீதியாக பிளவுபட்டுள்ளது. சந்தையில் தமக்குரிய பங்கை சிங்கள தரகு முதலாளி வர்க்கமானது கொடுக்க மறுப்பதனால் தமிழ் தரகு முதலாளித்துவ வர்க்கமானது தேசியத்தை முன்னெடுக்க நேர்ந்துள்ளது. ஏகாதிபத்திய ஏகாதிபத்திய, அந்நிய சார்பு என்பது இதன் குறிப்பானதன்மையாகும். தேசிய வாதத்தை பேரினவாத அரசிற்கு நெருக்கடி கொடுக்கவும், அதன்மூலம் சந்தையை மறுபங்கீடு செய்யவும் பயன்படுத்த முனையும். இந்த வர்க்கமானது இது சாத்தியப்படாத இடத்து பிரிவினையின் மூலம் தனது சந்தையை துண்டித்து எடுத்துக் கொள்ளவும் முனையும் .பேச்சு வார்த்தை மூலம் சமரசம் செய்வதையே முன்பு அதிகளவில் விரும்பிய இந்த வர்க்கமானது, சிங்கள பேரினவாதம் இலகுவில் தன் பங்கை கொடுக்கமாட்டாது எனக் கண்டு கொண்ட நிலையில் பிரிவினையை ஆதரிக்கிறது. ஆனால் எப்போதெல்லாம் பேரினவாதம் இறங்கி வந்தாலும் அதனுடன் சமரசம் செய்ய தயாராகவுள்ளது. சிங்கள பேரின வாதத்தை எதிர்த்தாலும் கூட இன்னும்கூட தனது பிழைப்புக்காக பல தொடர்புகளை அரசுடன் இது கொண்டுள்ளது. அரசுடன் சமரசம் செய்து வைக்க முனையும், தொடர்பாளர்களாகச் செயற்படும் கொழும்பிலுள்ள பிரமுகர்கள் குறிப்பாக இந்த வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். சிங்கள அரசை இவர்கள் எதிர்த்தாலும் ஏகாதிபத்தியங்களையோ அதன் சுரண்டல்களையோ எதிர்க்க மாட்டார்கள்.

நிலப்பிரபுத்துவ சக்திகள் தமிழ்ப்பிரதேசத்தில் குறிப்பிடத்தக்க அளவுற்கு இல்லை. அப்படி இருந்தவர்களும் அரசினால் கொண்டுவரப்பட்ட நிலுச்சவரம்புச்சட்டம் போன்றவற்றாலும் பசுமைப்புரட்சியுடன் விவசாயத்தில் நவீனமுறைகள் நுழைந்ததனாலும் இவர்கள் முதலாளித்துவ உற்பத்தி முறையுடன் இணைந்து விட்டார்கள். பணக்கார விவசாயிகள், பணக்கார மீனவர்கள் (மீனவ முதலாளிகள், சம்மாட்டிகள்)போன்றோரும் நவீன உற்பத்தி முறைகள் காரணமாக ஏகாதிபத்திய பொருளாதார வலைப்பின்னலுடன் நெருக்கமாக பிணைந்துள்ளார்கள். இவர்கள் தரகு முதலாளிவர்க்கத்திற்கு நெருக்கமானவர்கள். பெரிய கடைக்காரார்கள் திறந்த பொருளாதார கொள்கையின்கீழ் ஏகாதிபத்தியத்தின் இறக்குமதிப் பொருட்களை விற்பனை செய்தே வாழ்பவர்கள் இவர்களும் தரகுமுதலாளிகளுக்கு மிகவும் நெருக்கமானவர்களே.



முதலாளித்துவ பெருவீத உற்பத்தி மிகவும் பலவீனமாக இருக்கும் நிலையில் தமிழ்ப்பிரதேசத்தில் பாட்டாளிவர்க்கத்தின் எண்ணிக்கை மிகவும் குறைவாகும். வறிய விவசாயிகள் , வறிய மீனவர்கள் போன்றோர்களும் பேரினவாத ஒடுக்கு முறையினாலும், ஏகாதிபத்திய சுரண்டலினாலும் அதிகம் பாதிக்கப்படுபவர்களாகும் தொழிலாளர் வர்க்கத்தின் உறுதியான கூட்டாளிகளாக அமையக் கூடியவர்கள் இவர்கள்.தேசிய விடுதலைப் போராட்டத்தில் இவர்களது ,நலன்களும் உறுதியாக பிணைந்துள்ளன. முதலாளித்துவ சித்தாந்தத்திற்கு பலியாகிப் போய்யுள்ள நிலையில் இவர்கள் தமக்கென ஒரு வர்க்க தாபனத்தையோ, தனியான அரசியல் கோரிக்கைகளையோ முன்னெடுக்காது தரகு முதலாளித்துவ சக்திகளையே பலப்படுத்தி வருகின்றன. எதிர்காலத்தில் தோன்றும் எந்த ஒரு புரட்சிகர அமைப்பும் இவர்களையே போராட்ட சக்திகளாக கருதி செயற்பட வேண்டும்.

முதலாளித்துவம் பலமாக வளராத நிலையில் குட்டி பூர்சுவா வர்க்கம் அதிகளவில் காணப்படுகிறது. இத்துடன் எமது நாட்டில்அரசசேவைத் துறையே பிரதான வேலை வழங்கும் துறையாக இருப்பதனால் அரச கீழ் நடுமட்ட ஊழியர்களாகவும் இதன் எண்ணிக்கை மிகவும் பெரிதாகவுள்ளது. நடுத்தர விவசாயிகள், மீனவர்களும் இவர்களுடன் ஒப்பிடக்கூடியவர்களே. அரசின் பேரினவாத ஒடுக்குமுறையினாலும் ஏகாதிபத்தியத்தின் சுரண்டலினாலும் அதிகம் பாதிக்கப்படும் இவர்கள் ஒரு மாற்றத்தை விரும்பினாலும் இழப்பதற்கு தயாரற்ற இவர்களது வாழ்நிலை காரணமாக ஊசலாடுகிறார்கள். குறுகிய சமூக கண்ணோட்டம் இவர்களது பிரதான குறைபாடாகும். போராட்ட அமைப்புகளில் முன்னணி அங்கவத்தவர்களுள் பெரும்பாலானோர் இந்த வர்க்கத்தை சேர்ந்தவர்களாக இருப்பதனால் அமைப்புக்களின் பல குறைபாடுகளுக்கு இந்த வர்க்கம் நேரடி காரணமாகிறது.

தமிழ்ப் பிரதேசத்தில் -குறிப்பாக யாழ்ப்பாணத்தில்- கள்ளக்கடத்தல் என்பது ஒரு குறிப்பிடத்தக்க தொழிலாகவே நடைபெற்று வந்தது. கடந்த காலத்தில் தமிழ்ப்பிரதேசத்தில் பொருளாதார நடவடிக்கைகளில் இதன் பங்கு என்ன? இந்த உதிரி முதலாளிகள் சமுதாயத்தில் வகித்த இடம் என்ன? போன்றவை தெளிவற்றதாகவே உள்ளன. தமிழீழ விடுதலைப் போராட்டமானது இந்தியாவை பின்தளமாக பாவித்ததனால் வண்டி ஓட்டத்திற்காகவும் பின்பு நிதித்தேவைக்காக அமைப்புகள் போதைப்பொருட்களை கடத்தவும்,ஆயுதங்களை கடத்திவர முயன்ற போது பல்வேறு அமைப்புகளும் இந்த வர்க்கத்துடன் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தும் அவசியம் ஏற்பட்டது. ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பகாலத்தில் உதிரிப்பாட்டாளி வர்க்கத்தைச் சேர்ந்த பலர் இயக்கங் களால் அவர்களது சமூக விரோத நடவடிக்கைகளுக்காக வேட்டையாடப்பட்டார்கள். பிற்காலத்தில் இந்த வர்க்கம் அமைப்புக்களுக் குள்ளேயே பிரதான அடியாள் கூட்டமாக உருவெடுத்தும் குறிப்பாக கவனிக் கப்பட வேண்டியதாகும். எமது போராட்டத்தில் தோன்றிய பல சமூக விரோத போக்குகளுக்கு இவர்களது செல்வாக்கு காரணமா என்று நுணுக்கமாக பரிசீலிப்பது அவசியமாகும்.

எமது போராட்டத்தில் தோன்றிய பல்வேறு அரசியல் போக்குகளையும் இப் போது இனம்காண முயல்வோம். தமிழ்த்தேசியத்தின் ஆரம்பமானது பூர்சுவா ஜனநாயகப் போராட்ட வடிவங்களாக இருந்தன. பாராளுமன்ற வாதம், அகிம்சைப் போராட்டங்கள்,பேரம் பேசும் பேச்சுவார்த்தைகள்,அரசுடன் இணக்கம் காணுதல்,அரசு உறுதி மொழிகளை கைவிடுதல் மீண்டும் போராட்டம் எனத் தொடங்கிய ஆரம்பகால தேசியமானது 70 களில் ஆயுதப் போராட்ட வடிவம் பெற்றது. ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பகால நடவடிக்கைகள் பூர்சுவா ஜனநாயக அரசியல் தலைமைகளை பலப்படுத்தும் விதத்திலும் அதற்கு துணையாகவுமே அமைந்த போதிலும் பிற்காலத்தில் ஆயுதப் போராட்டமானது சட்டரீதியான போராட்ட வடிவங்களில் இருந்து விலகின. பின்பு

www.tamilarangam.net

சட்டவடிவங்களான அகிம்சைப் போராட்டங்களை பின்னுக்கு தள்ளிவிட்டு பிரதான வடிவம் பெறவும் தொடங்கின. 80 களில் இந்திய அரசிடம் இருந்து இளைஞர் அமைப்புக்கள் உதவி பெறவும்,இந்திய அரசின் விருப்பத்திற்கு ஏற்ப போராட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் முனைந்தன. 86 இல் புலிகள் ஏனைய அமைப்புக்களை தடைசெய்ய தொடங்கியது தடைசெய்யப்பட்ட அமைப்புகளில் பெரும்பாலானவை இந்திய, இலங்கை அரசுகளுடன் ஒத்துழைத்து செயற்பட தொடங்கின.தமிழீழ கோரிக்கைகளை முற்றாக கைவிட்டன. புலிகள் தமிழீழ கோரிக்கைகளில் ஒப்பீட்டளவில் உறுதியாக இருந்தாலும் அவ்வப்போது பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளவும், மாற்றுத் திட்டங்களை பரிசீலிக்கத் தயாராகவும் இருந்தது. புலிகள் மக்களையும், சக அமைப்புக்களையும், முற்போக்கு எண்ணமுடைய தனிநபர்களையும் நசுக்கி தனது அரசியல் ஏக போகத்தை நிறுவிக்கொண்டன. பல சந்தர்ப்பங்களில் தனது ஏகபோகத்தை அங்கீகரிக்கும் படி வலியுறுத்திய அளவில் அரசியல் கோரிக்கைகளை வலியுறுத்தாமல் விடுவதும் கவனிக்கத்தக்கது. இந்திய, இலங்கை அரசுகளுடன் தேவைக்கேற்ப பேசவும், உதவிகளைப் பெறவும், பின்பு மூர்க்கத் தனமாத எதிர்த்து போராடவும் செய்கிறது. சிங்கள,முஸ்லிம் மக்களைபடு கொலை செய்கிறது. பெருமளவில் இளைஞர்களை திரட்டி தற்கொலை வடிவங்களையும் பயன்படுத்தி இராணுவத் தாக்குதல்களை ஒருவித வெறித்தனத்துடன் மேற் கொண்டு செல்கிறது. இந்த வகைகளில் தமிழ்த்தேசியத்தை பலவித குறைபாடுகளுடன் தான் என்றாலும் முன்னெடுத்துச் செல்லும் ஒரே அமைப்பாக புலிகள் திகழ்கின்றனர்.

இந்த பல்வேறு அரசியல் போக்குகளையும் புறநிலையான வர்க்கங்களின் நலன்களுடன் இனம்காண முயல்வோம். ஆரம்பகால தேசியமானது தமிழ்த்தரகு முதலாளித்துவ வர்க்கங்களின் நலன்களையே பிரதிநிதித்துவம் செய்தது எனலாம். அரசுடன் சமரசம் செய்தல், சலுகை பெறுதல் போன்ற வையும் ஏகாதிபத்திய சார்பு நிலைப்பாடுகளும் இதனையே காட்டுகின்றன. தேவைக்கேற்ற விதத்தில் போராட்டத்தை தீவிரப்படுத்தும் விதத்தில் குட்டி பூர்சுவா வர்க்கத்தின் கோரிக்கைகளையும் முன்னெடுத்து வெகுஜன போராட்டமாக மாற்றின. ஆனால் இந்தப் போராட்டங்களின் இறுதி நோக்கம் சலுகைகளை பெறுவதாகவே இருந்தது. 72 இல் தரப்படுத்துதலை அடுத்து குட்டி பூர்சுவா வர்க்கம் பின்னணியைக் கொண்ட மாணவர்களது போராட்டங்கள் ஓரளவு சுயதீனத்தன்மையுடன் வெளிப்பட்டன. பின்பு இந்த குட்டி பூர்சுவா வர்க்கப் பின்னணிகளை உடைய தீவிர இளைஞர்கள் தரகு முதலாளித்துவ வர்க்கத்தின் மிதமான போக்குடன் முரண்பட்டதே இளைஞர் அமைப்புக்கள் தோன்றுவதற்கு காரணமாயின. இந்த இளைஞர் அமைப்புக்களே ஆயுதப்போராட்டத்தையும் முன்னெடுக்கலாயின. இளைஞர் அமைப்புக்கள் குட்டி பூர்சுவா நலன்களையும், அம்சங்களையுமே பிரதானமாக வெளிப்படுத்தின. நீண்டகால,தெளிவான கண்ணோட்டமின்மை ,சுயமான அரசியல் இன்மை, சாகச மனோபாவம், மக்களின் பாத்திரத்தை புரிந்து கொள்ளாமை, போலிப் பெருமை, பழமை வாதத்தை கைவிடாமை, இலட்சியவாத வாழ்க்கை முறைப்பிரேரித்தல் போன்றவற்றில் குட்டி பூர்சுவா மனோபாவமே வெளிப்பட்டது. இளைஞர் அமைப்புகள் வளர்ச்சியில் ஒரு கட்டத்தில் தமக்குள் மோதிக் கொள்ள ஆரம்பித்து இன்று புலிகள் தமது மேலாதிக்கத்தை நிலைநாட்டிக் கொண்டுள்ளார்கள்.

புலிகள் இந்த போராட்டங்களில் ஒப்பீட்டளவில் உறுதியாக நிற்கின்றனர் . இவர்களது ஜனநாயக மறுப்பானது 'பாசிச' வடிவத்தை பெற்றுள்ளது . மக்கள் மீதும், ஏனைய அமைப்புகள் மீதும் சொந்த அங்கத்தவர்கள் மீதும் அடக்குமுறைகளை கட்டவிழ்த்து விடும் அதிகார வர்க்கமாக இதன் தலைமை ஆகிவிட்டது. இவர்களது தேசியமானது ஏனைய சிறுபான்மை இனங்களை ஒடுக்கும் அளவிற்கு குறுகியதாகி விட்டது. சுய உற்பத்தி போன்றவற்றில் எந்த அக்கறையும் காட்டாத இவர்கள் இறக்குமதியாகும் அல்லது தென்னிலங்கையில்



இருந்து கொண்டுவரப்படும் பொருட்களுக்கு வரிவிதிப்பதையே தமது பிரதான வருமானமாக கொண்டுள்ளார்கள். தங்க வசூலிப்பாகவும்,வியாபார நிறுவனங்களில் மூலதனத்தில் பங்கு கேட்பதன் மூலமும் ஓரளவு வசதியானவர்களை பணயம் வைத்தும், கப்பம் கேட்ம் இவர்க ள் செய்யும் மூலதனத் திரட்டலானது இன்று பெட்டிக் கடைக்காரர்களைக்கூட விட்டுவைக்கவில்லை. தமிழ்ப்பிரதேசத்தில் தமது மூலதனங்களைப்போட்டு தொழில் புரிய விரும்பும் தேசிய உணர்வுள்ள ஒரு சிறு உற்பத்தியாளர்கள் புலிகள் தமது சொத்துக்களை அபகரித்துவிடலாம் என்ற அச்சத்தினாலேயே அவ்வாறு செய்யாமல் விடுகிறார்கள். பேரினவாதத்திற்கு எதிராக போராட்டத்தை முன்னெடுப்பதன் மூலம் மக்களது அபிலாசைகளை ஓரளவு வெளிப்படுத்தும் புலிகள் அதேசமயத்தில் மக்களை அடக்குவதிலும், அவர்களது ஜனநாயக அடிப்படை உரிமைகளை நசுக்கியும், பலவிதத்தில் கட்டையப்படுத்தியும் பலவந்தப்படுத்தியும் தமது தேவைகளுக்கு சேவை செய்யவைத்தும் , மக்களது அடிப்படை நலன்களைப்பற்றிக்கூட கவலைப்படாது அவர்களைக் கசக்கிப் பிழிந்து வரிவசூலித்தும் ஒருவிதத்தில் மக்களை விட்டுப் பிரிந்த மக்களுக்கு மேலானவர்களாக புல்லுருவித்தனத்துடன் செயற்படுகிறார்கள். அதுவும் தமிழ் மக்களின் பெயரால்,அவர்களின் ஏகபோக பிரதிநிதிகள் என்று கூறிக்கொண்டு செயற்படுகிறார்கள். இவர்களிடம் திட்டவட்டமான உறுதியான ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைப்பாடு கிடையாது. தமது குழுநலன்களுக்கு ஏற்ப இந்திய அரசையோ, இலங்கை அரசையோ, இஸ்ரேல் போன்ற ஏகாதிபத்தியத்தின் எடுபிடிகளையோ காலத்திற்கு , காலம் சார்ந்து நின்று தம்மைப் பலப்படுத் துவதில் மிகவும் கவனமாகவும், திறமையாகவும் செயற்படுகிறார்கள். இப்படியாக அந்நிய சக்திகளை சார்ந்து செயற்படும் போதே தனது குழுநலன்கள் பாதிக்கப்படுகையில் அவர்களுடனான உறவுகளை துண்டித்துக் கொள்வதையும் காண்கிறோம். புலிகளுக்கு ஆதரவாக வெளிநாடுகளில் செயற்படும் சில சக்திகள் திட்டவட்டமாக அமெரிக்க ஏகாதிபத்திய சார்புடையவர்கள் என்பது கவனிக்கத்தக்கது. இப்படியாக புலிகள் பலவிதத்திலும் முன்னெடுக்கும் தமது அரசியல் மூலம் வெளிப்படுத்தும் நலன்கள் எந்த வர்க்கத்தினுடையவை ?

தேசியமானது இன்று தமிழ்ச்சமுதாயத்தின் எல்லா வர்க்கங்களினதும் பொதுவான தேவையாகிவிட்ட நிலையில் புலிகளது தேசியத்தை தேசிய முதலாளிகளின் நலன்களுடன் இனம்காண்பது சாத்தியமற்றது. தேசியம் என்றொரு அம்சத்தை விட புலிகள் ஏனைய அம்சங்களில் சுயசார்பு பொருளாதாரம், ஏகாதியபத்தியஎதிர்ப்பு, பூர்சுவா ஜனநாயகம் போன்றவற்றில்- தேசிய முதலாளிவர்க்கத்தின் நலன்களுக்கு, பண்புகளுக்கு எதிராகவே உள்ளார்கள். ஆரம்பத்தில் புலிகள் குட்டி முதலாளித்துவ வர்க்க குணாசம்களை பெரிதும் கொண்டிருப்பதாலும் இன்று அவற்றில் சிலவற்றைக் கொண்டிருப்பினும் பெருமளவில் அவர்கள் இந்த குட்டி முதலாளித்துவ பண்புகளைக் கடந்து வளர்ந்து விட்டார்கள் என்றே கருதவேண்டியுள்ளது. அமைப்புரீதியாக பலம்பெறும் போது அமைப்பின் பலத்தையும்,செல்வாக்கையும் பயன்படுத்திய தலைமையானது மூலதனத்தை பெருமளவில் திரட்டியுள்ளது. இதற்கு மேல் இவர்களது வர்க்கநிலமையும், கண்ணோட்டங்களும் ஆரம்பத்தில் இருந்தது போல இருக்கபோவதில்லை. தமிழ்ச்சமூகத்தில் பலம்பெற்றுநிற்கும் வர்க்கங்கள் இவர்களை தமதுசித்தாந்த செல்வாக்கிற்குக் கொண்டுவருவது கஷ்டமானதல்ல. தனித்துவமான சித்தாந்தம் என்று ஒன்று புலிகளிடம் இல்லாதபோது இது சிரமமானதல்ல.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொதுவாக எமது சமுதாயத்தில் முதலாளித்துவ சித்தாந்தமே மேலாண்மை செலுத்துகிறது. இந்தநிலையில் புலிகள் தேசியமுதலாளித்துவ வர்க்கநலன்களை பிரதிபலிக்கவில்லை என்பதனால் தரகுமுதலாளி வர்க்க நலன்களைத்தான் கட்டாயம் பிரதிபலித்தாக வேண்டும் என்ற கருத்தொன்று சிலரது வாதங்களில் தொனிக்கிறது. இந்த வாதத்தை முன்வைப்பவர்கள் புலிகளிடம் தேசிய முதலாளிவர்க்க அம்சங்கள் இல்லை என்று ஆதாரங்களை முன்வைக்கும் அளவிற்கு தரகுமுதலாளிவர்க்க நலன்களை எப்படி குறிப்பாக வெளிப்படுத்துகிறார்கள். எனபோதிய சான்றுகள் மூலம் நிரூபிப்பதில்லை. புலிகளின் மூலதனத்திரட்டு நடவடிக்கைகள் பெட்டிக் கடைக்காரர்களையே விட்டுவைக்காத போது தரகு முதலாளிக்குமட்டும் வாய்ப்பாகத்தான் இருக்கிறது என்பதில்லை இன்று தமிழ்ப்பிரதேசத்தில் நிலவும் அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடானது பெரிய வியாபாரிகள் கொள்ளை இலாபம் அடிக்க உதவவேசெய்கிறது. இதனை புலிகளும் அனுமதிக்கவே செய்கிறார்கள் என்பது உண்மையே. ஆனால் இதற்கு பிரதியுபகாரமாக புலிகள் கடைக்காரரின் மூலதனத்திலேயே அரைப்பங்கைக் கேட்கிறார்கள். இது இந்த வர்க்கத்திற்கு மகிழ்ச்சியளிப்பதாக இல்லை.

தமிழ்ச்சமூதாயத்தில் தேசிய முதலாளிகள், தரகுமுதலாளிகள் என்ற இரண்டு ஆளும் வர்க்கங்கள் மட்டுமே இருக்கின்றன. இதனால் புலிகள் தேசிய முதலாளிகள் இல்லையென்றால் கட்டாயமாக தரகு முதலாளிகளாகத்தான் இருக்க வேண்டும் என்ற ஒரு குறுகிய கண்ணோட்டத்துடன் முடிவுகட்டத் தேவையில்லை. இதனை விட இன்னும் பல சாத்தியக்கூறுகள் மூலமும் புலிகளின் அரசியலை புரிந்து கொள்ளும் வாய்ப்புக்கள் இருக்கவே செய்கின்றன.

குட்டி பூர்சுவா வர்க்கத்தைச் சேர்ந்த புலிகள் தமது குழுநலன்களில் காட் டிய அதீத அக்கறை காரணமாக ஏனைய குழுக்களை அழித்து, பலம்பெற்று இன்று ஒரு தனியான வர்க்கமாக உருவாகிவருகிறார்கள் என்பது ஒரு விளக்கமாகும். புலிகளின் 'பாசிசத்தை' தாபனத்துள்ளும், மக்களுடனும் உள்ள உறவுகளில் ஜனநாயகமின்மையை குட்டி பூர்சுவா வர்க்கத்தின் கட்டுப்பாட்டிற்கு உட்பட மறுக்கும் தனிநபர் வாதத்தின் தீவிரமான எதிர் நிலையாக சிலர் குறிப்பிடுவது கவனமாக பரிசீலிக்க வேண்டியதாகும்.

சமூகநலன்களின் அக்கறையின்மை, தரகு முதலாளிகளிடம் கூட இணக்கம் காண முடியாத தன்மை, போதைப் பொருள் மற்றும் பலவித சமூகவிரோத நடவடிக்கைளுடனான தொடர்பு போன்ற அம்சங்கள் இவர்களது வர்க்க மூலங்களில் ஒன்றான உதிரிமுதலாளி வர்க்கத்தின் தன்மைகள் என்பது இன்னோர் விளக்கமாகும். சில சந்தர்ப்பங்களில் புலிகளின் சில செயற்பாடுகள் 'மாபியா' கும்பல்கள் சர்வதேச போதைப்பொருள் கட்டங்களுடனும் இனம் காணத்தக்கதாக இருப்பதும் கவனத்துக்குரியது.

குட்டி முதலாளித்துவ அமைப்பாக தோன்றிய புலிகள் வளர்ந்து விட்ட நிலையில் தமது சமூக அந்தஸ்து,அதிகாரம் காரணமாக பெருமளவு மூலதனத்தைத் திரட்டிக் கொண்டு தரகுமுதலாளி வர்க்கமாக வளர்ந்து வரும் ஒரு வளர்ச்சிக் கட்டத்தில் இருக்கிறார்கள். இந்த மாறும் கால கட்டமே இவர்களை இனம் காண்பதிலுள்ள குழப்பங்களுக்கான காரணமாகும். இவர்கள் ஒரு போராட்டச் சூழலில் அதுவும் போராட்டத்திற்கு தலைமைதாங்கும் ஒரு அமைப்பாக இருப்பதனால் சமுதாயத்தில் சமூகமான உற்பத்தி உறவுகளை இன்னும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை. ஆனால் தமது வளர்ச்சியின் அடுத்த கட்டத்தில் இவர்களது நலன்கள் இன்னும் தெளிவாக வெளிப்படும். அதாவது தமது பலத்தை இன்னும் உறுதியாக கெட்டிப்படுத்திய பின்பு- தமிழீழத்தை விடுவித்த பின்பு அல்லது வடக்கு கிழக்கில் பெரும்பகுதியை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்த நிலையில் ஸ்ரீலங்கா அரசுடன் பலமான நிலையில் நின்று பேரம்



பேச முனைகையில் இந்த அம்சங்களை தெளிவாக இனம் காணலாம் என்பது இன்னோர் விளக்கமாகும்.

இப்படியாக இன்னும் பல சாத்தியக்கூறுகள் இருப்பதால் புலிகளின் அரசியல் தேசியமுதலாளி - தரகு முதலாளி என்ற இரண்டு துருவங்களுள் ஒன்று மட்டுமே என்று பார்க்காமல் வேறும் பலவிதமான வாய்ப்புக்களையும் பரிசீலிப்பது அவசியமானது. அப்போது தான் புலிகள் தொடர்பான தமது சொந்த நிலைப்பாடுகளையும் எதிர்கால வேலைமுறைகளையும் திட்டமிடுவது புரட்சியாளர்களுக்கு சாத்தியப்படும். ஆகவே இந்த திசையில் எமது தேடல்களை இன்னும் ஆழப்படுத்துவது உடனடி அவசரப்பணியாகிறது.

இந்த நிலையில் புலிகளை தேசியசக்தி என்று குறிப்பிடுவது எந்த அர்த்தத்தில் சரியானதாகும்?

தேசிய சக்தி எனும் பிரச்சினை இந்திய தலையீட்டுடனேயே தொடங்கியது. இந்தியா தென்னாசிய பிராந்திய வல்லரசு என்பதிலும், அது ஈழத்தமிழர் பிரச்சினையில் தலையிடுவது தனது மேலாதிக்கத்திற்காகவே என்பதையும் முதலில் புரிந்து கொள்வது அவசியமானது. இவ்வாறு இந்திய அரசும், அதன் ஆளும் வர்க்கங்களும் தமது நலன்களுக்கு சாதகமாக ஸ்ரீலங்காவின் இறைமைக்கும், தமிழ் மக்களின் போராட்டத்திற்கு குந்தகமான விதத்திலும் ஸ்ரீலங்கா அரசுடன் ஒரு உடன்பாட்டை- தமிழ் மக்களின் எந்தவித ஆலோசனையும் கலக்காமல், தமிழ் மக்களது சம்மதத்தையும் பெறாமல் செய்துவிட்டு, அதனை தமிழ்மக்கள் மீது திணிக்கமுறப்பட்ட போது, இந்தியஅரசு தனது நலன்களை மட்டுமே கருத்திற்கொண்டு தமிழ்மக்களுக்கு எந்தவித'மான உருப்படியான தீர்வுகளையும் வழங்காது தமிழ்மக்கள் தமது போராட்டத்தை கைவிடும்படி நிர்ப்பந்தித்த நிலையில் இந்திய அரசுடன் முரண்பட்டு மோதுவது தமிழ்த்தேசியத்தை பொறுத்த வரையில் தவிர்க்க முடியா'ததாகிறது. இந்த வகையில் புலிகள் விரும்பியோ விரும்பாமலோ முழுமனதுடனோ அரைகுறைமனதுடனோ இந்திய இராணுவத்துடன் மோதியதன் மூலம் தமிழ்த்தேசியத்தையே பிரதிநிதித்துவம் செய்தார்கள். இப்படிப்பட்டயுத்தம் நடைபெறும்போது இந்த யுத்தத்தில் யார் பக்கத்தில் நியாயம் இருக்கிறது என்ற பொதுப்படையான கேள்விக்கு பதிலாக புலிகள் ஒரு தேசிய சக்தியென்று குறிப்பிடுவது சரியானதே. இதன் மூலம் நாம் இந்திய அரசை ஆதரிப்பதோ, பலப்படுத்துவதோ முடியாது என்ற நிலைப்பாடு உருவாகிறது.

இவ்வாறே 1990 ஜூனில் ஆரம்பித்த யுத்தமானது புலிகளின் தலைமையில் தனிப்பட்ட விருப்பு வெறுப்பிலிருந்து பிறந்ததல்ல. 70 களில் தொடங்கி 80 களில் தீவிரப்பட்ட போராட்டமானது யாரோசில தனிப்பட்ட நபர்களது விருப்பு வெறுப்புகளில் இருந்து பிறந்ததல்ல.இப்படி கருதுவது மார்க்சிய அணுகுமுறையுமாகாது. தமிழ்தேசிய இனத்தின் மீதான பேரினவாத ஒடுக்குமுறைகள் சாதாரண அரசியல் வழிமுறைகளினால் அகற்றப்பட முடியாமல் போனதால், அந்த அரசியலின் தொடர்ச்சியாகவே இந்த ஆயுதப்போராட்டம் வெடித்து. பின்பு இந்தியப் படைகள் தலையிட்டபோது புலிகள் ஒரு கட்டத்தில் ஸ்ரீலங்கா அரசுடன் பேசத் தொடங்கினர். இந்தப் பேச்சுவார்த்தைகளில் எந்தவிதமான உருப்படியான தீர்வையும் ஸ்ரீலங்கா அரசு முன்வைக்கவில்லை. (இன்றுவரையும் தனது தீர்வை முன்வைக்க முடியாத வங்குரோத்து நிலையிலேயே அரசு இருக்கிறது) இந்த நிலையில் தமிழ்த்தேசியமானது மீண்டும் வன்முறை வடிவம் பெற்று போராக வெடித்தது தவிர்க்கமுடியாததே. புலிகள் மட்டுமல்ல வேறெந்த சக்தி அந்த நிலையில் இருந்தாலும் சற்று விரைவாகவோ அல்லது சற்று தாமதமாகவோ இப்படிப்பட்ட ஒரு மோதலில் ஈடுபட்டிருக்க வேண்டி ஏற்படுவது- அது. தமிழ்தேசியத்தின் நலன்களைக் கைவிட்டு எதிரியிடம் சரணடையாத வரையில்- தவிர்க்கமுடியாததே. ஆகவே இந்த யுத்தத்தில் புலிகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசியத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள்என்பதே உண்மை நிலையாகும். இந்த நிலையில் ஸ்ரீலங்கா அரசை ஆதரிப்பதோ, பலப்படுத்துவதோ, தமிழ்த்தேசியத்திற்கு எதிராக செயற்படுவதாகவே அர்த்தப்படும்.

இப்படியான ஒரு யுத்தத்தில் நியாயம் எந்தப்பக்கத்தில் இருக்கிறது என்று பொதுப்படையான கேள்விக்கு விடையளிக்கும் வகையில் புலிகளை தேசிய சக்தியாக இனம் காண்பது சரியானதே. ஆனால் இதற்கு மேலாக இன்னும் குறிப்பாகவும், கறாராகவும் இதனைப் பரிசீலிப்போமாயின் எமது அடுத்தகடமை என்னவென்று புலனாகும். மிகவும் பொதுப்படையான, மிகவும் மேலெழுந்த அர்த்தத்தில் பார்க்கையில் புலிகள் இந்த யுத்தத்தில் தமிழ்த்தேசியத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதாக தோன்றினாலும் மிகவும் குறிப்பான, மிகவும் கறாரான பரிசீலனையில் புலிகளிடம் தமிழ்மக்களுக்கு விரோதமான உண்மையான தமிழ்த்தேசியத்திற்கு விரோதமான அம்சங்களும் காணப்படுவது புலப்படும்.

தமிழ்த்தேசியத்தை முன்னெடுப்பதில் புலிகள் தமிழ்மக்களுக்கு உடன்பாடான அம்சத்தைக் கொண்டிருந்தாலும் அடிப்படையில் இவர்கள் தமிழ் மக்களுக்கு எதிரான பல அம்சங்களை கொண்டுள்ளார்கள். தேசியம் என்பதைத் தவிர தமிழ் மக்களின் மற்றெல்லா அபிலாசைகளுக்கும் இவர்கள் முரண்பட்டவர்களே. தேசிய இனப்பிரச்சினை என்பது அடிப்படையில் ஒரு ஜனநாயகப் பிரச்சினை. ஆனால் தேசிய விடுதலையை முன்னெடுப்பதாகக் கூறும்புலிகள் அடிப்படையிலேயே பாசிசத் தன்மைகளைக் கொண்டிருப்பது ஒரு பெரிய முரண்பாடாகும். தேசிய விடுதலையானது இவர்களது அர்த்தத்தில் மக்களது விடுதலை அல்ல. இன்னும், தேசிய விடுதலைப் போராட்டத்தில் தமிழ் மக்களது பாத்திரத்தை மறுப்பதன், மூலமும் இன்னொரு சிறுபான்மை இனமான முஸ்லிம் மக்களை பகைமையுடன் நடத்துவதன் மூலமும், இது போன்ற இன்னும் பல தொலை நோக்கற்ற நடவடிக்கை நீண்ட காலத்தில் தமிழ்த்தேசியத்தில் நலன்களுக்கு விரோதமாக, தமிழ்த்தேசியத்தை பலவீனப்படுத்தும் விதத்திலேயே செயற்படுகிறார்கள்.

ஆயினும் பேரினவாதம் மிகவும் மோசமான வடிவம் பெற்று இனப்படுகொலை எனும் வடிவத்தைப் பெற்றுள்ளதனாலும், தமிழ்மக்களின் அபிலாசைகளை புரிந்து கொண்டு எந்த விதமான குறைந்த பட்ச, ஜனநாயகப் பூர்வமான தீர்வுகளையும் முன்வைக்க முடியாது சிங்கள தரகு முதலாளிவர்க்கம் இனவாதத்திற்குள் சிக்கி போயுள்ளதாலும் யுத்தம் தொடர்கிறது. இந்த யுத்தத்தில் தமிழ்த் தேசியத்தின் பக்கத்தில் நின்று அரசபடைகளை முகம் கொடுக்கும் ஒரே சக்தியாக புலிகள் இருக்கும் வரை மக்களைப் பொறுத்தவரையில் சிங்களப் பேரினவாதத்திற்கும் தமிழ்த்தேசியத்திற்கும் இடையிலான முரண்பாடு பிரதான வடிவம் பெறுவதனால் புலிகளுக்கும் - தமிழ் மக்களுக்கும் இடையிலான முரண்பாடு இரண்டாம் பட்சமாக உள்ளது.

ஆகவே புலிகளின் அரசியலில் உள்ள இரண்டு முக்கிய அம்சங்களை சரியாக இனம் காணவேண்டும்.

1)தமிழ் மக்களின் தேசிய அபிலாசைகளை பிரதிநிதித்துவப் படுத்துவதால் தமிழ்மக்கள் சார்பானது

2)தமிழ் மக்களின் மீது மோசமான அடக்குமுறைகளை கட்டவிழ்த்து விடுவதனால் தமிழ்மக்கள் நலன்களுக்கு விரோதமானது.

இவற்றுள் ஏதாவது ஒரு அம்சத்தை மட்டும் பார்க்கவோ அல்லது ஒன்றை மட்டுமே முதன்மைப்படுத்தி மற்றையதைப் பற்றி பாராமுகம் காட்டுவதோ புலிகள் பற்றிய முழுமையான மதிப்பீடாகாது.



புலிகளை தேசியசக்தியாக இனம்காணும் சிலர் அதனைப்பலப்படுத்த முனைகையில் அவர்கள் முதலாவது அம்சத்தை மட்டுமே முதன்மைப்படுத்தி இரண்டாவது அம்சத்தை மறந்து விடுகிறார்கள். புலிகளை தோற்கடிப்பதே உடனடிப்பணிஎன்று கூறி இலங்கை இந்திய அரசுகளுடன் கூட்டு சேர்பவர்கள் இரண்டாவது அம்சத்தை முதன்மைப் படுத்தி முதலாவது அம்சத்தை மறந்து விடுகிறார்கள். இன்னோர் விதத்தில் பார்த்தால் புலிகளைப் பலப்படுத்துபவர்கள் புலிகள் தமிழ்மக்களை ஒடுக்குவதற்கும் மறைமுகமாக துணைபோகிறார்கள். இலங்கை, இந்திய அரசுகளுடன் இணைந்து புலிகளுக்கு எதிராக போராட முனைபவர்கள் மறைமுகமாக தமிழ்த்தேசியத்தை ஒடுக்குவதிலும் பங்கெடுக்கிறார்கள்.

ஆகவே புரட்சியாளர்களின் நிலைப்பாடு என்னவாக இருக்க முடியும்?

தமிழீழ விடுதலைப் போராட்டத்துடன் தொடர்புடைய புரட்சியாளர்களின் கடமை, இந்தியாவில் அல்லது தென்னிலங்கையில் உள்ள புரட்சிகர சக்திகளுடைய கடமை போன்று மேலெழுந்த வாரியானதும் பொதுப்படையானதுமான முடிவுகளுக்கு வருவதும், எவர் சரி, எவர் பிழை என்று கூறுவது மட்டுமல்ல. மாறாக தமிழ்ப் புரட்சியாளர்கள் இந்த யுத்தம் தொடர்பாக மிகவும் குறிப்பான, ஆழமான, கறாரான நிலைப்பாடுகளை மேற்கொண்டு அதன் பின்னணியில் தமது திட்டங்களை வகுத்து செயற்படுவதன் மூலம் வரலாற்றுப் போக்கில் தலையிட்டு செயற்படுவது அவர்களது கடமையாகிறது. ஆகவே சரியான மாற்றை முன்வைக்கும் புரட்சிகர கடமை தமக்கு உண்டு என்ற கரிசனையுடன் பொறுப்புணர்வுடன் இந்த பிரச்சினையை அணுகுவது அவசியமானது.

இந்தியாவில் உள்ள அல்லது தென்னிலங்கையில் உள்ள புரட்சியாளர்கள் புலிகளை தேசியசக்தி என இனங்கண்டு தமிழ்த்தேசியத்திற்கு எதிராக செயற்படும் இந்திய ஸ்ரீலங்கா அரசுகளை அம்பலப்படுத்துவது சரியானதே. ஆனால் இதற்கு அப்பால் போய் புலிகளைப் பலப்படுத்த முனைகையில் அவர்கள் தமிழீழப்புரட்சியாளர்களை பலவீனப்படுத்தும் வேலைகளையும் செய்கிறார்கள். தமிழீழப் புரட்சியாளர்கள் புலிகளைத் தேசிய சக்தி என்று இனம் கண்டு இந்திய, ஸ்ரீலங்கா அரசுகளை அம்பலப்படுத்துவது சரியானதே. ஆனால் அதற்கப்பாற் போய் புலிகளைப் பலப்படுத்த முனைகையில் தமிழ்மக்களுக்கு சரியான மாற்றுத்தலைமையை கொடுக்க வேண்டிய தமது பொறுப்பை தட்டிக் கழிப்பவர்கள் ஆகிறார்கள். தமிழ்மக்களின் தேசிய அபிலாசைகளுக்கு எதிராகவே இந்திய, ஸ்ரீலங்கா அரசுகள் யுத்தத்தை மக்கள் மீது திணிக்கிறார்கள் என்றவகையில் இந்திய, ஸ்ரீலங்கா அரசுகளை எதிர்ப்பது தமிழ்மக்களின் நலன்களை பிரதிநிதித்துவப்படுத்த முனையும் ஒவ்வொருவரது கடமையாகும். இந்தக் கடமையை தவறவிட்ட எவருமே தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதோ, அவர்களை சரியாக வழிநடத்துவதோ சாத்தியப்படாது. இவ்வாறு செய்வதன் மூலம் இவர்கள் தமிழ்மக்கள் மத்தியில் புலிகளின் தலைமையை பலப்படுத்தவே மறைமுகமாக உதவுகிறார்கள். புலிகளை அதன் பாசிச அடக்குமுறைகளை உண்மையிலேயே பலவீனப்படுத்த விரும்புபவர்கள் எவருமே தமிழ் மக்களின் தேசிய அபிலைசைகளை இன்னும் பலமாக,இன்னும் புரட்சிகரமான வழியில், அதிக ஜனநாயகத்துடன் முன்னெடுப்பது முன்நிபந்தனையாகிறது. இதன்மூலம் தான் தமிழ் மக்களுக்கு சரியான மாற்று புரட்சிகர அரசியலை , மாற்று அமைப்பை, மாற்று புரட்சிகர போராட்ட வழிமுறைகளை கொடுக்கலாம்.இதன்மூலம் புலிகளை மக்களிடம் இருந்து தனிமைப்படுத்துவது சாத்தியப்படும். புரட்சிகர தத்துவத்தின் வழிகாட்டுதலில், பாட்டாளிவர்க்க தலைமையில், பரந்துபட்ட மக்களின் யுத்தமாக தமிழீழ விடுதலைப்போராட்டத்தை முன்னெடுப்பதே சரியான மாற்றாக அமையும்.

www.tamilarangam.net

புரட்சியாளர்கள் இவ்வாறு செயற்படுவதை புலிகள் அனுமதிக்கப்போவதில்லை. எந்தவொரு சரியான சக்தியின் வளர்ச்சியை அனுமதிப்பதும் புலிகளை பொறுத்தவரையில் 'தற்கொலை முயற்சியே' ஆதலால் இந்த வகைப் பட்ட எந்தவொரு முயற்சியையும் அதன் முளையிலேயே கிள்ளிவிட புலிகள் தமது சக்திகள் அனைத்தையும் திரட்டி- அவதூறுகளைப் பரப்பியும் எதிரியின் உளவாளிகள் என்று குற்றஞ்சாட்டியும், சதித்தனமான நடவடிக்கைகளினாலும், நேரடியாக இராணுவ ரீதியாக தாக்குதல்களினாலும்- முயல்வர் .இப்படிப்பட்ட நிலையில் தன்னை தற்காத்துக் கொள்ளும் நியாயமான உரிமை எந்தவொரு புரட்சிகர சக்திக்கும் உண்டு. எதிரியினதும் எதிர்ப் புரட்சிகர சக்திகளினதும் அங்கீகாரத்தை பெற்றுத்தான் புரட்சியாளர்கள் செயற்பட வேண்டும் என்று யாரும் கருதக் கூடாது. ஆகவே இது போன்ற தாக்குதல்களை முன்னரே எதிர்பாத்து தயாராக செயற்படும் போது புலிகளின் இத்தகைய முயற்சிகள் எதுவும் புரட்சிகர சக்திகளை அழித்துவிட மாட்டாது. மாறாக சரியான அரசியல் திட்டத்தையும்,அமைப்பு வடிவத்தையும், போராட்ட வழிமுறைகளையும் மக்கள் முன்வைத்து மக்களை ஜனநாயக பூர்வமாக அணிதிரட்ட முனையும் ஒரு புரட்சிகர அமைப்பை தாக்குவது என்பது புலிகளைத்தான் மக்களிடம் இருந்து தனிமைப்படுத்தும். ஒரு புரட்சிகர அமைப்பு தனது கொள்கைகளை மக்கள் முன்வைத்து செயற்படும் நிலையில் புலிகள் அந்த அமைப்பின் மீது அவதூறுகளைப் பொழிவது கூட புலிகளையே அம்பலப்படுத்தும்.

புலிகள் மிகவும் பலம் பெற்று விளங்கும் இன்றைய நிலையில் புலிகளின் தாக்குதல்களை முகம் கொடுத்து சமாளிப்பது ஒரு சிறிய புரட்சிகர அமைப்பிற்கு கஷ்டமானது தான். இப்படிப்பட்ட நிலமைகளில் நேரடியாக மோதலைத் தவிப்பதும், தலைமறைவாக இரகசியமாக செயற்படுவதும் சிறிய அமைப்புகளுக்கு சாத்தியமானதே. இந்த வழிமுறைகளில் புரட்சியாளர்கள் கவனம் செலுத்தி தம்மை பலப்படுத்திக் கொண்டால் தங்களை தற்காத்துக் கொள்வது முடியாததல்ல. எந்தவொரு போராட்டத்திலும் பிரதான, தீர்க்கமான சக்தி மக்களே அன்றி கருவிகள் அல்ல. புலிகளை விட பலமாக விளங்கும் அரசை எதிர்த்துப் போக தயார் எனக் கூறும் புரட்சியாளர்கள் போராட்டத்தினுள் எழும் புலிகள் போன்ற சக்திகளை கையாளவும் கற்று கொள்வது அவசியமானது.

புலிகள் பற்றிய மிதமிஞ்சிய எதிர்ப்புணர்வானது சில அமைப்புக்களை ஸ்ரீலங்காவின் பாசிசத்தை மறக்கும் அளவிற்கு செய்துள்ளது. அரசின் கைக்கூலிகளாக ஆக்கியுள்ளது. புலிகளின் அடக்கு முறைகளை எதிர் கொள்ள முடியாத இயலாமையில் இருந்து பிறக்கும் துரோகத்தனம். இது வாகும். புலிகளின் அடக்கு முறைகளுக்கு முகம் கொடுக்கும் சரியான ஒரே வழி சரியான ஒரு புரட்சிகர தாபனத்தை கட்டியமைத்து போராட்டத்தை இன்னும் உறுதியாக முன்னெடுப்பதேயாகும். இதற்கு மாற்றாக வேறு குறுக்கு வழி எதுவுமே கிடையாது.

ஸ்ரீலங்கா அரசு எமது எதிரி என்பதை எந்தக் கணத்திலும் மறந்து விடக்கூடாது. இன்று புலிகளை பலவீனப்படுத்துவதாக கருதிக் கொண்டு எதிரியைப் பலப்படுத்துவதானது எதிரி நாளை புரட்சியாளர்கள் மீது தாக்கத் தொடங்கும் போது எதிரிக்கு சாதகமாகவே அமையும்.



# ஐக்கிய முன்னணி எனும் பிரச்சினை பற்றி........

புலிகள் ஒரு ஐக்கிய முன்னணி அமைக்காத வரையில் விடுதலைப் போராட்டத்தில் வெற்றி பெறுவது சாத்தியமில்லை என்ற வகையில் கருத்து தெரிவிக்கும் சிலர் புலிகளுடன் ஐக்கிய முன்னணியை அமைப்பதே புரட்சியாளர்களின் உடனடிப்பணி என வலியுறுத்துகிறார்கள். சீனாவில் யப்பானின் ஆக்கிரமிப்பிற்கு எதிரான போராட்டத்தில் மாவோ தெரிவித்த கருத்துக்களின் தாக்கத்தை இவர்களில் காணமுடிகிறது. ஆனால் எமது போராட்ட நிலமை சீனாவில் அன்றிருந்த நிலமைகளில் பல அம்சங்கள் வேறுபட்டதாகும்.

முதலாவதாக புலிகளின் இன்றுள்ள நிலையில் போராட்டத்தின் வெற்றியானது ஐக்கிய முன்னணி இன்றேல் சாத்தியப்படவே மாட்டாது என்பது சரியான வாதமல்ல. புலிகள் இன்று அரசபடைகளுடன் கிட்டத்தட்ட சமபலம் வாய்ந்த முறையில் போரிட்டு வருகின்றனர். எதிர் காலத்தில் இந்த இராணுவம் சமபலத்தில் **(Balance)** புலிகளுக்கு சாதகமாக ஏற்படும் எந்தவொரு மாற்றமும் கூட புலிகள் சிலபகுதிகளை முற்றாக விடுவித்து தனது அரசு அதிகாரத்தை நிறுவுவதை நோக்கி இட்டுச் செல்லலாம் (உதாரணமாக சில **sam** கள், சில **artilary pieces ).**

இரண்டாவது பிரச்சினை ,புலிகள் அப்படி ஐக்கிய முன்னணி அமைப்பதற்கு முன்வந்தாலும் யாருடன் ஐக்கிய முன்னணியை அமைப்பது என்ற பிரச்சினையாகும். இன்று தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் ஒரே அமைப்பாக புலிகள் மட்டுமே இருக்கின்றனர். ஏனைய பிரதான அமைப்புக்கள் அனைத்துமே பிரிவினைக் கோரிக்கையை கைவிட்டு விட்டு ஸ்ரீலங்கா, இந்திய அரசுகளிடம் சரணடைந்து விட்டன. ஏனைய புரட்சிகர குழுக்கள் ஒரு சரியான அமைப்பு வடிவத்திலேயே இல்லை. ஆகவே புலிகள் ஐக்கிய முன்னணி அமைப்பதாயினும் கூட அதற்கு தகுதியான வேறு அமைப்பொன்று தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இல்லை என்பதே இன்றைய நிலையாகும்.

மூன்றாவது, சீனாவில் கொம்னியூஸ்ட்டுக்கள் கட்சி ஒரு பலம் பெற்ற அமைப்பாக இருந்தது. கோமிங்டாங்கும் இது போன்றே பலமான அமைப்பாக இருந்தது. இந்த நிலையில் ஜப்பானிய ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு அபாயம் உடனடியாக பிரச்சினையாக எழுந்த போது அதனைத் தோற்கடித்தல் எனும் பிரச்சினையில் உடன் பட்ட இரண்டு அமைப்புக்கள், பரஸ்பரம் இரண்டு அமைப்புக்களது தனித்துவங்களையும் பேணிக்கொண்டு ஐக்கிய முன்னணியை அமைத்தன. ஐக்கியமும் போராட்டமும் என்பது ஐக்கிய முன்னணிக்குள்ளும் தொடர்ந்தது. இந்த நிலையில் ஐக்கியமுன்னணி தந்திரோபாயமானது சீன கொம்யூனிஸ்ட் கட்சிக்கும் சீனப்புரட்சிக்கும் பாரிய நன்மைகளை ஏற்படுத்தியது. எமது போராட்டத்தில் புரட்சிகர அமைப்புக்கள் எதுவுமே குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அமைப்பு வடிவத்திலும்,பலத்திலும் காணப்படவில்லை. புலிகள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் யாராவது கலந்து கொள்வதாயின் அவர்கள் தன்னோடு நேரடியாக இணைந்து கொள்ள வேண்டும் எனக்கூறி மாற்று அமைப்புக்கள் எதனையும் அங்கீகரிப்பது ஒரு புறம் இருக்க அனுமதிக்கவே தயாராகவில்லை. இப்படிப்பட்ட நிலையில் புரட்சியாளர்கள் வெறுமனே ஐக்கிய முன்னணியைப் பற்றிப் பேசுவதில் என்ன அர்த்தம் இருக் கமுடியும். மாற்று, புரட்சிகர அமைப்பைக் கட்டும் பணி புரட்சியாளர்களின் முன்னே இருக்க அதனை விட்டு விட்டு ஐக்கிய முன்னணி பற்றி பேசுவது புரட்சியாளர்கள் தமது கடமையை புறக்கணிப்பதுடன் புலிகளின் ஏகபோக மனோபாவத்தை

www.tamilarangam.net

பலப்படுத்துவதாகவும் அமைகிறது. ஆகவே புரட்சியாளர்களின் உடனடிப்பணி ஒரு சரியான, புரட்சிகர மாற்று அமைப்பை நிறுவுவதேயாகும். இப்படிப்பட்ட ஒரு அமைப்பானது கட்டியமைக்கப்பட்டு பலம்பெறும் போது தான் ஐக்கிய முன்னணி பற்றிய பிரச்சினையே எழும். இவ்வாறான நிலையில் புரட்சிகர அமைப்பின் ஐக்கிய முன்னணிக்கான கோரிக்கையை புலிகள் நிராகரித்தால் அது புலிகளை அம்பலப்படுத்தவும், தனிமைப்படுத்தவும்செய்யும். அப்படியாக அல்லாமல் புரட்சிகர அமைப்பாக தம்மையே இன்னும் ஒழுங்கமைத்து கொள்ளாத, தனிநபர்களாக அல்லது சிறுகுழுக்களாக உள்ள சிலர் ஐக்கிய முன்னணி பற்றிய கோரிக்கையை வலியுறுத்துவது புலிகளின் ஏகபோக நிலைப்பாட்டையே பலப்படுத்தும். புரட்சியாளர்கள் தாமே ஒரு அமைப்பாக ஒழுங்கமைத்துக் கொள்ளாத நிலையில் தனிநபர்கள் என்ற முறையில் அவர்கள் புலிகளுடன் நேரடியாக இணைவதே சரியானது என்று புலிகள் தமது ஏகபோக நிலைப்பாட்டை நியாயப்படுத்தவும் இது உதவும்.

ஆகவே இன்று புரட்சியாளர்கள் முன்னுள்ள உடனடிப்பணிஒரு புரட்சிகர அமைப்பைக் கட்டுவதே அன்றி ஐக்கிய முன்னணி பற்றிய பிரச்சினையல்ல.

## மானுடவாதம் தொடர்பாக.....

தமிழீழ விடுதலைப் போராட்டம் என்பது அடிப்படையில் தமிழ்மக்களின் விடுதலை பற்றிய பிரச்சினையாக புரிந்து கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்தும் சிலர் மக்களின் விடுதலையை சாதிக்காத ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றும் முயற்சியினால் விளையும் பயன் என்ன என்று கேட்கிறார்கள். கடந்த காலங்களில் புரட்சியை முடித்து ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிய நாடுகளில் இன்று நடப்பவற்றின் வெளிச்சத்தில் இந்தக் கேள்வி இன்னும் அதிக அர்த்தம் பெறவே செய்கிறது.

புலிகளின் அரசியலில் உள்ள தேசியத்தை மட்டும் கருத்திற் கெடுத்து அதனைப் பலப்படுத்த முனைபவர்களுக்கு பதிலாக இந்த வாதம் அமைகையில் இதனுடன் நாமும் முழுமையாக உடன்பட முடியும். ஆனால், இங்கு முக்கியமானது என்னவென்றால் இந்தவகையான விமர்சனத்திற் கூடாக என்ன நிலைப்பாட்டை வந்தடைகிறோம் என்பது தான் இந்த விமர்சனம் புலிகளின் குறுகிய நோக்கங்களை அம்பலப்படுத்தி, தேசிய விடுதலைப் போராட்டத்தை இன்னும் விரிவான அர்த்தத்தில் முன்னெடுக்க வழிகாட்டுமாயின், புரட்சியாளர்கள் மாற்று அமைப்பொன்றை உருவாக்கி போராட்டத்திற்கு தலைமை கொடுக்க வேண்டியதன் அவசியத்தை சுட்டிக் காட்டுமாயின், இந்த விமர்சனம் அர்த்தம் பொதிந்ததே. மாறாக புலிகள் பற்றிய விமர்சனமானது பேரினவாத அரசு பற்றிய மதிப் பீட்டை கைவிடச் செய்யுமாயின், தமிழ் மக்களின் தேசிய அபிலாசைகளின் நியாயமான தன்மையையும், பேரினவாத அரசின் இன ஒழிப்பையும் கருத்திற்கெடுக்க தவறுமாயின்;இறுதியில் இந்த விமர்சனம் பிரேமதாசாவை பலப்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டிற்கு இட்டுச் செல்லுமாயின் இந்த விமர்சனத்தின் நோக்கம் சந்தேகத்திற்குரியதாகிறது.

மக்களின் விடுதலை, விமோசனம் என்று குறிப்பிடுகையில், நாம் வாழும் சமுதாயம் ஒரு வர்க்க சமுதாயம்என்ற அடிப்படையில் வர்க்கங்கள், அவற்றிக்கிடையிலான உறவுகள் அவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனங்கள், பல்வேறு அமைப்புக்களும் முன்னெடுக்கும் அரசியலின் பின்னால் உள்ள பல்வேறுபட்ட வர்க்கங்களின் நலன்கள் போன்றவற்றின் அடிப்படையிலேயே புரிந்து கொள்ள வேண்டும். இவற்றையெல்லாம் நீக்கிவிட்டால் மக்கள் என்பது வெறும் சூட்சுமக் கருத்தே. எந்த விதமான முக்கியத்துவமும் இதற்கு இருக்கப்போவதில்லை.



தமிழ் மக்களின், தமிழ்ச்சமுதாயத்தின் விடுதலை என்று பேசும் போது இலங்கையின் குறைவிருத்திநிலை, இது தோற்றுவிக்கும் வர்க்கங்கள், அமைப்புக்கள், அரசின் தன்மை, இவற்றிக்கிடையிலான உறவில் பேரினவாதத்தின் பாத்திரம் தமிழ் மக்களின் தேசிய அபிலாசைகள், தமிழ்த்தேசியத்தை முன்னெடுக்கும் பல்வேறு வர்க்கங்களின் பாத்திரம் போன்றவை தொடர்பாக ஸ்தூலமான ஆய்வின் அடிப்படையில் திட்டவட்டமான நிலைப்பாடுகளை மேற்கொண்டு,இந்நிலைப்பாடுகளின் அடிப்படையில் உறுதியாக செயற்படுவது முக்கியமானது. இதற்கு மாறாக மக்கள் என்று பொதுப்படையாக பேசுவதோ புலிகளின் ஜனநாயக விரோத நோக்கு என்ற குறிப்பான பிரச்சினையை தமிழ்த் தேசியத்தின் பொதுப்படையான பிரச்சினையாக்குவதோ எந்த உருப்படியான பயனையும் விளைவிக்கப்போவதில்லை. இறுதி ஆய்வில் இவை எதிரியை பலப்படுத்தும் செயலாகவே அமையும். கடந்த காலங்களில் புலிகளுக்கும் மக்களுக்கும் இடையிலான உறவின் முரண்பாடுகள் தீவிரம் அடைந்து புலிகள் மக்களிடம் இருந்து அந்நியப்பட்டுப் போகும் நிலைமை பல சந்தர்ப்பங்களிலே எழவே செய்தது. ஆனால் அப்போதெல்லாம் புலிகளை எதிர்ப்பதாகவே கூறிக்கொண்டு செயற்பட்ட ஏனைய அமைப்புக்களின் தொலைநோக்கற்ற செயற்பாடுகளே புலிகளைப் பலப்படுத்தவும் புலிகள் தமிழ் மக்களின் பாதுகாவலர் என்று தமிழ் மக்கள் உணரவும் செய்தன. ஆகவே புலிகளை எதிர்ப்பதாக கூறிச் செயற்படும் எந்தவொரு செயற்பாடுமே அதன் நீண்டகால விளைவுகள் பற்றிய கண்ணோட்டத்துடனும் எமது சமூக பொருளாதார அரங்கிலுள்ள பல்வேறு சக்திகள் பற்றியகறாரான மதிப்பீட்டுடனும் சேர்ந்ததாக அமையாமல், அகநிலையானதாக,குறுகிய கண்ணோட்டமுடையதாக இருக்கும்போது புலிகளை பலவீனப்படுத்தும் நோக்கில் செயற்படும் அதே செயற்பாடுகள் புலிகளை பலப்படுத்துவதாக அமையலாம் என்பதே உண்மையாகும்.

## தடுப்பு யுத்தமும் அழிவு யுத்தமும்..

இன்றைய யுத்தத்தை எவ்வாறு மதிப்பிடுவது என்பதிலும் இரண்டு எதிரெதிரான போக்குகளை காணமுடிகிறது. ஒரு பகுதியினர் இந்த யுத்தத்தை *"அழிவு யுத்தம்"* என்கிறார்கள் மற்றோர் பகுதியினர் *தடுப்பு யுத்தம்"* என்கிறார்கள். இவர்களது வாதங்களைப் பார்ப்போம்.

புலிகளின் இருப்பிற்கு இந்த யுத்தம் அவசியமாதலால் இந்த யுத்தமானது புலிகளால் அவிழ்த்து விடப்பட்டது. தமிழ்மக்களது நலன்களில் அக்கறையில்லாத புலிகள் மக்களை அடக்குவதுடன் முற்போக்கு எண்ணமுடைய தனிநபர்களையும், குழுக்களையும் அழித்தொழித்துவருகின்றனர். கிழக்கில் மக்கள் பெருந்துயரத்திற்குள்ளாகும் நிலையிலும் கூட அவர்கள் தமது துயரங்களை களைவதற்கு அவசியமாக வெகுசன அமைப்புக்களை கூட தோற்றுவித்துக் கொள்ள புலிகள் அனுமதிப்பதில்லை. இந்த நிலையில் தமிழ் மக்களுக்கு எந்தவிதமான மாற்றத்தையும் கொண்டுவராத, அழிவை மட்டுமே கொண்டு வரும் இந்த யுத்தத்தை அழிவு யுத்தம் என்பதே பொருத்தமானது என வாதிடும் இவர்கள் முன்வைக்கும் இன்னும் சில கருத்துக்கள் கவனிக்கப்படவேண்டியவையாகும். சிங்கள இனத்தினுள் பிளவு ஏற்பட்டுள்ளது. பிரேமதாசா இனப்பிரச்சினையை முற்றாக தீர்த்து வைக்காவிட்டாலும் அதனைக் 'கையாளக்கூடிய அளவிற்கு' தணிக்க விரும்புகிறார். இதற்கு புலிகளே தடையாக

www.tamilarangam.net

உள்ளனர். இலங்கை இராணுவத்தினரின் செயற்பாடுகளை (படுகொலைகளையும் கூட) இனப்படுகொலை என்று கூறக்கூடாது. (ஜே.வி.பி எதிர்ப்பு படுகொலைகளை இனொழிப்பு என்று கூற முடியுமா என்ற கேள்வியின் பின்னால் உள்ள மறைபொருள் இதுவே) தடுப்பு யுத்தம் என்போரது முக்கியமான வாதங்கள் வருமாறு: அரசு தனது யுத்தத்தின் நோக்கம் தமிழ் மக்களை புலிகளின் பிடியில் இருந்து விடுவிப்பதே என்று கூறினாலும் இனவாத நோக்குடனேயே இந்த யுத்தத்தை நடத்துகிறது. இனவாத நோக்கம் கொண்ட இராணுவத்தின் செயற்பாடுகளுக்கு ஒரு தடுப்பாக செயற்படுவதனால் தமிழ் மக்களை பொறுத்த வரையில் இந்த யுத்தம் ஒரு தடுப்பு யுத்தமே. புலிகளின் குறுகிய அரசியல் காரணமாக புலிகள் முன்னெடுக்கும் எந்த வொரு யுத்தமும், அதில் அடையப் பெறும் வெற்றியும் கூட தமிழ் மக்களுக் கு உண்மையான விடுதலையை கொண்டுவந்து விடமாட்டாது என்பதால் இந்த யுத்தமானது பேரினவாத இராணுவத்திற்கு எதிரான தடுப்பாக மட்டுமே செயற்படுகிறது.

இனவாதம் மறைந்து வருகிறது அல்லது பலவீனப்பட்டு வருகிறது எனவாதிடுவோர் இனவாதத்தின் இன்றைய தன்மை பற்றி ஒரு முழுமையான ஆய்வை முன்வைக்கத் தவறுகிறார்கள்.இனவாதம் பற்றிய மதிப்பீடானது அரசின் ஒரு சில நடவடிக்கைகளை மாத்திரம் கணக்கிலெடுத்து கொண்டு அவற்றை தமது விருப்புகளுக்கேற்ப வியாக்கியானம் செய்வதாக அல்லாமல் இனவாதம் தொடர்பான கருத்தியலிலும், நிறுவனங்களிலும், அரசியலிலும், ஏனைய நடவடிக்கைகளிலும் ஏற்பட்டுவரும் புறநிலையான மாற்றங்கள் பற்றிய மதிப்பீடாக இருக்கையிலேயே அதுமுழுமை பெறும். இல்லாத போது இனவாதம் மறைந்து வருகிறது என்பது இவர்களது அகநிலை விருப்பார்வங்களை பிரதிபலிக்கிறதேயன்றி புறநிலை யாதார்த்தத்திலிருந்து பிறக்கவில்லை என்றதாகிறது(இந்த பிரச்சினை தொடர்பாக விரிவான பரிசீலனையை இன்னோர் சந்தர்பத்தில் எடுத்து கொள்வோம்).

அழிவு யுத்தம் என்போர் திட்டவட்டமான மாற்றை முன்வைக்கா விட்டாலும் அவர்களது கருத்துக்களை படிப்பவர்களுக்கு சில கேள்விகள் எழுவது தவிர்க்க முடியாததாயிற்று பேரினவாத இராணுவத்தின் நடவடிக்கைகளை எதிர்த்து போரிடுவதா அல்லது சரணடைவதா ? பிரேமதாசாவை நம்பலாம் என்றால் எமது எதிரிகளும் நண்பர்களும் யார்? இந்த வாதங்களை பரிசீலிக்கும் போது அதில் அவதானிக்கப்படும் அம்சங்கள் வருமாறு: இவர்கள் யுத்தம் என்பதை தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினை என்ற அரசியலில் இருந்து பிரிக்க முனைகிறார்கள். எமது போராட்டத்தில் தோன்றியுள்ள 'பாசிசம்' பற்றிய குறிப்பான பிரச்சினையை தமிழ் மக்களது தேசிய விடுதலை பற்றிய பொதுவான பிரச்சினையுடன் சேர்த்து குழப்புகிறார்கள். கிழக்கு மாகாணம் என்ற பகுதிப் பிரச்சினையை முழுமையாக்க முனைகிறார்கள். ஸ்தூலமாகநிலைமைகள் பற்றிஒட்டு மொத்தமான ஆய்வை முன்வைக்காத நிலையில் மாற்று என்ன என்பதில் பிரச்சினைகள் தோன்றவே செய்யும்.

இன்றைய போராட்ட சூழலில் பலர் விருப்பத்தகாத, மோசமான அம்சங்கள் ஓங்கி நிற்பது உண்மையே. அதற்காக இவற்றையெல்லாம் களைந்துவிட்டு மீண்டும் முதலில் இருந்து தொடங்குவோம் என்ற பாணியில் அணுக முற்படக் கூடாது. வரலாற்று சக்கரத்தை விரும்பினாலும் கூட எதிர்த்திசையில் திருப்ப முடியாது. இன்றைய சூழலில் தோன்றியுள்ள பல்வேறு சக்திகள் தொடர்பாக புரட்சிகரமான நிலைப்பாடுகளை

எடுத்து வரலாற்றுப் போக்கினுள் தலையிட்டு செயற்பட முனைய வேண்டும். இதன் மூலம் தமிழ் மக்களது போராட்ட தலைமையை புரட்சிகர சக்திகள் கையகப்படுத்த வேண்டும். புலிகளின் 'பாசிசம்' பற்றிய விமர்சனங்கள் எதுவும் தமிழ் தேசியத்தினுள் தோன்றியுள்ள உள் முரண்பாடு என்ற எல்லைக்குள்ளாகவே



முன்னெடுக்கப்பட வேண்டும். இந்த எல்லையைக் கடந்து எதிரியிடம் நம்பிக்கை வைக்கும் அளவிற்கு செல்லும்போது எதிர் விளைவுகளே ஏற்படுகின்றன. புரட்சியாளர்களது விமர்சனங்கள் குறைபாடுகளை களைந்து போராட்டத்தை புரட்சிகரமாக முன்னெடுப்பது பற்றியதாக இருக்கவேண்டுமே அன்றி விரக்தி மனோபாவத்தின் வெளிப்பாடாக இருக்க கூடாது. தமிழ் சமுதாயத்தில் உள்ள ஜனநாயக சக்திகளுக்கு உடனடியானதும், பாரியதுமான அச்சுறுத்தலாக விளங்குவது புலிகளின் 'பாசிசமே' ஆனால் இதனை முகம் கொடுக்க இயலாமை அற்புதங்களை நம்புவதற்கு இட்டுச் செல்கிறதா என்ற எச்சரிக்கை அவசியமானது.

இன்றைய யுத்தத்தை தடுப்பு யுத்தம் என்பதே இந்த யுத்தத்தின் குறைபாடுகளை சுட்டிக்காட்டுவதாயும் இதனை சீர் செய்வதற்கு மாற்று சக்தியொன்றின் அவசியத்தை வலியுறுத்துவதுமே கருதப்பட வேண்டும்.

## இறுதியாக சில வார்த்தைகள்.....

இன்றைய அரசியல் சூழ்நிலையை மதிப்பிடுவது தொடர்பாக இன்று பல்வேறு நபர்கள், குழுக்கள், சஞ்சிகைக்களுக்கிடையே நடைபெற்று வரும் கருத்துப் பரிமாற்றங்களை தொகுத்து பரிசீலிக்க இதுவரை முயன்றோம். இதில் நாம் முன்வைத்த கருத்துக்களே முற்றிலும் சரியானவை, முழுமையானவை என்று நா ம் கருதவில்லை. பல விடயங்கள் இன்னும் ஆழமாக பரிசீலனையும் தொடர்ச்சியான விவாதத்தையும் வேண்டி நிற்பவை. அந்த வகையில் இந்தக் கருத்துக்கள் தொடர்பான இன்னும் பல தரப்பட்ட கருத்துப் பரிமாற்றங்களையும் எதிர்பாத்து இப்போதைக்கு இத்துடன் நிறுத்திக் கொள்கிறோம்.

www.tamilarangam.net

தொடர்புகட்கு.....

**UYIRPPU**

# BM BOX 4002
# London
# WC1N 3XX

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்